# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 292 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 28, செவ்வாய்க்கிழமை 13.09.2016


## போராளிகளுக்கான சிறப்பு மருத்துவ ஆலோசனை தொடரும்

யாழ்ப்பாணம், செப். 13
வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற முன்னாள் போராளிகளுக்கான மருத்துவ ஆலோசனைகள் இந்த வாரமும் வவுனியா, மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.
இவ்வாறு அறிவித்தது வடக்கு மாகாண சுகாதார அமைச்சு.
இது தொடர்பில் அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வுக் காலத்தில் ஊசி ஏற்றியமை தொடர்பில் நல்லிணக்க கருத்து அறியும் அமர்வில் முன்னாள் போராளிகளால் குற்றச்சாட்டு >> 23ஆம் பக்கம்



## தமிழினத்தின் உரிமைகள் வேண்டி துர்க்கை அம்மனின் தேர் இழுப்பு

யாழ்ப்பாணம், செப். 13
எமது இனம் உரிமைகள் பெற்றிடவும், அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைத்திடவும் வேண்டி, துர்க்கை அம்மனை ஆராதித்து தேரை இழுக்குமாறு, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகத் தலைவா ஆறு. திருமுருகன் அடியவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.
வரலாற்றுச் சிறப்பு மிக்க >> 25ஆம் பக்கம்

### போராளிகளைப் பரிசோதிக்க

# பன்னாட்டு மருத்துவர்களை ஐ.நா. நியமிக்கவேண்டும்

*தமிழ் சட்டத்தரணிகள் மன்றம் வலியுறுத்து*

கொழும்பு, செப்ரெம்பர் 13
புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காக பன்னாட்டுத் தரத்திலான மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை ஐ. நா. நியமிக்கவேண்டும்.
இவ்வாறு வலியுறுத்துகிறது இலங்கை தமிழ் சட்டத்தரணிகள் மன்றம் .
தமிழ் சட்டத்தரணிகள் மன்றத்தால் ஐ. நாவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக் கப்பட்டது. அந்த மனுவிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் தாங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தவேளை ஏற்றப்பட்ட ஊசி காரணமாகத் தொடர்ந்தும் நோய்களால் அவதிப்படுவதாக முறைப்பாடு செய்துள்ளனர்.
இது குறித்து ஆராய பன்னாட்டுத் தரத்திலான நிபுணர்கள் >> 23ஆம் பக்கம்

## கட்டையடம்பன் றோ.க.த.க. கபடியில் தேசிய சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 13
பாடசாலைகளுக்கு இடையேயான தேசிய மட்ட கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார்- கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. இறுதியாட்டத்தில் கேகாலை சென். மேரிஸ் கல்லூரி அணியை வீழ்த்தியே அந்த அணி சம்பியனானது.
(விரிவு பக். 28)

## இரணைமடுக் குளத்தின் சீரமைப்பை சிறுபோகத்துக்கு முன் முடிக்கவேண்டும்

*விவசாயிகள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், செப்.13
இரணைமடுக் குளமானது 3 ஆயிரத்து 200 மீற்றர் நீளமுடையது. இதில் இதுவரை 750 மீற்றரே சீரமைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரிடம் விவசாயிகள் நேரில் காண்பித்தனர். எனவே அடுத்த ஆண்டு சிறுபோக நெற் செய்கைக்கு முன்னர் சீரமைப்புப் பணிகளை முடிவுறுத்த வேண்டுமென விவசாயிகள் கேட்டுக்கொண்டனர்.
வட மாகாண முதலமைச்சர் தலைமையிலான குழுவினர் நேற்று திங்கட்கிழமை இரணைமடு குளத்துக்கு நேரடியாகச் >> 25ஆம் பக்கம்

### கொக்கிளாய் விகாரையின் கட்டுமானத்தைத் தடுக்கிறார்கள் தமிழ் அரசியல்வாதிகள்

# பிக்கு குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 13
தமிழ் அரசியல்வாதிகள் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கொக்கிளாய் விகாரையின் கட்டுமானத்தைத் தடுத்து நிறுத்த முனைகின்றனர் என்று குற்றஞ்சாட்டுகிறார் விகாராதிபதி திஸ்ஸபுர ஞானரத்தின தேரர்.



தண்ணீரூற்று குமுளமுனைச் சந்தியில் அமைந்துள்ள புனித மத்தேயுவின் ஆலய வளாகத்தில் ஞாயிறன்று இடம்பெற்ற நல்லிணக்க நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். தேவாலய அருட்தந்தை டிக்சன் நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தார். நிகழ்வில் நல்லிணக்கச்செயற்பாடாகத் தேவையுள்ள 8 மாணவர்களுக்கு உந்துருளிகள் (சைக்கிள்) வழங்கப்பட்டன.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் ஓர் அமைச்சரால் முழங்காலில் இருக்குமாறு தண்டனை வழங்கப்பட்ட ஆசிரியை அதற்கு எதிராகமேற்கொண்ட சட்ட நடவடிக்கையின் ஊடாகப் பெற்றுக்கொண்ட இழப்பீட்டின் ஒருபகுதியிலிருந்து இந்த உந்துருளிகள் வழங்கப்பட்டன.
அங்கு >> 24ஆம் பக்கம்



## கர்நாடகாவில் தமிழருக்கு எதிரான வன்முறை வலுக்கிறது

பெங்களூர், செப்.13
காவிரியில் தமிழகத்துக்கு, கர்நாடகா நீர் திறந்துவிட்டதைக் கண்டித்து பெங்களூரில் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனங்களின் பஸ்கள், லொறிகள் உள்ளிட்ட வாகனங்கள் வீதியில் எரிக்கப்பட்டன.
நயன்தரஹள்ளி பகுதியில் தமிழகத்தைச் சேர்ந்த நிறுவனத்தின் ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 50 பஸ்கள் வன்முறைக் கும்பலால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 27 லொறிகளும் எரிக்கப்பட்டன.
இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து காவிரியில் தமிழகத்துக்கு கர்நாடகா நீர் திறந்து விட்டதைக் கண்டித்து கர்நாடகா தலைநகர் பெங்களூரில் நேற்று பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. தமிழக வாகனங்கள் , நிறுவனங்கள் மீது கன்னடர்கள் தாக்குதல் நடத்தினர்.
இதனால் அங்கு சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு, பதற்றம் ஏற்பட்டுள்ளது. 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. பாதுகாப்புக்காக பெங்க >> 25ஆம் பக்கம்

## வாழைப் பழ உற்பத்தி யாழ். குடாநாட்டில் படு வீழ்ச்சி

*வேறுமாவட்டங்களில் இருந்து இறக்குமதி செய்யும் நிலை*

யாழ்ப்பாணம், செப். 13
வாழைப் பழ உற்பத்திக்குப் பெயர் பெற்ற யாழ்ப்பாணத்துக்குத் தற்போது வேறு மாவட்டங்களில்



இருந்து வாழைப்பழம் இறக்குமதி செய்யப்படுகின்றது. அந்தளவுக்கு இங்கு வாழைப் பழ உற்பத்தி படுவீழ்ச்சி அடைந்துள்ளது. ஓகஸ்ட், செப்ரெம்பர் போன்ற வெம்மை மிகுந்த மாதங்களில் பழத்துக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது வழமைதான் என்றாலும் இதுபோன்றதொரு நிலை இதற்கு முன்னர் வந்ததில்லை என்று உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் தெரிவிக்கின்றனர்.
யாழ்ப்பாணத்தில் பிரபலமான கதலிப் பழத்துக்கே >> 24ஆம் பக்கம்



புதுப்புது உருவில பிரச்சினையைக் கொண்டு வந்துடு வாங்க பாருங்க...

## சிவநேசனும் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 13
வடக்கில் உள்ள பௌத்த விகாரைகள் அழிக்கப்படுகின்றன. அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்கிற நிலை தென்னிலங்கையில் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது.
இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க. சிவநேசன்.
வடக்கில் அத்துமீறி அமைக்கப்பட்டு வரும் புத்தர் சிலைகள் தொடர்பாக, அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையியேலேயே மேற்கண்டவாறு >> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்ட 7 லட்சம் ரூபாவை உரியவரிடம் சேர்த்த ஓட்டோ சாரதி



மலேசியாவில் இருந்து வந்த மத குரு ஒருவர் ஓட்டோவில் தவறவிட்ட 7 லட்சம் ரூபா பணத்தை ஓட்டோ சாரதி உரியவரிடம் திரும்பக் கொடுத்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

மலேசியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மத குரு விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் வேலை நிமித்தமாக ஓட்டோவில் சென்று மீண்டும் விடுதிக்குத் திரும்பினார். அவரது பணப்பையை அவர் ஓட்டோவிலிருந்து இறங்கும்போது எடுக்க மறந்துவிட்டார். அதில் மூன்று கடவுச் சீட்டுகள், பணக் கொடுக்கல் வாங்கல் அட்டைகள் அலைபேசி, இலங்கைப் பெறுமதியிலான 7லட்சம் ரூபா மலேசிய நாணயத்தாள்கள் என்பன இருந்தன என்று மதகுரு தெரிவித்தார். அந்தப் பணப் பையில் இருந்த அலைபேசி ஒலித்துள்ளது. அதற்குரியவர் அந்த அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியபோதே ஓட்டோவில் பை இருப்பதை சாரதி கண்டுள்ளார். பின்னர் உரியவரிடம் பை ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது.

ஓட்டோ சாரதிக்கு மதகுரு நன்றி தெரிவித்துப் பாராட்டினார். அத்துடன் ஓட்டோ சங்கத்தினரும் அவரைப் பாராட்டினர். (ற-4,106)

## ஓமந்தை கள்ளுத் தவறணை அடித்து நொறுக்கப்பட்டது



வவுனியா, ஓமந்தையில் பாடசாலை மற்றும் கோவில்களுக்கு முன்பாக இருந்த கள்ளுத்தவறணை நேற்று அடித்து நொறுக்கப் பட்டது.

வவுனியா, ஓமந்தை நவ்வி கிராமத்தில் நீண்டகாலமாக இருந்த கள்ளுத்தவறணையே இவ்வாறு நேற்று மாலை 5 மணியிளவில் அடித்து நொறுக்கப்பட்டது.

பனை, தென்னை கூட்டுறவு சங்கத்தின் கீழ் இயங்கும் இந்தக் கள்ளுத்தவறணையில் கடந்த 10 ஆண்டுகளாக வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தக் கிராமத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை மற்றும் முன்பள்ளி ஆகிய வற்றிற்கு முன்னால் 100 மீற்றருக்கும் அண்மை யிலும், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயத்துக்கு அண்மித்தும் இந்தக் கள்ளுத் தவறணை காணப்படுவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டது. இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுவ தாகவும், அதனை வேறு இடத்துக்கு மாற்றி அமைக்குமாறு பனை, தென்னை கூட்டுறவுச் சங்கத்திடம் மக்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அத்தோடு அண்மையில் ஓமந்தைப் பொலிஸாரினால் நடத்தப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின்போதும் மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தனர். இதன்போது அந்த தவறணையை விரைவில் அங்கிருந்து அகற்றித் தருவதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே குறித்த தவறணை நேற்று அடித்து நொறுக்கப்பட்டது. நேற்றையதினம் பொது விடுமுறை என்பதால் கள்ளுத் தவறணை முடியிருந்தது. இதன்போதுதான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. விடுமுறை நாள் என்ற காரணத்தினால் சேதவிவரங்கள் தெரியவரவில்லை. நேற்றிரவு பொலிஸார் பாதுகாப்புக் கட மையில் ஈடுபட்டுள்ளனர். இன்று அதிகாரிகள் வந்து பார் வையிட்டதும் மேலதிக தகவல்களைப் பெற முடியும் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-21)

# மாணவிகள் ஒருபோதுமே பழிவாங்கப்படமாட்டார்கள்

## பேராயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 13

உடுவில் மகளிர் கல்லூரியில் கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவிகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்று, தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா தெரிவித்தார்.

கல்லூரியில் நிலவிய குழப்ப நிலை முடிவுற்று நேற்றைய தினம் புதிய அதிபரிடம் பொறுப்புக்கள் அனைத்தையும் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டன. இன்று முதல் பாடசாலை வழமைபோல் இயங்கும் என நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேராயர் அறிவித்தார்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவிகளின் பெற்றோர்களில் ஒரு தொகுதியினர், பேராயரை நேற்றுச் சென்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதாக சந்திப்பில் கலந்து கொண்ட பெற்றோர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு, பேராயரை சந்திப்பதற்கு பெற்றோர் முயற்சித்தனர். இருப்பினும் அது கைகூடவில்லை. நேற்றுத் திங்கட்கிழமையே அவரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இதன் போது மாணவிகளின் கோரிக்கையை ஏற்று ஆகக் குறைந்தது இரண்டு வருடங்களாவது பழைய அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்குமாறு பெற்றோர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அது ஒரு போதும் சாத்தியமில்லை என்பதை பேராயர் குறிப்பிட்டுள்ளார். புதிய அதிபர் நியமனம் எவ்வாறு இடம்பெற்றது என்பதையும் விளக்கிக் கூறியுள்ளார். இதனால் பழைய அதிபருக்கு பதவி நீடிப்பு வழங்க இடமில்லை என்பதை தெளிவாகத் தெரிவித்துள்ளார்.

கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவிகள் புதிய நிர்வாகத்தினால் பழிவாங்கப்படக் கூடும் என்ற அச்சத்தை பெற்றோர் வெளியிட்டனர். அவ்வாறு எதுவும் இடம்பெறாது என்று பேராயர் உறுதியளித்துள்ளார். அத்துடன் மாணவிகள் மீது தாக்குதல் நடத்தியதாகச் சொல்லப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை வேறு பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவிகளுடன் பங்கேற்றமை தொடர்பில், சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜா தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) மாணவிகளின் பெற்றோர் சிலர் என்னை சந்தித்தனர். அவர்கள், பழைய அதிபரை இரண்டு வருடம் சேவை நீடிப்பு செய்யுங்கள் , பிள்ளைகளுக்கு பழி வாங்கல் இருக்க கூடாது. ஆசிரியர்கள் யாரேனும் தவறிழைத்தால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என என்னிடம் மூன்று கோரிக்கைகளை விடுத்தார்கள்.

அதன்போது நான் திடமாக சொன்னேன், புதிய அதிபர் நியமிக்கப்பட்டு விட்டார். அதனால் முதலாவது கோரிக் கையை ஏற்க முடியாது. மற்றைய இரண்டு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்போம் எனக் கூறினேன் அதற்கு அவர்கள் உடன் பட்டார்கள்.

அத்துடன் பாடசாலைக்கு பெற்றோரின் பங்களிப்பையும் உள்ளடக்கும் திட்டங்களை உருவாக்குவீர்களா? என கேட்டனர் அதற்கு எனதுமனப்பூர்வமானசம்மதத்தைத் தெரிவித்தேன். இவற்றை பெற்றோர் மறுப்பின்றி ஏற்றுக் கொண்டனர் ஆகையால் இன்றைய தினம் பாடசாலை மீளவும் , திறக்கப்படும் போது பிள்ளைகள் வந்து நல்லபடியாக படியுங்கள். உங்களை ஆசிரியர்கள் நல்வழிப்படுத்துவார்கள் என உறுதி வழங்குகின்றேன்.

புதிய அதிபர் நியமிக்கப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் காரணம் என குற்றம்சாட்டப்படுகின்றது. இந்த வருடத்தில் அந்தப் பாடசாலைப் பக்கம் தனது காலடியை எடுத்து வைக்காத அரசியல் வாதி அவர். அவ்வாறானவரைப்பற்றிப்பலரும் பலவிதமாக கதைத்து அவரின் பெய ரைக் களங்கப்படுத்துகின்றார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் ஏழு அரசியல்வாதிகள் பழைய அதிபருடன் தொடர்பு வைத்து பாடசாலைக்குள் சென்று உள்ளனர். ஆனால் பாடசாலைப் பக்கமே போகாத ஒரு அரசியல் வாதியை களங்கப்படுத்தி உள்ளனர்.

கல்லூரிப் பணத்தை தா என பேராயர் கேட்டார் எனவும், கோயில் கட்ட பணம் தா என கேட்டார் எனவும் , அதற்கு பணம் தர முடியாது என அதிபர் சொன்னதால், அதிபரை பதவி நீக்கினார் எனும் செய்தி நிரூபிக்கப் பட்டால் என்னுடைய பேராயர் பதவியைத் துறந்துவிடுவேன் - என்றார். (வ-5-33,37,101)



மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவுதினமான நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம், நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள பாரதியார் சிலை இளைஞர்களால் சிறப்பாக சுத்திகரிக்கப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டு சுட்டி விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு பிறந்ததினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அத்தோடு குறித்த இளைஞர்களால் வீதியால் சென்ற பலருக்கு பனம் நாற்றுகளும் வழங்கிவைக்கப் பட்டன. (21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரக நோய்பாதித்தோருக்கு புதிய வீடு அமைக்க மானியம்

சிறுநீரக நோயால் நீண்ட காலப் பாதிப்புக்குள்ளானவர்களில் வீட்டுத் தேவை உள்ள குடும்பங்களுக்கு புதிய வீடுகளை அமைக்கவும் திருத்த வேலைகளை மேற்கொள்ளவும் மானியம் வழங்குவதற்கான பதிவுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு யாழ். மாவட்டத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முகாமையாளர் எம்.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்துக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் பதிவுகள் இடம்பெற்று, இதுவரை 121 பேர் விண்ணப்பித்துள்ளனர். புதிதாக வீடுகள் அமைக்க 5 லட்சம் ரூபா மானியமும், வீடு அல்லது மலசல கூடத்தை தரமுயர்த்த 2 லட்சம் ரூபா மானியமும் வழங்கப்படும். இதுவரை நெடுந்தீவில் 9 பேரும் வேலணையில் 5 பேரும், ஊர் காவற்றுறையில் 6 பேரும், நல்லூரில் 10 பேரும், சண்டி லிப்பாயில் 5 பேரும், சங் கானையில் 7 பேரும், உடுவிலில் 9 பேரும், தெல்லிப்பழையில் 3 பேரும், கோப்பா யில் 18 பேரும், சாவகச்சேரியில் 9 பேரும், கரவெட்டியில் 22 பேரும்,பருத்தித்துறை யில் 5 பேரும், மருதங்கேணி யில் ஒரு வரும், காரைநகரில் 12 பேரும் என 121 பேர் விண்ணப்பித்துள்ளனர். புதிய வீடுகளை அமைக்க 47 பேரும் தரமுயர்த்துவதற்காக 69 பேரும் விண்ணப்பித்துள்ளனர். இதுவரை பதிவுகளுக்கு விண்ணப் பிக்காது இருப்போர் விண்ணப் பிக்க முடியும் - என்றார்.(ற-4,ரி3)

## மௌனம் சாதித்தால் விரைவில்

# தமிழீழம் உருவாகும்

### உதயன் கம்மன்பில எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, செப். 13

அரசின் அச்சுறுத்தல்களுக்குப் பயந்து இனிமேலும் நாம் மௌனம் சாதித்தால் தமிழீழம் உருவாக்கப்பட்டுவிடும். அதற்காகச் சம்பந்தனும், விக்னேஸ்வரனும் இராஜதந்திரப் போரில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

தூய ஹெல உறுமய கட்சியின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

பிரிவினைவாதிகள் தமிழீழ எதிர் பார்ப்பில் மிக விரைவில் வெற்றி கொள் வார்கள். அதற்கேற்றதாகவே இந்த அரசின் அச்சுறுத்தல் காணப்படுகிறது.

தமிழ் பிரிவினைவாதத்தை போரினால் தோல்வியடையச் செய்ததன் பின்னர், இன்று திருட்டுத்தனமாக உலகம் முழுவதும் சென்று இராஜதந்திர ரீதியில் முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். அதற்காக சம்பந்தனும், விக்னேஸ்வரனும் இராஜதந்திரப் போரில் ஈடுபட்டுள்ளனர்.

இராஜதந்திர ரீதியில் தமிழீழமொன்றை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்கின்றனர். அரச அனுசரணையாக அமைச்சுப் பதவிகளும் இவர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்றார் உதய கம்மன்பில. (வ-4)

## தூக்கிலிட வேண்டியோர் ஆயிரத்தையும் தாண்டியது

### சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கூறுகிறார்

குற்றங்களுக்காகச் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரம் பேரையும் தாண்டியுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

படுகொலைகள், போதைப் பொருள் குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாக அடையாளம் கண்டவர்களுக்கே இவ்வாறு சாவுத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. தூக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆயிரத்து 17 பேர் சிறைச்சாலைகளில் உள்ளனர். அவர்களை அவர்களது உறவினர்கள் வாரத்துக்கு ஒரு முறை பார்வையிட முடியும். இத்தகைய கைதிகளுக்கு சிறைச்சாலைக்குள்ளேயே உணவு வழங்கப்படும் என்றார் சிறைச்சாலைகள் ஆணையாளர். இதேவேளை, 1977ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது. (வ-4)

PIONEER CIMA Lecturer



S.Mayoorran
is back
Study CIMA with the best panel of lecturers

- MAF - S.Mayoorran
- FAF - S.Ithayachchandran
- ECN - S.Mayoorran / S.Ithayachchandran
- BLW - A leading lawyer

New Batches ( 2017 Syllabus)
Weekday batch - 14.09.2016
Weekend batch - 02.10.2016
Call 021 722 3444 For Details
MayZone
No.61, 3rd Floor, Palaly Road, Jaffna.
(Near Iluppaiyadi Junction)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 549
சீட்டிழுப்பு திகதி 2016.09.12
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
05 38 49 70 B
சுப்பர் ஜக்பொட்
ரூ. 49,942,060/=
வெல்லப்படவில்லை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1296
சீட்டிழுப்பு திகதி 2016.09.12
வெற்றி இலக்கங்கள்
22 24 49 50 O
ரூ. 24,221,280/=

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 27
சீட்டிழுப்பு திகதி 2016.09.12
வெற்றி இலக்கங்கள்
15 34 41
41
7,739,380/=

வேலையாள்கள் தேவை
கோண்டாவிலில் அமைந்துள்ள ஸ்ரூடியோ ஒன்றுக்கு
- Vedio Editing
- Photo Designer
உடனடியாகத் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 960 3249



2020 வருடத்தில்
தகவல் தொழில்நுட்பவியலாளர்கள்
200,000 நபர்கள்
தேவைப்படுவர்
உயர் தரத்தை முடித்த மாணவர்களுக்காக விசேடமான
இரட்டை டிப்ளோமா
IT + ENGLISH
உங்கள் எதிர்காலத்திற்கான அத்தியவசியமான திறன்
Assured By PEARSON
நீங்கள்
அதில் ஒருவராவதற்கு
தயாரா ?
DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology
Diploma in English
DiE
20% வரை 50% வரை கழிவு
2 சான்றிதழ்கள்
ESOFT + PEARSON (UK)
NEW BATCHES
14. SEP. 2016
@ 9:00am
ESOFT Branded T-Shirt
FREE
8GB Pendrive
பதிவுகளை
உறுதிப்படுத்த 077309 9 308 எனும் இலக்கத்திற்கு
<பெயர்> <முகவரி> <NIC>
இனை SMS செய்யுங்கள்
Microsoft IT Academy
ESOFT METRO CAMPUS
No.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142
Shaping Lives, Creating Futures
www.esoft.lk
The Sri Lanka's Largest Higher Education Network

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

பத்துப் பிள்ளைகளின் தந்தை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குடும்ப சுமை தாங்க முடியாது வறுமை காரணமாக அவர் இந்த முடிவை எடுத்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் நாகநாதன் வீதியில் இடம்பெற்றது. சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் நேற்றுமுன்தினம் இரவு ஒப்படைக்கப்பட்டது.
விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந-4,9)

**வேலையாள்கள் தேவை**

எமது நிறுவனத்துக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள்கள், தச்சுத் தொழிலாளி, Welder மற்றும் Sub Contrators உடனடியாக யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்குத் தேவை.

**076 979 2771 - EIM**
கோப்பாய் மத்தி, கோப்பாய்.



மு/புதுக்குடியிருப்பு
ஸ்ரீ உலகளந்த
விநாயகனுக்கு வேட்டைத்திருவிழா

காலம்: 13.09.2016

விசேடமாக கதிர்காமத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட பட்டத்து யானையில் வேட்டை முடிந்த பின்பு பெருமான் புதுக்குடியிருப்பு சிவன் ஆலயத்தில் இருந்து பவனிவரவுள்ளார். அத்தருணம் அடியார்கள் இந்த பாத யாத்திரையில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

திருவிழா உபயகாரர்: வேட்டைத்திருவிழா
மு/புதுக்குடியிருப்பு
(சீ.26160)(13.17)

**கிருஸ்ணா அடகுசேவை**
பதிவு இல J/ DS / BR / 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் **2016 ஆம் ஆண்டு 15.03.2016** இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி **(15.10.2016)** இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் **15.10.2016**ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்:- A.S.Surendran

| | |
|---|---|
| இல.370, | இல.09 |
| கே.கே.எஸ்.வீதி, | கன்னாதிட்டி வீதி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| 021 490 0311 | 021 222 5046 |

சுகாதார துறையில் இணைந்து கொள்வதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் உலக அங்கீகாரம் பெற்ற தொழில்சார் பயிற்சி பாடநெறிகள்



Study in Australia
Apply with G.C.E.(O/L).
Course fee starts from
8000 AUD$
Pathway to be a Qualified
Nurse at
JTI
Job Training Institute
யாழ்ப்பாணத்தில்
Sep 14th
Tilko
City Hotel
கல்லூரி பிரதிநிதிகளைச் சந்திக்கும் வாய்ப்பு யாழ்ப்பாணத்தில்
Meet JTI Marketing Manager
MS.Anne Theodore
9.00am to 3.00pm
Sep 16th Colombo The Kingsbury Hotel
Sep 16th-17th Ethics Office Negombo
அனுமதி இலவசம்
ETHICS INTERNATIONAL
No. 25, 2nd Floor, Keells Super Building, Colombo Road, Negombo
Hot Line 0773 849399
Jaffna - 077 250 3598

# ஒரு பிரதேச செயலர் பிரிவில் இரு மதுபான நிலையங்கள்

## மேலதிக அனுமதிகள் வழங்கப்படக் கூடாது என வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் வலியுறுத்து

ஒரு பிரதேச செயலர் பிரிவில் இரண்டுக்கு மேல் மதுபான நிலையங்கள் இருக்கக்கூடாது. ஒரு மாவட்டத்தில் குறைந்தது இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளில் மது பாவனையை, புகைத்தல் பாவனையை முற்றாகத் தடை செய்ய வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் தெரிவித்தது.

இதுகுறித்து தெரிவிக்கப்பட்டதாவது:
மது பாவனையை இந்த நாட்டில் இருந்து ஒழிப்பதற்கு முன்பு பதவியில் இருந்த ஜனாதிபதிகள் முன்வராத கால கட்டத்தில் மது பாவனையை மற்றும் புகைத்தல் பாவனையை இந்த நாட்டில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு தற்போதைய ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கடந்த 1972 தொடக்கம் மது ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அதில் ஓர் அம்சமாக மதுபாவனையைக் குறைப்பதற்கான 14 ஆலோசனைகளை முன்வைத்து ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம்.

மது விற்பனை நிலையங்களை மாலை 6 மணியுடன் மூட வேண்டும். ஒரு கிலோ மீற்றருக்குள் ஆலயங்கள், பாடசாலைகள், அரச நிறுவனங்கள் இருப்பின் மது பானசாலை அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்ய வேண்டும். ஒரு பிரதேச செயலர் பிரிவில் இரண்டுக்கு மேல் மதுபான நிலையங்கள் இருக்கக் கூடாது. ஒரு மாவட்டத்தில் குறைந்தது இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளில் முற்றாக மது பாவனையை, புகைத்தல் பாவனையை தடை செய்ய வேண்டும். இந்தச் செயற்பாடு காலப்போக்கில் அதிகரிக்கப்பட வேண்டும். புகையிலைச் செய்கையை முன்னறிவித்தல் வழங்கி முற்றாகத் தடை செய்ய வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் ஒரு தனி மனிதன் குடி வகைகளைக் கொண்டு செல்லக் கூடாது. குடிப்பதாயின் தனி மனிதன் அனுமதிப் பத்திரம் முன்கூட்டியே பெற்றுக் கொள்ள வேண்டும். சினிமாப் பாடல்கள் மற்றும் சின்னத்திரைகளில் குடிவகைகள் மற்றும் புகைத்தல் காட்சிகளைத் தடைசெய்ய வேண்டும். பாடசாலை மாணவன் மது மற்றும் புகைப்பொருள் பாவித்ததைக் கண்டு பிடித்தால் முதலில் பெற்றோருக்கு காவல் துறை எச்சரிக்கை செய்ய வேண்டும். தொடர்ந்து மாண வன் இந்தச் செயலில் ஈடுபட்டால் மாணவனுக்கும் பெற்றோருக்கும் தண்டனை வழங்க வேண்டும்.


உள்ளூர் உற்பத்தியான கள்ளை பத நீராக மாற்றி வெல்ல உற்பத்தியில் ஈடுபட வைக்க வேண்டும். சுற்றுலாவை பொறுத்தமட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு சலுகை வழங்க வேண்டும். காரணம் இந்த நாட்டில் மது பாவனையை முற்றாக ஒழித்தால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும். அதனால் தேசிய வருமானத்தில் பாதிப்பு ஏற்படும். மது மற்றும் புகைப் பாவனையால் வரும் நோயாளிகளுக்கு அரச வைத்தியசாலைகளில் கட்டணம் அறவிட வேண்டும். அரச ஊழியர்கள் மது மற்றும் புகைப் பாவனையில் ஈடுபட்டால் வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டும். மது மற்றும் புகைப் பாவனை உள்ளவர்களுக்கு அரச உதவிகள் வழங்கக் கூடாது. மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்தின் உரிமையாளர் இறந்தால் மற்றவர்களுக்கு மாற்றக் கூடாது ஆகிய கோரிக்கைகளை அந்தக் கடிதத்தில் முன்வைத்துள்ளோம் - என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-4,ரி)

# நிலத்தடி நீரை மிகவும் அவதானமாக குறைந்த அளவில் உபயோகியுங்கள்

## வடக்கு விவசாயிகளிடம் முதலமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13



நிலத்தடி நீரை பயன்படுத்தும் போது மிக அவதானமாகக் குறைந்த அளவு நீர்ப் பாவனையுடன் கூடிய அறுவடையை பெறக்கூடிய விதத்தில் விவசாய நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். நீர்த் தூறல் அமைப்பு மற்றும் சொட்டுநீர் விவசாய முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் மீண்டும் எம்மக்கள் சுத்தமான நீரைத் தமது கிணறுகளில் இருந்து பெற நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று விவசாயிகளிடம் ஓர் அன்பான வேண்டுகோள் விடுக்கிறேன்.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். விவசாயக் கிணறுகள் புனரமைப்பின் முதலாம் கட்ட விளக்கமளிப்பு நிகழ்ச்சி யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நெற்பயிர்ச் செய்கைக்கு எங்கள் மக்கள் முதல் முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். வடபகுதி மரக்கறி உற்பத்திகளுக்கும் பழ உற்பத்திகளுக்கும் நாடளாவிய ரீதியில் நல்ல வரவேற்பு உண்டு. வடபகுதி முருங்கைக்காய், வெங்காயம், பாகல், பயற்றங்காய், மட்டு வில் கத்தரி போன்ற மரக்கறிகளும் எமது வாழைப்பழங்கள் மற்றும் கறுத்தக் கொழும்பான் போன்ற பழ வகைகளும் இப்பகுதி மக்களால் மட்டுமல்ல தென் பகுதியில் இருந்து இங்கு சுற்றுலா வருகின்ற சிங்கள மக்களாலும் அவற்றின் சுவை அறிந்து இங்குள்ள சந்தைகளில் அவை பெருமளவாக வாங்கிச் செல்லப்படுவதை அவதானிக்கலாம்.

யாழ்.மாவட்டத்திலும், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலும் நீர்ப்பாசன குளங்கள் அருமை. இந்தப் பகுதி மக்கள் தோட்டக் கிணறுகளின் மூலமாகவே விவாசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். சிறிய மற்றும் நடுத்தர விவசாய செய்கைகளில் ஈடுபடுகின்ற போதிலும் இவர்களின் விவசாய பொருள்களுக்கு நல்ல சந்தைப் பெறுமதிகள் உண்டு. இவர்கள் நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் அண்மைக்காலமாக நிலத்தடி நீர் மாசு தொடர்பான விடயம் பூதாகரமாகக் கிளம்பி இந்தப் பகுதி மக்களை குழப்பத்துக்கு ஆளாக்கியுள்ளது.

அண்மையில் நீர் மாசடைவது பற்றிய ஆராய்ச்சியின் போது அளவுக்கதிகமாக பசளை, கிருமிநாசினி போன்றவற்றின் நச்சு இரசாயனக் கலவைகள் நீருடன் கலந்திருப்பது காணப்பட்டது.

இங்குள்ள விவசாயக் கிணறுகளில் பல போரால் அழிவடைந்து அதன் மேற்கட்டு பகுதிகள், கிணற்றின் ஏனைய பாகங்கள் சிதைவடைந்த நிலையில் முழுப்பயனையும் பெறமுடியவில்லை. மாரி காலங்களில் இவற்றைச் சுற்றியுள்ள நிலங்களினூடாகப் பாய்கின்ற மழைநீர் அந்த நிலங்களில் காணப்படும் உரக்கலவைகளையும் அள்ளிக் கொண்டு சென்று இவ்வாறான கிணறுகளில் சேர்ப்பதால் அதன் மூலமாகவும் நிலத்தடி நீர் மாசுக்கள் நிரம்பியதாக மாற்றப்படுகின்றது.

வடமாகாண சபை ஆட்சிப் பொறுப்பேற்ற 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களில் பீட்டா பவர், ஜூலி பவர் நிறுவனங்களின் ஊடாக வருடாந்தம் 20 மில்லியன் என்ற கணக்கில் 20 வருடங்களுக்கு இந்த நிதி உதவியை எமக்கு வழங்குவதற்குக் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்கள் முன்வந்திருக்கின்றன. காற்றாலை மின் உற்பத்தி நிலையமே நாம் முதன் முதலில் தொடங்கிய பொருளாதார மேம்பாட்டுக் கைங்கரியம்.

அவர்களால் முதல் வருடத்தில் தரப்பட்ட நிதி உதவி வறட்சிக் காலத்தில் நீர் விநியோகிக்கும் நடமாடும் நீர்க் காவிகளான பவுசர்கள் வாங்க உதவின. அவற்றால் பலர் பயனடைந்தார்கள். தற்பொழுது அடுத்த வருட நிதியுதவியைப் பயன்படுத்தத் தயாராகியுள்ளோம் -என்றார்.

(ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் முதன்முறையாக வரம்பு கட்ட இயந்திரம் உபயோகம்

தென்மராட்சி, செப்.13
தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை வயல்களுக்கு வரம்பு கட்டும் இயந்திரம் முதல் தடவையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையையடுத்து காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மறவன்புலவைச் சேர்ந்த நெற்செய்கையாளர் ஒருவர் வரம்பு கட்டும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்து அந்தப் பகுதியில் உள்ள வயல்களில் வரம்பு கட்டும் பணிகளை மேற்கொண்டுள்ளார்.
காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்டப் பணிகளில் வரம்பு கட்டுதலும் ஒன்றாகும். அனைத்து வயல்களிலும் வரம்பு கட்டும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால் கூலியும் அதிகரித்துக் காணப்படுகிறது. வரம்பு கட்டும் இயந்திரம் குறைந்த நேரத்தில் கூடுதல் பணிகளை மேற்கொள்வதால் இயந்திரத்தின் மூலம் வரம்புகள் கட்டுவதில் நெற்செய்கையாளர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மனிதவலு மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நெற்செய்கையில் தற்போது அனைத்துப் பணிகளும் இயந்திரமயமாகி வருகின்றன.
முன்னைய காலத்தில் நெற்செய்கைப் பணிகள் அனைத்தும் மாடுகளாலும் மனித வலு மூலமும் மேற்கொள்ளப்பட்டுவந்தன. இயந்திர மூலமான பணிகள் முதலில் நெல் குற்றும் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு பின்னர் உழவு இயந்திரங்கள் மூலமும் சில வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. வயல்கள் உழவு வேலை, சூடு மிதிக்க, அறுவடை செய்யப்பட்ட நெல் மற்றும் வைக்கோல் போன்றவற்றை ஏற்றிச் செல்லவும் உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.
அண்மைக் காலமாக நெல் அறுவடை இயந்திரம் பிரதேசத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு தற்போது வரம்பு கட்டும் இயந்திரமும் காலபோக நெற்செய்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.
எதிர்காலத்தில் காலபோக நெற்செய்கைப் பணிகளை இயந்திரங்கள் மேற்கொண்டால் செய்கையாளர்கள் அறுவடை நெல்லை அரிசியாக்கி உட்கொள்ளும் பணி மட்டுமே ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# பருத்தித்துறையில் சிறுமியை ஏமாற்றி இளைஞர் துர்நடத்தை

## பொலிஸார் விசாரணை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், செப். 13
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஒரு வாரமாக பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறப்படும் சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பெற்றோருடன் வசிக்கும் பதின்ம வயதுச் சிறுமியை அயல்பிரதேசத்தில் உள்ள ஓர் இளைஞன் ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தியுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இது தெரியவரவே பெற்றோர் சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்தனர். சிறுமியின் வாக்குமூலத்தின்படி குற்றத்தினைப் புரிந்தவர் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர் அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-4,101)

# கூட்டத்தில் தகாது பேசியதால் குடும்பப் பெண் தீ மூட்டினார்

## கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மீது பெண்ணின் கணவர் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப். 13
முல்லைத்தீவு, துணுக்காயில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கிராம அலுவலரும், சமுர்த்தி உத்தியோகத்தர்களும் குடும்பப் பெண் ஒருவரைப் பெயர் குறித்து தகாத நடத்தை கொண்டவர் என்று தெரிவித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் அந்தப் பெண் தவறான முடிவு எடுத்துள்ளார் என்றும் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
அதிகாரிகள் அவ்வாறு கூறியதால் அந்தப் பெண் மனமுடைந்து காணப்பட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து தவறான முடிவு எடுத்து அண்மையில் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பெண்ணை, அவரது கணவர் காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்த்தார்.
குறித்த விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவரால் எனக்கு நேரடியாக வாய் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. கிராம அலுவலரை அழைத்து உரையாட இருந்த வேளையில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது பற்றி விசாரணை இடம்பெறுகிறது. இந்த விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
(ற-4,101)

# மாணவர்கள் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.13
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் நடத்தும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. நிகழ்வில் கருத்தரங்கு வினாப்பத்திரங்களை தயார் செய்த ஆசிரியர்கள், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அனுசரனையாளர்கள் கலந்து கொள்வர்.
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களால் வருடந்தோறும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த 14 மாவட்டங்களில் வழிகாட்டற் கருத்தரங்கு நடத்தப்படுகின்றது.
நாளை ஆரம்பமாகவுள்ள இந்த வருடத்துக்கான கருத்தரங்குத் தொடர் 14 மாவட்டங்களிலுள்ள 114 நிலையங்களில் நடைபெறவுள்ளது. 329 பாடசாலைகளில் கல்வி பயிலும் சுமார் 11 ஆயிரத்து 68 மாணவர்கள் கலந்துகொள்வர். (ற)

# மின்தடை அறிவித்தல்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப் படும் இடங்களில் மின் விநியோ கம் தடைப்பட்டிருக்கும் என வட மாகாண மின் வழங்கல் கட்டுப் பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் அச்செழு பிரதேசம், பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், மருதங்கேணி, உடுத்துறை,வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கோயில், கறுக்காய் பிரதேசம், வாழைத் தோட்டம் ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
கிளிநொச்சியில் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு ஆகிய இடங்களில் மின் தடைப்படும்.
வவுனியாவில் தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட் செட்வீதி, குருமன்காடு சந்தியிலிருந்து குருமன்காடு பிள்ளையார் கோயில் வரை, மடுக்கந்தவிலிருந்து குடாக்கச்சக் கொடி வரை, T.M.M. அரைக்கும்ஆலைஆகியஇடங்களில்மின்தடைப்படும்.
மன்னாரில் முதலைக்குத்தியில் மின் விநியோகம் தடைப்படும் . (ற-ரி)

# யாழ்ப்பாணம் கம்பன் விழா நாளை மறுதினம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13
அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழா நாளை மறுதினம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்து தொடாந்து நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்திலும் மாலை 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்திலும் காலை, மாலை என இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது.
முதல் நாள் நிகழ்வு மாலை 4.30 மணிக்கு கொழும்பு கம்பன்கழக பெருந்தலைவர் ஜெ. விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் நூல் வெளியீடுகளும் கம்ப வாரிதி இ.ஜெயராஜ் தலைமையிலான இலக்கிய ஆணைக்குழுவில் அன்பின் உச்சமென அறிஞர் பெரிதும் உவப்பது எனும் பொருளில் காதல், நட்பு, பாசம் ஆகிய மூன்றையும் உணர்த்தும் வகையில் உரையாடலும் நடைபெறவுள்ளன.
16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வின் காலை அமர்வானது பேராசிரியர் மா.சின்னதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.
அதில் பேராசிரியர் இரா.ருக்மணியின் நதிக்கரை நாணல்கள் எனும் பொருளில் இலக்கிய பேருரையும், புலவர் இரா.சண்முகவடிவேல் தலைமையில் இராம காதைக்கு ஏற்றம் தரும் இணையற்ற துணைப்பாத்திரங்கள் எனும் தலைப்பில் சுழலும் சொற்போரும் நடைபெறும்.
யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் மாலை நிகழ்வில் பேராசிரியர் இரா.ருக்மணி தலைமையில் கிஷ்கிந்தையின் பேராளுமை எனும் பெருமைக்கு பெரிதும் பொருந்துபவர் வாலியே, தாரையே, அனுமனே எனும் தலைப்பில் பட்டி மண்டபமும் நடைபெறும். மூன்றாம் நாள் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை நிகழ்வு யாழ். மாநகர சபை ஆணையாளர் தலைமையிலும் மாலை நிகழ்வு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தலைமையிலும் நடைபெறவுள்ளன.
காலை நிகழ்வில் தவம் செய்த தையல் எனும் பொருளில் பேராசிரியர் அரங்க. இராமலிங்கத்தின் தனியுரையும், ஆ எங்கள் கம்பனது அற்புதமாய் விருத்தம் போல் பூ வடிவம் பலவெடுத்து படும் பாட்டை உரைக்கின்றோம் என்னும் பொருளில் கவிஞர் சி.சிவகுமார் தலைமையில் கவி அரங்கும், மாலை நிகழ்வில் கற்போர்க்குக் கம்பன் கவிதை, இன்று சந்திக்கும் இவர்கள் எனும் பொருளில் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் உரை அரங்கும் நடைபெறவுள்ளது.
க்ம்பன் விழாவின் நான்காம் நாள் இறுதி நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காலை நிகழ்வு யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தலைமையிலும், மாலை நிகழ்வு கொழும்பு கம்பன்கழக தலைவர் தெ.ஈஸ்வரன் தலைமையிலும் நடைபெறும்.
இறுதி நாள் காலை நிகழ்வில் கம்பன் கடலில் சங்க முத்துக்கள் எனும் பொருளில் தமிழ்நாடு பேராசிரியர் அரங்க.இராமலிங்கம் தலைமயில் ஆய்வரங்கும், மாலை நிகழ்வில் [illegible] கும்பகர்ணன் எனும் [illegible] வழக்காடு மன்றமும் நடைபெறவுள்ளன. (ற-ரி)

தவறிவிட்டது
பிள்ளையார் கோயிலடி பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த றமேஸ்காந்தன் கோகுலன் என்பவரின் தேசிய அ.அட்டை 961321093V மற்றும் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள், கொமர்ஷல் வங்கி ATM காட் என்பன அடங்கிய பேர்ஸ் அச்சுவேலி நகரப்பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 368 8437

வேலையாள்கள் தேவை
பிள்ளையார் மில்,
202, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள மில்லுக்கு அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
076 702 2621, 021 222 5592

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,
**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**
- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 18.09.2016 (ஞாயிறு)
கிழமைநாள் பிரிவுகள்: 19.09.2016 (திங்கள்)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு ப.நோ.கூ.சங்கங்கள் மாற வேண்டும்

## யாழ்.மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.13

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய சூழ்நிலையில் காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு தமது நடவடிக்கைகளை மாற்றவேண்டும். அநேக மான சங்கங்கள் போதிய வருமானம் இன்றி பணி யாளர்களுக்கு மாதச் சம்பளத்தைக் கொடுக்க முடி யாத நிலையில் காணப்படுகின்றன. இந்த நில மையை மாற்ற வியாபார உத்திகளை தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்திய பன் னாட்டு கூட்டுறவாளர் தின நிகழ்வு கடந்த சனிக் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சங்க நிர்வாகங்கள், பணியாளர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவுத் துறையை வளர்க்க முன்வர வேண்டும். பணியாளர்கள், அங்கத்தவர் களின் பிள்ளைகள் பாராட்டப்பட்ட சம்பவங்களை யிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்தச் சங்கங் களின் செயற்பாடுகள், அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்றார்.

அங்கு உரையாற்றிய வடமாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்ததாவது:


பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் முன்னெடுக்கப்பட்ட பணியாளர்கள், அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிப்பு பாராட்டப்பட வேண்டியது. தற்போதைய காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு சங்கங்கள் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் அபி விருத்திச் செயற்பாடுகள் போன்றவை மிகவும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

இப்படிப்பட்ட சேவைகளை இந்தச் சமாசம் மேற் கொள்வதால் பணியாளர்கள், அங்கத்தவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள். சங்கங்களின் செயற்பாடுகளுக்கு அபிவிருத்திக் கூட்டுறவு அமைச்சு எப்போதும் உதவும் .

சங்கப் பணியாளர்கள்,அங்கத்தவர்கள் யாவரும் ஒன்றிணைந்து சங்கங்களின் அபிவிருத்திக்கு உதவ முன்வரவேண்டும். இவ்வாறு சகலரும் ஒன்றிணைவதன் மூலமே சங்க நடவடிக்கைகள் யாவும் முன்னோக்கிச் செல்லும் –என்றார்.

நிகழ்வில் சங்கப்பணியாளர் அங்கத்தவர்களின் பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர் கல்வியில் சித்தி பெற்றமைக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். பணியாளர், சிறந்த சங்கங் கள் என்பனவும் மதிப்பளிக்கப்பட்டன.

(ற-4,17)



கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையத்துக்கு அருகே நேற்றுமுன் தினமிரவு 7.30 மணியளவில் பஸ் மோதியதில் மாடு உயிரிழந்தது. முல்லைத்தீவிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸே மாட்டுடன் மோதியது. (ற-4)

## சூரியகல மின் விளக்கைப் பாதுகாக்கக் கோரிக்கை

மின்சார வயர் செல்ல முடியாத, மின் ஒளி கிடைக்காத பிரதேசங்களின் பாதுகாப்புக் கருதி சூரிய கல மின் விளக்குகளைப் பல இடங்களிலும் பொருத்தியுள்ளோம். பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுத்திப் பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய்ப் பிரதேச சபைச் செயலாளர் கே.சற்குணராஜா கேட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வலி.தென்மே ற்கில் முக்கிய மயானங்கள் மற்றும் பொதுஇடங்களில் சூரியமின் கல மின் விளக்குகள் மூலம் ஒளியேற்றப்பட்டுள்ளது. பிரதேசங்களில் பொருத்தப்பட்ட உபகரணங்களை அனைத்து மக்களும் விழிப்புணர் வுடன் பாதுகாக்க முன்வர வேண்டும்.

அத்துடன் வீதி விளக்குப் பொருத்திய இடங்களையும் விழிப்புணர்வுடன் பாதுகாக்க முன்வர வேண்டும் – என்றார். (ற-50)

கண்ணீர் அஞ்சலி

மன்ற உறுப்பினர் நா.நந்தபாலனின் (உரிமையாளர் சஞ்சீகா ஜீவலறி - சாவகச்சேரி) பாசமிகு தந்தை

முத்தையா நாகராசா

அவர்கள் 11.09.2016 அன்று காலமானார். அவரின் மறைவி னால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம். (சி/26161) (11.18)

அந்தியேட்டி அழைப்பு



அமரர்

செல்வராசா சிதம்பரநாதன்

(ஓய்வுநிலை அதிபர் - யா/ கலட்டி R.C.T.M.S)

தோற்றம் 26★03★1946 — மறைவு 16★08★2016

கடந்த 16.08.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் செல்வராசா சிதம்பரநாதன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (15.09.2016) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தும்பளை முத்துமாரி அம்மன் கிரியா மண்டபத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அடுத்தநாள் 16.09.2016 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

அம்புலி ஒடை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(N/31)(13.18)

## உர மானியத்துக்கான பதிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13

சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட வகையில் நெற்செய்கை விவசாயிகளுக்கு அவர்களது நெற்பரப்பு விகிதத்துக்கு ஏற்ப 2016 முதல் உரமானியப் பணம் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட நவாலி வடக்கு விவசாயிகளின் (நெற் செய்கையாளர்கள்) விவ ரங்கள் பெறப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை மானிப்பாய் மேற்கு, சுதுமலை கிராமத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கும் மறுநாள் 14ஆம்திகதி புதன்கிழமை மானிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய் மேற்கு, மத்தியும், நாளை மறுதினம் 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாகியப்பிட்டி பிரான்பற்று விவசாயிகளுக்கும் பதிவுகள் இடம்பெறும்.

பண உரமானியத்துக்கான பதிவை விவசாயிகள் தவறவிடாது வங்கிப்புத்தகத் தின் போட்டோப் பிரதி 4, அடையாள அட்டையின் போட்டோ பிரதி 4, உறுதிகளின் போட்டோ பிரதி , பாஸ்போட் படம் 1, சம்மேளனங்களால் வழங்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து காலை 8.30 மணிக்கு சண்டிலிப்பாய் கம நல கேந்திர நிலையங்களுக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை அன்று வங்கிகளின் நடமாடும் சேவையூடாக வங்கி கணக்கில் லாத விவசாயிகளுக்கு இலவசமாக பதிவுகள் இடம்பெறும். சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் கே.கோகுலன் இதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

## காணி தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 13

காணிகள் தொடர்பான பிரச்சினை களுக்கான தீர்வு தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட பிரதேச செயலாளர்கள் காணி உத்தியோகத்தர்களுக்கான கலந் துரையாடல் சட்ட உதவி ஆலோ சனை நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது.

வடக்கு மாகாணத்தில் காணிகள் தொடர்பில் அதிக பிரச்சினைகள் ஏற்படுவதால் அவற்றுக்கான வழி முறைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில் யாழ்.நகர விடுதி ஒன்றில் கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் சட்ட உதவி நிலையத்தினர், வன வளத் திணைக்களத்தின் உத விச்செயலாளர், வடமாகாண காணி ஆணையாளர், வடக்கின் 34 பிர தேச செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் கலந்து கொண்ட பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள் வடக்கில் அதிகமான இடங்களில் காணி தொடர்பாக எழும் பிரச்சினையாக நீண்ட காலமாக வசிக்கின்ற பிரதேசத்தை விடுவிப்பதற்கு அல் லது பிரதேச செயலகம் அனும தித்தும் அதற்கு தடையாக வன வளத் திணைக்களம் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

பல மக்களின் உறுதிக் காணி களில் இருந்தும் மக்கள் 1985ஆம் ஆண்டளவில் இடம் பெயர்ந்து தற்போது திரும்பும் நிலையில் அங்கே மரங்கள் வளர்த்திருப்பதால் குறித்த திணைக்களம் அந்தப் பகுதி களையும் உரிமை கோருகின் றது. குறித்த நில உரிமையாளர் களிற்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலமாகவும், போரின் முன்பும் மக்கள் வசித்த இடங் கள் தொடர்பில் நேரில் பார்வை யிட்டு உறுதிசெய்து அவை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறும் . அதன் பிற்பாடும் அனுமதி இன்றி அடாத்தாகப் பிடித்த நிலங்கள் விடுவிக்கபட மாட்டாது என்று அங்கு பிரசன்ன மாகி யிருந்த வன வள திணைக் கள அதிகாரி தெரிவித்தார். (ற-10)

## மாவீரர் துயிலுமில்லங்கள் பாதுகாக்கப்படவேண்டும்

### சாந்தி எம். பி. கோரிக்கை

ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல் லங்களிலும் நாங்கள் எங்கள் பிள்ளைகளை புதைக்கவில்லை விதைத்து விட்டு சென்றோம். அந்த மாவீரர் துயிலும் இல்லங் களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிவரும் நிலையில் அவை புனித இடங்களாக மாற் றப்பட்டு தொடர்ச்சியாகப் பேணப் படவேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா வேண்டுகோள் விடுத்தார்.

இராணுவத்தினரால் விடுவிக்கப் பட்டுள்ள வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் தொடர் பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த வேண்டு கோளை முன்வைத்தார்.

'முல்லைத்தீவில் வன்னிவிளாங் குளம் மாவீர் துயிலும் இல்லம் விடுவிக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஏனைய இடங்களி லுள்ள மாவீர் துயிலும் இல்லங் களிலிருந்தும் இராணுவம் வெளி யேற வேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லமாக இருந்த காணி கடந்த 2009ஆம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் கல்ல றைகள் இடித்து தரைமட்டமாக் கப்பட்டு, அங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு இராணுவத்தி னர் நிலைகொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மக்கள் தொடர்ச் சியாக பல்வேறு சந்தர்ப்பங்களி லும் துயிலுமில்ல காணியிலி ருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனவும், தாம் மாவீரர் களான தமது பிள்ளைகளை வழிபட அனுமதியளிக்கப்பட வேண் டும் எனவும் கோரியிருந்தனர் – என்றார் நாடாளுமன்ற உறுப்பி னர் சாந்தி சிறிஸ்கந்தராசா.

(வ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பின்றி யாழ். குடாநாட்டில் 34,000 இளையோர்

## யாழ்.மாவட்ட செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். குடாநாட்டில் படித்த இளைஞர் , யுவதிகளில் 34 ஆயிரம் பேர் வேலையில்லாது இருக்கின்றனர். அவர்களில் பல ஆயிரம் பட்டதாரிகளும் உள்ளனர்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முகாமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறு முயற்சியாளர்களுக்கான பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு சங்கத்தில்நேற்றுநடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

யாழ். குடாநாட்டில் வேலை வாய்ப்பின்றி உள்ளவர்கள் மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்துள்ளனர். பல ஆயிரம் பட்டதாரிகளும் வேலைவாய்ப்புக் கோரி பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். வேலை வாய்ப்பின்றி உள்ள இளையோர் கடும் மன உலைச்சலை எதிர்கொண்டு சிறிய வேலையாவது கிடையாதா எனத் தவிக்கின்றனர்.

இதன் வெளிப்பாடே அண்மையில் மாகாண சபையால் சிற்றூழியருக்கான விண்ணப்பம் கோரப்பட்டபோது பட்டதாரிகள் பலர் விண்ணப்பித்தனர்.

குடாநாட்டில் வேலை வாய்ப்பின்மை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருப்பது குடாநாட்டில் இயங்கிய பல தொழிற்சாலைகள் போர் காரணமாக அழிவடைந்தமையே. அவற்றை மீள இயக்குவதற்கு கடந்த 7 வருடங்களாக நாமும் கடும் முயற்சிகளை மேற்கொண் டோம்.

குடாநாட்டில் பெரிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் வரைக்கும் இளையோர் காத்திருக்காது இவ்வாறான சிறு முயற்சிகளிலும் ஈடுபட முன் வர வேண்டும். அவ்வாறு ஈடுபட முன்வருபவர்களுக்கு நாமும் முடிந்தளவு உறுதுணையாக இருப்போம். உங்களுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

உதாரணமாகக் கூறுவதானால் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் பல சிறு முயற்சியாளர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு உருவான பலர் இன்று மேலும் பலருக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதோடு அவர்களின் உற்பத்திப் பொருளுக்கான உரிய சந்தை வாய்ப்பும் கிடைக்கின்றது.

எதிர்காலத்தில் சிறு முயற்சியாளர்கள் அதிகரித்து அதன் மூலம் அதிகமான பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் வேலை யற்றவர்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பை எம்மால் ஏற்பாடு செய்து தரமுடியும். அவ்வாறு சில முயற்சியாளர்கள் தமது பொருள்களை ஏற்றுமதி செய்கின்றனர். அரச வேலைதான் வேண்டும் என்ற மாயை தற்போது மாறிவருகின்றது. உண்மையில் அரச பணியென்பது பலரின் கண்காணிப்பு நிர்வாகம் என்பதுடன் பல சவால்களையும் எதிர் கொள்ள வேண்டும்.

தனியார் துறையில் அதுவும் சுய முயற்சியில் முயன்றால் நிச்சயமாக அதிலும் முன்னுக்கு வர முடியும். தற்போது உலக நாடுகளில் இருந்து வரும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் கூட இவ்வாறான சிறு முயற்சியாளர்கள் மற்றும் தனியாரை ஊக்குவிப்பதில்தான் அதிக நாட்டம் கொண்டுள்ளனர். இதனால் இவ்வாறானவர்களுக்கு தற்போது அதிக வாய்ப்புக்கள் உண்டு. எதிர்காலத்தில் சர்வதேச உதவிகளும் கிட்டும்.

இனிவரும் காலம் சிறு முயற்சியாளர்களுக்கும் சந்தர்ப்பமான காலம். இவ்வாறு உதவிகள் வரும்போது முயற்சியாளர்களை நாம் இனம் காட்டுவோம். அதற்கு நாம் உறுதுணையாக இருப்போம். அண்மையில் வந்த தூதுவர்கள் கூட இதனையே எமக்குத் தெரிவித்தனர்.– என்றார். (ற-10)

# எழுதுமட்டுவாழ் சந்தியில் இளைஞர்களால் தொல்லை

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

பளை, செப். 13

எழுதுமட்டுவாழ் சந்தியில் பகல் வேளையில் கூடும் இளைஞர்களால்வாகனங்களிருந்து இறங்கிச் செல்வோர் மற்றும் வாகனங்களில் வருவோர் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வாகனங்களிலிருந்து இறங்கி தமது வீடுகளுக்குச் செல்வோரை விசாரணை நடத்துவதும் ஒத்துழைக்க மறுப்போரைத் தாக்குகின்றனர் என்றும், தகாத வார்த்தைகளால் ஏசுகின்றனர் எனவும் வாகனங்களில் நாகர்கோவில் உட்பட வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்வோரை அச்சுறுத்திப் பணம் பறிக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகபொலிஸாருக்கு பலதடவைகள் அறிவிக்கப்பட்டபோதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

பகல் வேளையில் வாக னங்களில் வரும் பாடசாலை மாணவிகள் மற்றும் இளம் பெண்களின் பெற்றோர் எழுதுமட்டுவாழ் சந்தியில் காத்திருந்து வீடுகளுக்கு அழைத்துச் செல்லும் நிலை காணப்படுகிறது எனவும் தெரிவித்தனர்.

தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை வரை எழுதுமட்டுவாழ் சந்தியில் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதி 2012 ஆம் ஆண்டு மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசம் எனவும் அங்கு மீளக்குடியமர்ந்த மக்கள் தம்மை இன்னமும் நிலைகொள்ளாத நிலையில் அங்குள்ள இளைஞர்களே இவ்வாறான செயற்பாடுகள் ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லை. முதல்முறையாகத் தற்போதுதான் கேள்விப்படுகிறேன். என்று கொடிகாமம் பொலிஸ் நிலையப் பெறுப்பதிகாரி தெரிவித்தார். (ற-4,9,ரி4)

# வலி. கிழக்கு கழிவகற்றலுக்கு நீர்வேலியில் கட்டுமானங்கள்

## 37 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன

அச்சுவேலி, செப்.13

வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை அகற்றி முகாமை செய்வதற்கு 37 லட்சம் ரூபா செலவில் நீர்வேலி தரவைப் பகுதியில் பொருத்தமான கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வடக்கு மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி மூலம் கழிவகற்றலுக்கான கட்டுமானங்கள் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேசசபை, யாழ்.மாவட்டத்தில் ஆகக்கூடிய அளவு குடிப்பரம்பல் உள்ள பிரதேசமாகும். கடந்த காலங்களில் கழிவகற்றல் நடைமுறையில் பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டன. உரியமுறை கழிவகற்றல் முகாமை மேற்கொள்ளப்படாமையால் இந்து மயானங்களோடு சேர்ந்த பகுதிகளில் பெருமளவில் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டன. அதனால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகிறோம்.– என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

வலி.கிழக்குப் பிரதேசபையின் ஆள்புலப் பரப்பில் உள்ள கழிவுகள் அகற்றப்பட்டு நீர்வேலி தரவைப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதோடு கழிவுகள் சேதனப் பசளையாக்கல் , மீள்சுழற்சிக்கான பொருள்கள், அழிக்கப்பட வேண்டியவை என்ற வகையில் தரம்பிரிக்கப்பட்டுப் பொருத்தமான முறையில் முகாமை செய்யப்படவுள்ளன.

வலி.கிழக்கில் கழிவு அகற்றல் அப்புறப்படுத்தல் கடந்த காலங்களில் பெரும் பிரச்சினையாகவே இருந்து வந்தது. தற்பொழுது பொருத்தமான ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. கழிவு அகற்றலைப் பொருத்தமான முறையில் மேற்கொள்வதற்கு அதற்கான வாகனம் மற்றும் ஆளணி பற்றாக்குறையாக உள்ளது. எதிர்காலத்தில் குறித்து ஒதுக்கப்பட்ட வீதிகள்தோறும் பொதுமக்களால் பொதி செய்து வைக்கப்படும் கழிவுகள் ஏற்றப்படும். அதற்கு உரிய கால அட்டவணை விவரம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்–என்று வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் யு. ஜெலீபன் தெரிவித்தார். (ற-4,11)

## சங்காபிசேகம்

தென்மராட்சி, செப். 13

சாவகச்சேரி சரசாலை நுணாவில் சிதம்பர விநா யகர் ஆலய மணவாளக் கோல சங்காபிசேகம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

மு.ப. 9 மணிக்கு 108 சங்காபிசேகமும் விசேட பூஜையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.

சங்காபிசேகக் கிரியைகள் கிரியா சிரோ மணி சிவஸ்ரீ ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ற-9)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆண், பெண் ஆசிரிய மாணவர்களுக்கென 120 மில்லியன் ரூபா செலவில் விடுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆசிரிய கலாசாலையில் கடந்த சனிக்கிழமை நட்டார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனும் கலந்து கொண்டார். (ற-4)

## சட்டவிரோத மணல் ஏற்றியவருக்கு மறியல்

கிளிநொச்சி, செப்.13

கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியில் சட்டவிரோதமாக வெள்ளை மணல் ஏற்றிய சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது.

ஆனையிறவுப்பகுதியில் கடந்த சனிக்கிழமை அவர் கைது செய்யப்பட்டார். (ற-ரி3)

# பிரப்பங்குளம் வீதி திருத்த பணி இடைநிறுத்தப்பட்டதால் சிரமம்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதி திருத்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ளன. இதுவரை எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. வீதி திருத்த வேலைக்காக பறிக்கப்பட்ட சல்லிக் கற்கள் வீதியில் முழுமையாகப் பரவியுள்ளன. அந்த வழியால் பயணிக்கும் வயோதிபர்கள், பாடசாலைச் சிறுவர்கள் என பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். பல தடவை விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வீதி திருத்தப்படவுள்ளது என்று தெரிவித்து வீதிக் கரையோரங்களில் சல்லிக் கற்களை கொண்டு வந்து பறித்தனர். இற்றைவரை வீதி திருத்தப்படவில்லை. வீதி ஓரங்களில் பறிக்கப்பட்ட கற்கள் வீதியில் பரவி வீதியால் பயணிக்க முடியாத படி உள்ளன. நாளாந்தம் ஒருவராவது கற்களில் சறுக்குண்டு விபத்துக்குள்ளாகின்றார். இரவில் பயணிப்பது பெரும் சவாலாக உள்ளது. இனிவரும் காலங்கள் தொடர்ச்சியாக மழை பெய்யும் காலம். மழைகாலங்களில் குட்டைகளில் நீர் தேங்கி நிற்கின்ற நிலைமை கூட ஏற்பட வாய்ப்புண்டு. இதே நிலைமை காணப்படின் மழைகாலங்களில் இவ் வீதியில் அதிகளவில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயங்களும் உள்ளன.

எமது பிரதேசத்தில் வசிக்கும் வயோதிபர்களையும் மாணவர்களையும் கருத்தில் கொண்டு இந்த வீதியினை காலம் தாழ்த்தாது விரைந்து திருத்தும்படி சம்பந்தப் பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறோம்.– என்று தெரிவித்தனர்.

இந்த வீதி ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அவர்களே செப்பனிடுவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளனர். அவர்கள் இந்த வீதியை மட்டுமன்றி மேலும் மூன்று வீதிகளை செப்பனிடுவதற்கான ஒப்பந்தத்தை செய்துள்ளனர். இது தொடர்பில் நான் அவர்களிடம் எடுத்துக் கூறி உடனடியாக வீதியைச் செப்பனிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறேன். என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ற-4,ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலதையும் எதிர்க்கும் எமது குணத்தை மாற்ற வேண்டும்

## வடக்கு அவைத் தலைவர் அறிவுரை

யாழ்ப்பாணம், செப். 13

சகலதையும் எதிர்ப்பதை மட்டுமே கொண்ட எமது குணம் மாற வேண்டும். இதனையே நாம் 60 ஆண்டுகால அரசியலிலும் மேற்கொண்டு வந்துள்ளோம். எம்மைத் தவிர ஏனையோர் செய்தால் அதனை எதிர்க்க வேண்டும் என்ற மனநிலை இன்றும் பலரிடம் உள்ளது. அதனாலேயே பல முயற்சிகளையும் எதிர்க்கின்றனர்.

இவ்வாறு வட மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட முகாமைத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் சிறு முயற்சியாளர்களுக்கான பயிற்சி சங்கத்தில் நேற்று இடம்பெற்றது.

அங்கு அவர் தெரிவித்ததாவது:

இளையோர் அரசவேலைவேண்டும் அல்லது வெளிநாடு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் மட்டும் வாழாது கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும். குறைந்தபட்சம் எதிர்பார்த்துக் காத்திருப்பது கையில் கிடைக்கும் வரைக்கும் என்றாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தவேண்டும். ஏனெனில் அனைவராலும் ஏதோ ஒரு விடயத்தில் சாதிக்க முடியும் என்பதையும் இந்த இளையோரே நிரூபித்துள்ளார்கள்.

இங்கிருந்து லண்டன், அமெரிக்கா போன பிற்பாடு சாதிக்க முடியும் எனில் உங்களால் இங்கும் சாதிக்க முடியும். எதை சாதிக்க நினைக்கின்றீர்களோ அதனை அல்லது அதை ஒத்ததாக அடையும் வரை முயற்சிக்க வேண்டும். இதற்கு நானும் ஓர் உதாரணம்தான். அரசியலில் வெற்றி தோல்வி பாராது முயன்றே வந்தேன். எனவே இனி வரும் காலம் இளையோர் காலம். அனைவரும் முயன்றால் முடியாதது இல்லை- என்றார்.

யாழ்ப்பாணம் முகாமைத்துவ சங்கத் தலைவர் கிருஸ்ணானந்தன் தெரிவித்ததாவது:

அன்றும் சரி இன்றும் சரி பெற்றோரின் அதிக விருப்பமே இளையோரின் விருப்பமாக இருக்கின்றது. முன்னொரு காலத்தில் எனது பிள்ளை மருத்துவராக வேண்டும். பொறியியலாளராக வேண்டும். சட்டத்தரணி ஆக வேண்டும் என பெற்றோர் அதிக விருப்பம் கொண்டிருந்தனர். இளையோரும் அதனையே தேர்வு செய்தனர்.

பின்னரான காலங்களில் பட்ட அனுபவங்களின் பிரகாரம் எமது பிள்ளைகள் போராளிகளாக வர வேண்டும் என பெற்றோர் விரும்பினர். அதன்பால் போராளிகளாகினர். இவ்வாறே இளையோரை ஊக்குவித்தனர். இன்று எமது இளையோர் பல் துறைகளிலும் முன்னேறியுள்ளனர். அதனால் பல் துறைகளும் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

இன்றைய விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாகவே 60 வயதைத் தாண்டியவர்கள்கூட தொழில் பார்க்கும் அளவிற்கு முன்னேற்றம் கண்டுள்ளோம். அதேநேரம் இன்றைய பல முன்னேற்ற நாடுகளும் முன்னேறியவர்களையும் ஆராய்ந்தால் அதிகம் விவசாயமே முன்னேற்றியதையும் காணமுடியும்.

இவற்றுக்கு உதாரணமாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளையும் குறிப்பிடலாம்- என்றார். (ந-101)



## நீராவிப்பிட்டி வார இறுதிச் சந்தையை தொடர்ச்சியாக இயங்க அனுமதிக்குக

### பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, செப். 13

முள்ளியவளை நீராவிப்பிட்டி அரசஉணவுக்களஞ்சியத்துக்கு அருகில் அண்மைக்காலமாக வார இறுதியில் இயங்கிவரும் சந்தையில் விவசாயிகள் தங்கள் உற்பத்திப்பொருள்களுக்கு எந்தவித தரகு இழப்பின்றி நேடியாகச் சந்தைப்படுத்துகின்றனர். நியாயமான விலைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடிவதால் தொடர்ந்தும் இந்த வாராந்தச் சந்தை இயங்க வேண்டும்.

இவ்வாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

இங்குள்ள நாளாந்த சந்தைகளில் விற்கப்படும் மரக்கறி வகைகளுக்கான விலைகளை விட மிகக் குறைந்த விலைகளிலும் தரமான உடன் மரக்கறி வகைகளையும் கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. மூன்றாம் கட்டை சந்தியிலிருந்து தண்ணீரூற்று சந்திவரை வேறெந்தவொரு சந்தையும் இல்லை. போருக்கு முன்னர் மக்கள் செறிவு குறைந்த காலப் பகுதியிலேயே ஆலடிச் சந்தை இயங்கி வந்தது. தற்போது அது முற்றாக இயங்குவதில்லை. மக்கள் செறிந்து வாழும் இன்றைய கால கட்டத்தில் இந்த வாராந்தச் சந்தை இயங்குவது அவசியம். வாராந்தச் சந்தை இயங்கும் பிரதேசத்தை அண்டி வாழும் மக்கள் மட்டுமன்றி முள்ளியவளை, தண்ணீரூற்று பிரதேசத்தில் வாழும் மக்களும் இங்கு வந்து மரக்கறி வகைகளை மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து செல்கின்றனர்.

இங்குள்ள வாரஇறுதி சந்தை தவிர்ந்த ஏனைய சந்தைகளில் ஒருசில குறிக்கப்பட்ட வியாபாரிகள் மரக்கறி உற்பத்தியாளர்களிடமிருந்து மிகக்குறைந்த விலைக்கு மரக்கறி வகைகளை கொள்வனவு செய்கின்றபோதிலும் தாம் நிர்ணயிக்கும் அதிக விலைக்கே மக்களுக்கு மரக்கறிவகைகளை விற்பனை செய்கின்றனர். அதனால் தாம் பாதிக்கப்படுகிறோம்.

இந்த வாராந்தச் சந்தையை நிறுத்தாது இயக்க வேண்டும். அரச அதிகாரிகள் எந்தவித தடையும் விதிக்கக்கூடாது- என்றனர். (ந-4,ரி7,102)

## வினைத்திறனான விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல்

யாழ்ப்பாணம், செப். 13

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட வினைத்திறனான விவசாயிகளுக்கு பாரம்பரியநெல் இனங்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக 200 ஏக்கர் செய்கையாளருக்கு அவை வழங்கப்படவுள்ளன. அதற்கான பட்டியல்கள் பெரும்பாக உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-50)



யாழ்.பண்ணை கடற்கரையில் பயணித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து நேற்று வீதியை விட்டு விலகி கடலுக்குள் சென்றது.(ந)

## யாழ். குடாவில் விவசாயக் கிணறுகளை சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப். 13

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சேதமடைந்த விவசாயக் கிணறுகளைச் சீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கான ஆரம்ப நிகழ்வு யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்றது.



கடந்த காலங்களில் போர் காரணமாகவும், போதிய பராமரிப்பு இல்லாமலும் யாழ். குடாநாட்டில் உள்ள ஏராளமான விவசாயக் கிணறுகள் சேதமடைந்துள்ளன. அதனால் மழைநீருடன் இரசாயனங்கள் விவசாயக் கிணறுகளினுள் சென்று நிலத்தடி நீரை மாசடையச் செய்கின்றன. அதைத் தடுக்கும் நோக்கிலேயே வடக்கு விவசாய அமைச்சு விவசாயக் கிணறுகளைச் சீரமைக்கும் பணியைக் கட்டம் கட்டமாக முன்னெடுத்துள்ளது.

விவசாயக் கிணறுகள் பற்றிய விவரங்கள் விவசாயப் போதனாசிரியர்கள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. முதற்கட்டமாக நிலத்தடி நீருடன் விவசாய இரசாயனங்கள் கலப்பதற்கான கூடுதல் வாய்ப்பைக் கொண்ட 139 கிணறுகள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அந்தக் கிணறுகளின் பங்குதாரர்கள் வரவழைக்கப்பட்டு புனரமைப்புத் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. 100 கிணறுகள் இரண்டாம் கட்டத்தில் உடனடியாக உள்ளீர்க்கப்படவுள்ளன. விவசாயக் கிணறுகளைச் சீரமைப்பதற்கென இந்த ஆண்டுக்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராஜா,மாகாணசபை உறுப்பினர்கள் விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, இ.ஆர்னோல்ட், யூல் பவர், பீற்றர் பவர் காற்று மின்னலைகளின் பணிப்பாளர் மொயிஸ் நஜ்முடின், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சி[illegible] வராஜா [illegible] என்று விவசாய அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (ந-4.ரி)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்.நகரில் கவனவீர்ப்பு

### சர்வதேச கைதிகள் தினமான நேற்று

யாழ்ப்பாணம். செப். 13

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி சர்வதேச கைதிகள் தினமான நேற்று திங்கட்கிழமை யாழ்.பஸ் நிலையம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இணைந்து போராட்டம் நடத்தினர்.

அரசியல் கைதிகள் 22 வருடங்களாக ஏக்கங்கள், நிராகரிப்புக்கள், அவமானங்கள், அருவருப்புக்களுடன் சிறைக்குள் உள்ளனர்.

அவர்களது பிரச்சினைகளைச் சமூகப் பிரச்சினையாகக் கருதி நல்லாட்சி அரசு விடுதலை செய்ய வேண்டும். நீதித்துறையால் வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிய கூட்டரசு தமிழ்அரசியல் கைதிகள் விடயத்தில் மட்டும் பாராமுகம் காட்டுகின்றது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

உள்நாட்டு ஆயுதக் கிளர்ச்சியைச் செய்த ஜே.வி.பி யினருக்கு இரண்டுதடவைகள் பொது மன்னிப்பு வழங்க முடியுமென்றால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க முடியாமைக்கான காரணம் என்ன?

15 தொடக்கம் 22 வருடங்களுக்கு மேலாக எமது அரசியல் கைதிகள் பட்ட துயரம் போதாதா?, அன்று சொந்த நிலத்தில் சுதந்திரமாகவும், சுகமாகவும் வாழ்ந்த தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் இன்று வீதியில் இறங்கி விடுதலைக்காகக் கோசமிடும் போது, சமத்துவம் சாத்தியமா? என்றும் அவர்கள் கேள்வியெழுப்பினர்.



அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். நகரப்பகுதிகளில் துண்டுப் பிரசுரமும் விநியோகம் செய்யப்பட்டது. (ந-4,101,106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின் மோட்டர் திருட்டு

தென்மராட்சி செப். 13
கைதடி- நாவற்குளி, கோவிலாக்கண்டிப் பகுதிகளில் மூன்று வீட்டுக் கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த மின் மோட்டர்கள் கடந்த 3 நாள்களில் திருடப்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த சில மாதங்களாக மட்டுவில், மீசாலை வடக்கு, கல்வயல் போன்ற பகுதிகளில் மின் மோட்டர்களைத் திருடிய நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதையடுத்து மின் மோட்டர்கள் திருட்டு குறைந்திருந்தது என்றும், தற்போது மீண்டும் மின் மோட்டர் திருட்டு இடம் பெறுகின்றது என்றும் பொது மக்கள் தெரிவித்தனர். (ற-4)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

அச்சுவேலி, செப்.13
வலி.கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என வலி.கிழக்குப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தெரிவித்தார்.(ற-11)

# வீட்டுத் திட்ட பயனாளிகள் திண்டாட்டம்

## அதிகாரிகள் போராட்டத்தால்

> மீள்குடியேற்ற அமைச்சால் யாழ்.மாவட்டத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 3 ஆயிரம் வீடுகள் பிரதேச ரீதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது

தென்மராட்சி, செப்.13
தொழில்நுட்ப அலுவலர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தால் குறிப்பிட்ட காலத்துக்குள் வீட்டுத் திட்ட வேலைகளைச் செய்து முடிக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது என்று வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவித்தனர்.
மீள்குடியேற்ற அமைச்சால் யாழ். மாவட்டத்தில் வீடற்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 3 ஆயிரம் வீடுகள் பிரதேச ரீதியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.
வீட்டுக் கட்டுமானப் பணிகள் செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று பயனாளிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.
பயனாளிகள் வீட்டுத் திட்டப் பணிகளை முடிவுறுத்தும் வகையில் துரிதமாகச் செயற்படுகின்ற போதும் தற்போது தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்துவதால் செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.
தமக்கு வழங்கப்பட்ட கால எல்லைக்குள் வீட்டுக் கட்டுமானங்களை முடிப்பதற்கு பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தடையாக உள்ளது என்று வீட்டுத்திட்டப் பயனாளிகள் தெரிவித் தனர்.(ற-9)



யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் முஸ்லிம் வட்டார மக்களுக்கான பெருநாள் தொழுகை ஏற்பாடுகள் மௌலவி அப்துல் அஸீஸ் தலைமையில் நேற்று நடைபெற்றன. யாழ். மாநகர மைதானத்தில் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பெருநாள் தொழுகை அஷ்-ஷெய்க் பைசல் தலைமையில் நடைபெற்றது. இறை தூதர்களில் ஒருவரான இப்றாஹிம் நபியின் தியாகத்தை நினைவுகூரும் விதமாக இஸ்லாமிய நாள்காட்டியின் பிரகாரம் துல்ஹஜ் மாதம் பிறை பத்தில் ஹஜ் பெருநாள் கொண்டாடப்படுகின்றது. (ற-32)

# சாரணர் பாசறை நிகழ்ச்சிகள் இயற்கையை புரிய வைக்கும்

## இந்துபோறி வனபாசறை நிகழ்வில் வடக்கு சுற்றுச் சூழல் அமைச்சர் கருத்து



யாழ்ப்பாணம், செப்.13
சாரணர்களின் பாசறை நிகழ்ச்சிகள் அவர்களுக்கு ஏராளமான விடயங்களை இள வயதில் கற்றுத் தருகின்றன. பாடசாலையை விட்டு வெளியே இயற்கைச் சூழலில் நடத்தப்படும் பாசறைகள் மாணவர்களிடையே இயற்கை பற்றிய புரிதலை ஏற்படுத்தி, இயற்கையை நேசிக்கக் கற்றுத் தருகிறது.
இவ்வாறு வடக்கு சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.
சாரணர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியின் திரி சாரணர்களால் வவுனிக்குளம் மருதங்காட்டுப் பகுதியில் 'இந்துபோறி' என்னும் ஐந்து நாள் வனப்பாசறை நிகழ்ச்சி கடந்த 7 ஆம் திகதியில் இருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதன் நான்காம் நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இரவு நடந்தது. சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என வடக்கு மாகாண விவசாய அமைச்சு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டதாவது:
ஒரு பக்கம் பரந்து விரிந்து கிடக்கும் வவுனிக்குளமும் மறுபக்கம் நெடிதுயர்ந்து அடர்ந்து நிற்கும் மருதமரங்களும் இங்கு கூடியிருக்கும் சாரணர்களை நிச்சயமாக ஒரு புதிய உலகத்துக்குள் அழைத்துச் சென்றிருக்கும். இயற்கை பற்றிய இரசனை இல்லாதவர்களைக்கூட இயற்கையின் பேரழகைப் பருக வைத்து, இயற்கையை நேசிக்கக் கற்றுத்தந்திருக்கும்.
அதிகாலை குளக்கரையில் படுத்திருக்கும் முதலைகளையும், சேற்றில் பதிந்துள்ள யானைகளின் பாதச் சுவடுகளையும், குரங்குகளையும், நரிகளையும் பலமாணவர்கள் முதற்தடவையாக இங்கு பார்த்திருக்கக்கூடும். இயற்கைச் சூழல் இதுவரையில் நீங்கள் கண்டிராத உயிரினங்களைத் தெரிந்து கொள்ளும் அரிய வாய்ப்பை மாத்திரம் உங்களுக்கு வழங்கவில்லை. இயற்கை, மன அழுத்தங்களில் இருந்து எங்களை விடுவித்து மனதைச் சாந்தப்படுத்தவும், மனதை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் உதவுகிறது. இது மனதில் தீய எண்ணங்கள் குடியேறாது, நேர்வழிச் சிந்தனையை விதைக்க வழிகோலுகிறது.
இயற்கை என்ற பேராசான் மாணவர்களை நன் மானிடர்களாக வளர்த்தெடுப்பதற்கு ஏராளமான விடயங்களைக் கற்றுத்தரும். அந்த வகையில் மாணவர்கள் எல்லோரும் சாரணர்களாக இணைந்து கொள்வதும், இது போன்ற வனப்பாசறை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும் அவசியமாக உள்ளது - என்றுள்ளது.
நிகழ்ச்சியில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, பரியோவன் கல்லூரி அதிபர் என்.ஜே.ஞானபொன்ராஜா ஆகியோருடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டச் சாரண அமைப்புகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர். (ற-4,ரி)

## சிங்கள மொழி தரம் 111க்கான வகுப்புக்கள்

தென்மராட்சி செப். 13
இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் இரண்டாம் மொழி சிங்களம் தரம் 111 இற்கான பயிற்சி வகுப்பு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
பிரதி சனி ,ஞாயிறு தினங்களில் பி.ப. 2 மணிக்கு நடத்தப்படும் சிங்கள பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்கள் அன்று பதிவை மேற்கொண்டு பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை தரம் 11 இற்கான ஆங்கிலம், சிங்களம் ஆகிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும், அவற்றில் மாணவர்கள் மற்றும் அரச பணியாளர்கள் கலந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.(ற-9)

## காலபோகப் பயிர்ச் செய்கைக்கான உர மானிய வழங்கல் ஆரம்பம்

காலபோக பயிர்ச் செய்கை (2016/2017) உரமானியம் வழங்கும் நடவடிக் கைகள் யாழ். மாவட்டத்தில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் முழுமைப் படுத்தி கமநல சேவைகள் நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
இவ்வாறு தெரிவித்தார் கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் நிசாந்தன்.
அவர் தெரிவித்ததாவது:
உரமானியமாகப் பணம் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாகவும் விநியோகிக்கப்படுகின்றன.
நெற்செய்கைக்கான உரமானிய பணத்தைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிப்பவர்கள் அதற்கான (P) விண்ணப்பப்படிவத்தையும், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், சோயா ஆகிய பயிர்களுக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் (H) விண்ணப் பப்படிவத்தையும் முழுமைப்படுத்த வேண்டும்.
தங்களது பயிர்ச்செய்கை காணிப் பரப்பு எந்த கமநல சேவைகள் நிலைய அதிகாரப்பிரிவின் கீழ் வருகின்றதோ அந்த கமநல சேவைகள் நிலையத்தில் படிவங்களை விவசாயிகள் பெறலாம்.
மேட்டுக் காணிக்கான உரமானியம் மேற்குறிப்பிட்ட பயிர்களை பயிரிடுபவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும். உச்ச எல்லையாக 2.5 ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா வரை பெறலாம். அதே போல நெல்லுக் கான உரமானியம் 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும். நபர் ஒருவர் இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் பெற முடியும். தென்னை பயிர்ச் செய்கைக்கான உரமானியத்தைப் பெற்றுக் கொண்டவர்களுக்கும் இது வழங்கப்பட்டது.
2015/2016 கால போகத்தில் நெல்லுக்கான மானியத்தையும் அதே காணியில் 2016 சிறு போகத்தில் வேறு ஏதேனும் பயிர்ச் செய்கையையும் மேற்கொண்டு உரமானியத்தைப் பெற்ற விவசாயிகள் இந்த போகத்தில் நெல்லுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். - என்றார். (ற-ரி)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 20 . 09 . 1948



மறைவு 14 . 08 . 2016

செல்லத்துரை பாக்கியம் (கிளி)

கடந்த 14.08.2016 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவி செல்லத்துரை பாக்கியம் அவர்களின் மரணச் செய்தி அறிந்து அனுதாபம் மற்றும் உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.31,6 ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம்,
வவுனியா,
077 126 1813

(V-190)-(13)

செல்லத்துரை
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகின் கொள்கையை ஏற்கமுடியாது

## இலங்கை பௌத்த மதக் கலாசாரம் கொண்ட நாடு என்கின்றார் கர்தினால் மல்கம்

கொழும்பு, செப். 13

இலங்கை மதச் சார்பில்லாத நாடு என்ற மேற்குலகத்தின் கொள்கையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவை கிடையாது. பௌத்தத்துக்கு முக்கியத்துவம் வழங்கும் இலங்கையின் அரசமைப்பின் 9 ஆவது சரத்து நீக்கப்படக்கூடாது.

இவ் வாறு கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் திரு இருதயநாதர் தேவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இவ்வாறு கருத்து வெளியிட்டார்.



அவர் தெரிவித்திருப்பதாவது:

இலங்கை மதச்சார்பில்லாத நாடு என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அதனைப் புதிய அரசமைப்பில் உள்ளீர்க்க வேண்டுமென்றும் மேற்குலக நாடுகளின் கொள்கை எம் மீது திணிக்கப்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இதனை நாம் நிராகரிக்கவேண்டும். மதம், கலாசார விழுமியங்களைக் கடைப்பிடித்த வாழ்வின் காரணமாகவே இலங்கையில் ஒழுக்க விழுமியங்களுக்கான சமூகக் கட்டமைப்பு உருவாகியுள்ளது.

எனவே மதச்சார்பற்ற நாடு எங்களுக்குப் பொருத்தமானதல்ல. 2600 வருடங்களுக்கு மேலான மதக் கலாசாரம் எமக்கு உள்ளது. அதனை நீக்குவது சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும்.

அதேவேளை, அரசமைப்பின் 9ஆவது சரத்தைத் தொடர்ந்தும் பாதுகாப்பதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். இதனை வரவேற்கின்றோம். இலங்கை ஜனநாயகக் குடியரசில் அதிமுக்கியம் வாய்ந்த இடத்தைப் பௌத்த மதத்துக்கு வழங்கி அதனைப் போசிப்பது- பாதுகாப்பது அரசின் முக்கிய கடமை.

அதேவேளை, ஏனைய மதங்களையும் அரசு பாதுகாக்கும் என்ற சரத்து இலங்கையின் அரசமைப்பில் தொடர்ந்தும் இருக்கவேண்டும்-என்றார். (த-4)

## பாதீடு தயாரிப்பு பணிகள் மும்முரம்

கொழும்பு, செப். 13

எதிர்வரும் 2017 ஆம் ஆண்டுக்கான நல்லாட்சி அரசின் பாதீடு எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி அளவில் முன்வைக்கப்படவுள்ள நிலையில் அதனைத் தயாரிப்பதற்கான தீவிரமான முயற்சிகளில் நிதி அமைச்சும் திறைசேரியும் ஈடுபட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

புதிய பாதீட்டைத் தயாரிப்பது தொடர்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்ச்சியாகப் பல்வேறு ஆலோசனைகளை நடத்தி வருகிறார். நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள், நிதித்துறை சார்ந்த நிபுணர்கள், அமைச்சுக்களின் அதிகாரிகள், தொழிற்றுறை சார்நிபுணர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க அடுத்த ஆண்டுக்கான பாதீடு தொடர்பில் பேச்சுக்களையும் ஆலோசனைகளையும் நடத்தி வருகிறார்.

இதன்படி நவம்பர் மாதம் 10 ஆம் திகதியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தேசிய நல்லாட்சி அரசு தனது இரண்டாவது பாதீட்டை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய நல்லாட்சி அரசு தனது முதலாவது பாதீட்டைக் கடந்த டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## இலங்கையர்களுக்கு தொடர்பேதுமில்லை

### தூதுவர் மீதான தாக்குதல் சம்பவத்தில்

கொழும்பு, செப். 13

மலேசியாவில் இலங்கைத் தூதுவர் இப்றாஹீம் அன்சார் மீதான தாக்குதல், பௌத்த விகாரை மீதான தாக்குதல் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாட்டின் பல பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் என்பவற்றுடன், இலங்கையர்கள் எவருக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென உறுதியான தகவல்கள்வெளியாகியுள்ளன. இவ்வாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

புலனாய்வுத் துறைத் தகவல்களின்படி இவற்றுடன் தொடர்புடைய சகலரும் தென் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் இன்னும் விடுதலைப் புலிகள் அமைப்பின் கருத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எனவும் புலனாய்வுத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

மலேசியாவிலுள்ள பாதாள உலகக் கும்பல் ஒன்றும் இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் தொடர்புபட்டுள்ளதாகவும் புலனாய்வுத் துறைத் தகவல்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (த-4)

## மாத்தளையில் மேலும் துப்பாக்கிகள் மீட்பு

கொழும்பு செப். 13

மாத்தளைப் பிரதேசத்தில் மற்றுமொரு தொகைத் துப்பாக்கிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை கச்சேரிக்கான கட்டடம் ஒன்றை அமைப்பதற்குக் கடந்த 9 ஆம் திகதி பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட அத்திபாரம் தோண்டும் பணிகளின் போது பெருமளவிலான துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. அந்த இடத்துக்கு அருகிலுள்ள மற்றொரு பகுதியிலிருந்தே நேற்றும் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிகள் பல வருடங்கள் பழைமை வாய்ந்த, துருப்பிடித்த நிலையில் காணப்படுவது போன்றே நேற்று கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்களும் அதே காலப் பகுதியைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (த-4)

## சு.கவை யாரும் மழுங்கடிக்க முடியாது

### கூறுகிறார் சந்திம



கொழும்பு, செப். 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையோ அல்லது அதன் கொள்கைகளையோ யாராலும் மழுங்கடிக்க முடியாது என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

பத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வலதுசாரி அரசியல் முறைமையையும் இடதுசாரி அரசியல் முறைமையையும் சமப்படுத்தி உருவாக்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி வரலாற்றில் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னை புதுப்பித்துக் கொண்டு வளர்ச்சியடைந்ததாகச் சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார். (த-4)

## தாஜுதீன் படுகொலை

## சந்தேகநபர்களின் தொலைபேசி அழைப்புக்கள் குறித்து ஆராய்வு

கொழும்பு, செப். 13

பிரபல றக்பி வீரர் வஸீம் தாஜுதீன் படுகொலை செய்யப்பட்ட தினத்தன்று, கொலைக்கு முன்பாகவோ அல்லது பின்னரோ சந்தேகநபர்கள் எவருக்கேனும் தொலைபேசி அழைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் படுகொலை விவகாரத்தில் ஏற்கனவே முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க, நாரஹேன்பிட்டி பொலிஸ்நிலையத்தின் முன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரியும் நெல்லியடிப் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியுமான பொலிஸ் பரிசோதகர் சுமித் பெரேரா ஆகியோர் கைதாகியுள்ள நிலையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைவாகவே இது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விசாரணைக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இது தொடர்பில் செய்த விசாரணைகளில், கொலை இடம்பெற்ற தினத்தன்று ஜனாதிபதி செயலகத்திலிருந்து நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த டானியல் பெரேராவின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்புக்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்தது. இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளில் குறித்த ஜனாதிபதி செயலகத் தொலைபேசிகள் அம்பாந்தோட்டை கால்டன் இல்லத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளமை உறுதியானது.

எனினும் தாஜுதீனின் கொலை இடம்பெற்ற தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட அழைப்பு விவரங்கள் ஜனாதிபதி செயலகத் தொலைபேசிப் பதிவுக் கணினியில் இருந்து நீக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே இந்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி ஜனாதிபதி செயலகத்தின் குறித்த கணினியை தமது பொறுப்பில் எடுத்துள்ள புலனாய்வுப் பிரிவினர், அழிந்த தகவல்களை மீளப் பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சர் சுதத் நாகஹமுல்ல ஆகியோரின் மேற்பார்வையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் விக்ரமசேகர, பிரதான பொலிஸ் பரிசோதகர் ரவீந்திர விமலசிறி ஆகியோரின் கீழ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## 4 வயதுச் சிறுவன் கடத்தல் இந்தியர், 2 பெண்கள் கைது

கொழும்பு, செப். 13

புத்தளம் வான் வீதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை பகல் 4 வயதுச் சிறுவன் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்தியரும் 2 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடத்தல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த ஓட்டோச் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

முஹம்மது ஹுசைன் என்பவரின் மகனான முஹம்மது பாதிர் என்ற சிறுவன் யாசகம் கேட்டு வந்த இனந்தெரியாத பெண்மணி ஒருவரால் கடந்த வெள்ளிக்கிழமை பகல்வேளை கடத்திச் செல்லப்பட்டதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கடத்தலையடுத்து பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்போடு யாசகம் கேட்டு வந்த இரு பெண்களையும் அன்றைய தினமே கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

பின்னர் சிறுவன் அன்றைய தினம் இரவு ஓட்டோவில் அழைத்து வரப்பட்டபோது பொலிஸாரால் மீட்கப்பட்டதோடு அதில் வந்த இந்திய நபரும், ஓட்டோச் சாரதியும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் இந்திய நபரைத் திருமணம் செய்துள்ளார். அவருக்குப் பிறந்த குழந்தை ஒன்று இருப்பதாகத் தெரிவித்து இந்திய நபரிடம் நீண்ட காலமாகப் பணம் பெற்று வந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இந்திய நபர் இலங்கை வந்துள்ளார். சிறுவனைப் பெண் தனது பிள்ளை என இந்தியருக்குக் காட்டுவதற்காகவே கடத்தியதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் பெண்ணை 14ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். புத்தளம் பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 ஆம் ஆண்டு வரை தேசிய அரசு தொடரும்

## மஹிந்த அமரவீர உறுதி



கொழும்பு, செப். 13

தேசிய அரசு தொடர்வதா இல்லையா என்பது தொடர்பில் 2020ஆம் ஆண்டிலேயே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். அதுவரை இன்றைய அரசு தொடரும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இனவாதக் கட்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடனான இணக்கப்பாட்டுத் தேசிய அரசு 2020 ஆம் ஆண்டு வரை தொடரும். நாடு கடன் சுமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதே வேளை பொருளாதார நெருக்கடியிலும் வீழ்ந்துள்ளது. இதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காகவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐ.தே. கட்சியுடன் இணைந்து இணக்கப்பாட்டுத் தேசிய அரசு ஏற்படுத்தப்பட்டது. எனவே இந்த ஆட்சி தொடரும். 2020 ஆம் ஆண்டில் மீண்டும் தேசிய அரசை ஏற்படுத்துவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும்.

அப்போது இடம்பெறும் தேர்தலில் ஐ.தே.கட்சி தனித்துப் போட்டியிடும். அதேபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்தே போட்டியிடும். அதன் பின்னர் தனித்து ஆட்சியமைப்பதே சுதந்திரக் கட்சியின் இலக்காகும்.

எனவே புதிய கட்சி ஆரம்பிக்க நினைப்போரும் சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிப்போரும் கட்சியில் இணையலாம். அதேவேளை, எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைச் சின்னத்தில் போட்டியிடும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் மேலும் பல கட்சிகள் இணையவுள்ளன. அதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இனவாதக் கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைத்துக் கொள்ளப்படமாட்டா. இனவாதிகளுக்கு எமது முன்னணியில் இடமில்லை – என்றார். (த-4)

# நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்க இடமளியோம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

நாட்டின் ஒருமைப்பாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் எந்தவொரு நடவடிக்கையிலும் அரசு ஈடுபடமாட்டாது எனவும், அதற்கு ஜாதிக ஹெல உறுமய இடமளிக்கப் போவதில்லையெனவும் அந்தக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமாகிய பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சியின் மாவட்ட கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போதும், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலின்போதும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாட்டின் ஒருமைப்பாடு குறித்து கூறிய பின்னரே மக்கள் வாக்களித்துள்ளனர். இதற்குமாற்றாக அந்தக் கட்சிகள் செயற்பட முடியாது.

நாட்டில் பௌத்த மதத்துக்கோ, நாட்டின் ஒருமைப்பாட்டுக்கோ எந்த விதத்திலும் பாதிப்பு வருவதற்கு ஜாதிக ஹெல உறுமய இடமளிக்கப்போவதில்லை–என்றார்.(த-4)

# புதிய கட்சி தொடர்பில் பேச்சுக்கள்

புதிய கட்சி ஒன்றை அமைப்பது தொடர்பில் ஆறு கட்சிகளுடன் கூட்டு எதிர்க்கட்சி பேச்சுக்களை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தலைமையில் இந்தப் பேச்சு கடந்த வாரம் நடை பெற்றுள்ளது. புதிய அரசியல் கட்சியொன்று உருவாக்கப்பட்டால் ஆதரவளிக்கத் தயார் எனக் குறித்த ஆறு கட்சிகளின் தலைவர்களும் உறுதியளித்துள்ளதாகக் கூட்டு எதிர்க் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (த-4)

# பம்பலப்பிட்டி தொடர்மாடி முடிவின்றி தொடரும் இழுபறி

கொழும்பு, செப் 13

பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டட விவகாரம் தொடர்பில், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பி வைக்கவுள்ள மனுவுக்குக் கையொப்பங்களைத் திரட்டிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம், எவ்விதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் கடும் வாக்குவாதங்களுடன் நிறைவடைந்துள்ளது.

பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டட நலன்புரி சங்கத்தினரால், சன சமுக நிலைய மண்டபத்தில் இந்தக் கூட்டம், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் கட்டப்படவுள்ள 60 மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்குச் செல்வதற்கு விரும்பவில்லை என்பதைக் கூட்டத்தில் பங்கேற்ற பலர் சுட்டிக்காட்டினர். ஆயினும் சிலர், 60 வருடங்கள் பழைமை வாய்ந்த கட்டடத்திலிருந்து புதிய கட்டடத்துக்குச் செல்வதற்கு விரும்பம் தெரிவித்தனர்.

எனினும், புதிய கட்டடத்துக்குச் செல்வதற்கு விருப்பமில்லை என்பதை வலியுறுத்தி, ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மனுவொன்றை அனுப்புவதற்கான கையெழுத்தைப் பெற்றுக்கொள்ளல், இந்த விவகாரம் தொடர்பில் நலன்புரி சங்கத்தினால் முன்னெடுக்கவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கை, நீதிமன்ற நடவடிக்கையை நாடுவதாயின் அதற்குத் தேவையான நிதியைத் திரட்டிக்கொள்ளல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே நேற்று முன்தினம் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

எனினும், கூட்டத்தில் பங்கேற்றவர்களில் பலர், மனுவில் கையொப்பமிடுவதற்கு மறுத்துவிட்டனர். இன்னும் சிலர், தங்களுடைய வீடுகளுக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு கோரினர்.

இந்தப் பிரச்சினை பொதுப் பிரச்சினை என்பதனால், வீடுகளுக்குச் சென்று கையொப்பங்களைப் பெறுவது உசித்தமற்றது என்று ஏற்பாட்டாளர்கள் மறுத்துவிட்டனர். இதனால், இந்த விடயத்தில் கருத்து முரண்பாடுகள் தோன்றின.

மாலை 4. 15 மணிக்கு ஆரம்பமான கூட்டம், எந்தவிதமான இணக்கப்பாடுமின்றி மாலை 5.30 மணிக்கு நிறைவடைந்தது.

சுமார் 300 குடும்பங்கள் வசித்து வரும் பம்பலப்பிட்டி தொடர்மாடிக் கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் 60 மாடிகளைக்கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு அமைச்சரவை 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் திகதியன்று அங்கீகாரமளித்திருந்தது. இந்த நிலையில், அந்தப் புதிய கட்டடத்தில் குறித்த தொகை மக்கள் குடியமர்த்தப்படுவர் என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் சரத்குமார அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை
12 ஆம் திருவிழா
தீர்த்தத் திருவிழா



தீர்த்துக் கொண்டோம் எங்கள்
தீராத வல்வினைகள், தீண்டத்தகாப் பாவங்கள்
எல்லாம் தீர்த்துக் கொண்டோம்!

ஆர்த்து மனித அலை ஆரவாரம் செய்ய மலர்
பூத்த துர்க்கா புஷ்கரிணி தீர்த்தம் கண்டே
தீர்த்துக் கொண்டோம் எங்கள்
தீராத வல்வினைகள், தீண்டத்தகாப் பாவங்கள்
எல்லாம் தீர்த்துக்கொண்டோம்!

வீணாகான புரம் விளங்கும் உழுகொடையில்
கானாமிர்தம் பொழியும் கவின்மிகு தெல்லிநகர்
தீனதயாபரியாம் ஸ்ரீ துர்க்கா தேவியம்மா! உன்
ஞானாகரமான நல்லதீர்த்தம் கண்டது மே...
தீர்த்துக்கொண்டோம் எங்கள்
தீராத வல்வினைகள், தீண்டத்தகாப் பாவங்கள்
எல்லாம் தீர்த்துக்கொண்டோம்!

கங்கையும் காவிரியும் கலந்து உள்ள தீர்த்தம்
பங்கமெல்லாம் தீர்க்கும் பாவநாச தீர்த்தம்
திங்களணி வேணியரின் திருச்சடைமேல்
- உள்ள தீர்த்தம்
பொங்குபுனல் துர்க்கா புஷ்கரிணி தீர்த்தம்
கண்டே தீர்த்துக் கொண்டோம்.

அனுசரணை: க. தம்பிரட்ணம் குடும்பம்
தெல்லிப்பழை.
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.






செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (13.09.2016)
செவ்வாய்க்கிழமை
13 ஆம் திருவிழா

சகலவிதமான பந்தல், மணவறைகள் மற்றும்
பலூன் அலங்காரம், சகலவிதமான
அலங்காரங்கள், பாத்திரங்கள், திருமணக்கார்,
வான் சேவைகள் அனைத்தையும் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

கீதன் பந்தல் &
கீதன் டெக்கரேஷன்

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு.
காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு.
T.P.077 527 3660/ 021 492 7771

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சப்பைக்கட்டுக் குற்றச்சாட்டுக்களை மறைக்கும் போக்கு வேண்டாமே!

• இலங்கை அரசு, நாட்டில் நல்லிணக்கத்தை உண்டாக்குவதில், மிகவும் மெதுவான நடைமுறைகளையே கையாள்கிறது.

• அதேவகை சார்ந்து, அட்டை போன்று நகரும் போக்கையே தனதாக்கிக் கொண்டுள்ளது.

• 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற போரின் போதும், அதன் பின்னரும், இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களில் பெரும்பாலானவை தொடர்பில்,-- விசாரணைகள் நடத்தப்படவும் இல்லை, தண்டனை வழங்கப்பட்டதாகவும் இல்லை.

• மேற்கூறியவற்றின் விளைவாக பொறுப்புள்ள பலர் தண்டனை எதுவுமே இன்றித் தப்பியுள்ளனர்.

• காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்களிடம், காணாமற்போனோர் குறித்த தகவல் எதுவும் இதுவரை பகிரப்படவில்லை.

• தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக, உறவினர்கள் காணாமற்போனோர் குறித்துத் தகவல்களை அறிந்து கொள்ள உரிய வாய்ப்புக் கிடைக்காமல் (வேண்டுமென்றே) செய்யப்பட்டு விட்டது.

மாறி மாறி ஆட்சியில் அமர்ந்திருந்த அரசுகள், மேற்போந்தவற்றை மூடி மறைக்கும் தடத்திலேயே கால்பதித்து காலத்தைக் கடத்தி இருந்தன.

மேற்போந்த குற்றச்சாட்டுக்களை படர விட்டுள்ளது, அனைத்துலக மன்னிப்புச்சபை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 33 ஆவது அமர்வு இன்று (13.09.2016 இல்) ஆரம்பமாக உள்ள தருணத்தில், இலங்கை நிலவரம் குறித்த அனைத்துலக மன்னிப்புச் சபையின் எழுத்துமூல அறிக்கை மேற்கண்ட தகவல்களை வெளிப்படுத்துவது, பகிரங்கப் படுத்துவது மிகவும் பொருத்தமானதும், வரவேற்கத்தக்கதும் ஆகும்.

அதனைக் கருத்திற் கொண்டு தான் போலும்,--போரின் பின்னரான நல்லிணக்கத்தை எட்டுவதில், தமது (இப்போதைய) அரசு வேகமற்றுச் செயற்படுவதாக--

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒப்புக் கொண்டுள்ளார் எனக் கொள்ள வேண்டி உள்ளது.

• நல்லிணக்கத்தை ஒரே தடவையில் உண்டாக்க இயலாது. கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, அவதானமாகச் செயற்படுத்துதல், அவற்றின் தொடர்ச்சித் தன்மையைப் பேணுதல் மற்றும்-

உறுதியான செயற்பாடுகள், தேவை ஈன்று அமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அத்தோடு அவர் நிற்கவில்லை. தமது அரசின் அணுகுமுறை மிக மெதுவான ஒன்று என்று சாயம் பூசும் பாணியில் குதப்பிச் சொதப்பியுள்ளார்.

நல்லிணக்கம், என்ன சுக்கா மிளகா என்ற வினாவை வெளிப்படுத்தி-- நல்லாட்சி அரசின் இயலாமையைப் பகிரங்கப்படுத்தி உள்ளார்.

அதற்கு வலுச் சேர்க்கும் பாங்குடன், அரசின் அணுகுமுறை மிக மெதுவானதாகவே அமையும் என்பதையும் கோடி காட்டி உள்ளார்.

மொத்தத்தில், நாட்டுக்கு இன்றியமையாத நல்லிணக்கமும் சரி, பாதிப்புற்றோருக்கான விமோசனமும் சரி, இப்போதைக்கு நடைமுறைச்சாத்தியம் இல்லை என்பதை, நிறம் பூசிக் காட்டி உள்ளார் என்று கொள்ளும் நிலையே, நிரந்தரமாக நீளும் என்பதை, அரசியல் சங்கேத மொழியில் அவர் 'வள்ளிசாக' வகைப்படுத்தி உள்ளார்.

அவ்வளவே...!



ஓர் ஆயுதப் போராளியாக, பின்னர் அரசியல் போராளியாக உருவெடுத்த திலீபன், ஆரம்பத்தில் ஒரு மருத்துவபீட மாணவன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணையாது உயிரோடு வாழ்ந்திருந்தால் இன்று திலீபன் பெரியதொரு வைத்திய நிபுணராக இருந்திருக்கலாம். காலத்தின் தேவைகருதி தனது மருத்துவப் படிப்பை உதறிவிட்டு தமிழினத்துக்காகப் போர்க்களத்தில் இறங்கியவன்.

மு.ஈழத்தமிழ்மணி

ஈழத்தமிழ்மக்கள் சார்பிலான ஐந்து அம்சக் கோரிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் இந்திய அரசிடம் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன் வைக்கப்படுகின்றது. அந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனு 13.09.1987 அன்று இந்திய உயர் ஆணையர் கையில் நேரடியாகக் கிடைக்கக் கூடியதாகவும் அனுப்பிவைக்கப்பட்டு, பதிலளிக்க 24 மணிநேர கால அவகாசமும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்திய அரசிடமிருந்து விடுதலைப்புலிகளுக்கு எந்தவிதமான பதிலும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிவரை கிடைக்காத காரணத்தால், சாகும் வரை பட்டினிப்போராட்டமும், மறியல் போராட்டமும் நடத்துவதென தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன் படியே திலீபன் (இராசையா பார்த்தீபன்) அகிம்சைப் போராட்டப் பயணத்துக்கு உடன் தயாரானான்.

தியாகி திலீபன் தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி காந்தியம் போதித்த அகிம்சையைத் தன் வழிப்படுத்திக் கொண்டான். தமிழ்க்கடவுளான நல்லூர்க் கந்தன் ஆலய வடமேற்குப் பகுதியில் தனது போராட்டத்துக்கான இடத்தையும் தெரிவு செய்து கொண்டான். அக்கினிக் குஞ்சாக மாறினான் திலீபன். இந்திய வல்லாதிக்கத்தின் வஞ்சக நகர்வுக்கு எதிராகப் போராட்ட வடிவத்தை மாற்றியமைப்பதற்காகத் தேரோடும் நல்லூர் வீதியில் 15.09.1987 அன்று தனது வேள் விக்கு புறப்படுகின்றான்.

ஓர் ஆயுதப் போராளியாக, பின் அரசியல் போராளியாக உருவெடுத்த திலீபன், ஆரம்பத்தில் ஒரு மருத்துவபீட மாணவன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணையாது உயிரோடு வாழ்ந்திருந்தால் இன்று திலீபன் பெரியதொரு வைத்திய நிபுணராக இருந்திருக்கலாம். காலத்தின் தேவைகருதி தனது மருத்துவப் படிப்பை உதறிவிட்டு தமிழினத்துக்காகப் போர்க்களத்தில் இறங்கியவன்.

## ஆரம்பம்

திலீபன் என்னும் மெல்லிய உருவம், செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முற்பகல் நேரம், நல்லூர் வீதியில் மக்கள் திரண்டு நிற்க, தமிழ்த் தாயொருவர் நெற்றியில் சந்தனத் திலகமிட்டு ஆசி வழங்க புன்னகை பூத்தவாறு மேடையை நோக்கிச் செல்கின்றது. மேடையில் ஏறியதும் கூடியிருந்த தமிழ்மக்களும் திலீபனைத் தங்களது குடும்பத்துப் பிள்ளையாக எண்ணிப் பெருமை கொள்கின்றனர். 1986ஆம் ஆண்டு வரையில் பல போர் முனைகளில் இலங்கைப் படைகளுக்கு எதிராகக்களம்பலகண்ட போராளியான திலீபன், ஆயுதமின்றி வெறும் கையுடன் போராட்டம் காண அகிம்சை என்ற ஆயுதத்தை ஏற்று மேடையில் அமர்ந்து கொண்டான்.'

அவன் சத்தியம், தர்மம் என்பவையே இந்திய தேசத்தைச் செவிசாய்க்க வைக்கும் என்பதையுணர்த்துவதற்கு ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உண்ணா நோன்பை ஆரம்பிக்கின்றான். அகிம்சைப் போராட்டத்தின் மூலம் அரசியலில் உரிமைகளைப் பெறமுடியும் என்று உலகுக்கு மகாத்மா காந்தி உணர்த்தியிருந்தார். அந்த அகிம்சை தமிழ் மக்களது ஐந்து கோரிக்கைகளுக் கும் வலுச்சேர்க் கும் என்ற அசைக்க முடி யாத நம்பிக்கையில்களம் இறங்குகின்றான்.

## கோரிக்கைகள்

01. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

02 பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அதுவரை தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

03. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

04.இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

05.இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்காவற் படையினர் என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திருப்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் குடிகொண்டுள்ள இராணுவம், பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

இந்த ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே திலீபனது உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பமானது.

இலட்சிய உணர்வோடும் விடுலையுணர்வோடும் முதலாம் நாள் போராட்டத்தை ஆரம்பித்த தியாகி திலீபன் ஒருதுளி நீரைக் கூட அருந்தாது தனது அறப் போரை 12 நாள்வரை தொடர்ந்தான்.

## திலீபன்

யாழ்ப்பாணத்திலுள்ள ஊரெழு என்ற கிராமத்தில் 1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி இராசையா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தான். சிறுவயது முதலே படிப்பிலும், விளையாட்டிலும் மிகவும் கெட்டித்தனமுடையவனாக விளங்கினான்.


சகலரிடமும் அன்பாகப் பழகும் குணம் கொண் டிருந்த திலீபன், கல்வியில் உயர்ந்து விளங்கி பல்கலைக் கழகம் செல்லும் நிலையை எட்டியிருந்தான். மருத்துவபீடத்துக் குத் தெரிவாகிய திலீபனின் பாதை வேறாக அமைந்து விட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நயவஞ்சகத்தை உலகுக்கு வெளிப்படுத்தியவன்

# தியாகி திலீபன்



முன்னை நாள் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான அரசு, தமிழ் மக்கள் மீதான இனக் கலவரங்களை 1977ஆம் ஆண்டிலும் 1983ஆம் ஆண்டிலும் கொடூரமான முறையில் கட்டவிழ்த்திருந்தது. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் எழுச்சி பெறவும், தீவிரமடையவும் ஜூலைக் கலவரமே மூல காரணமாகியது. ஜூலை மாதக் கலவரத்திலேயே வெலிக்கடைச் சிறைச்சாலையில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 52 தமிழ் அரசியல் கைதிகள் கண்கள் தோண்டப்பட்டு, கைகால்கள் வெட்டப்பட்டு துடிதுடிக்கப் படுகொலை செய்யப்பட்டனர். சிறிமாவோ அரசால் தமிழ் மாணவர்களது திறமையை மழுங்கடிக்கச் செய்யும் 1972ஆம் ஆண்டு தரப்படுத்தல் திட்டம் கொண்டு வரப்பட்டது. இவை திலீபனின் மனதில் விடுதலைத் தீயையும், போர்க்குணத்தையும் ஏற்படுத்தின. மருத்துவபீடத்துக்குத் தெரிவாகிய திலீபன் மருத்துவக் கல்வியை தூக்கியெறிந்து விட்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து ஆயுதப் போராளியாக உருவெடுத்தான். இயக்கத்தில் இணைந்து படிப்படியாக உயர்ந்து யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப்பொறுப்பாளராக பொறுப்பேற்றுக்கொண்டான். அறிவுக்கூர்மை, திறமைகள், பேச்சாற்றல், சிந்திக்கும் தன்மை, கள்ளம் கபடமற்ற உள்ளம் போன்றவை ஒருங்கே அமைந்திருந்தமையால் தமிழ் மக்களின் அன்புக்கு பாத்திரமாக விளங்கினான்.

### புகட்டிய பாடம்

உண்ணாநோன்புப் போராட்டத்தை தானே விரும்பியேற்ற திலீபன், அதில் விடாப் பிடியாகவே நின்றான். விடுதலைப் புலிகளின் தலைமையிடம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தான். அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது. காந்தியதேசத்துக்கு அகிம்சை என்றால் என்னவென்று பாடம் புகட்டப் போகின்றேன் என்றவாறு தனது உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினான். இந்திய தேசம் திலீபனின் அறப் போராட்டத்தைக் கண்டு வெறுப்படைந்தது. ஒருநாள் இரண்டுநாள், மூன்று நாள்கள் என ஒரு வாரத்தைக் கடந்து சென்றும், இந்திய அரசு திலீபனின் போராட்டத்தைக் கண்டு கொள்ளவேயில்லை.

தியாகத்தால் உயர்ந்த திலீபன் அன்று 24வயது வாலிபனே. அன்றைய கால கட்டத்தில் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிகளோ, நாகரிகச் சிந்தனைகளோ இருக்கவில்லை. அத்தகைய சூழலில் திலீபன் தனது பார்வையாலும் சிந்தனையாலும் விடுதலை என்ற பெரும் நெருப்பை பன்னிரண்டு நாள்களும் மேடையிலே பெரும் தீயாக மூட்டிக் கொண்டிருந்தான். மண்ணின் விடிவுக்காய், விடுதலைக்காய் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி மு.பகல் 10.58 மணிவரை தன்னை நல்லூர் வீதியில் உருக்கிக் கொண்ட தியாகியாக வீரசுவர்க்கம் எய்தினான்.

தாகத்தோடும், பசியோடும் பன்னிரண்டு நாள்கள், 265 மணித்தியாலங்களாக இந்திய தேசத்துக்கு தமிழ் மக்களது அபிலாசையை உணர்த்துவதற்காக அகிம்சை என்ற ஆயுதத்தை ஏந்தி, ஈழத் தமிழர்களின் விடியலுக்காகப் போராடி, அமைதியாக தனது உயிரை ஈகம் செய்த தியாகச் செம்மல் திலீபன், இறுதியாக முன்வைத்த உறுதிமிக்க வார்த்தைகள் இன்றும் எமது காதுகளில் ரீங்காரம் செய்கின்றன.

### இறுதி வார்த்தைகள்

“என்மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக்கணக்கில் புரட்சிக்குத் தயார்ப்படுத்தப்பட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தியடைகின்றேன். நான் வாழுகின்ற மண்ணில், இந்தத் தமிழீழ மண்ணில், வாழ்கின்ற அனைவரும் இந்தப் புரட்சிக்குத் தயாராக வேண்டும். நான் உயிருக்கு உயிராக நேசிக்கும் உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கின்றேன். நீங்கள் அனைவருமே பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும்”

தான் மூட்டிய போராட்டத்தீயின் இறுதிக் கணங்களில், திலீபனது இதயத்திலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளே இவை.

தியாகி திலீபன் சொன்ன வார்த்தைகள் இன்றும் உயிர்ப்புடனேயே உள்ளன. திலீபனின் மக்கள் புரட்சி குறித்தும், அதை முன்னெடுக்கும் வழிமுறை குறித்தும் சிந்திக்க வேண்டிய நிலையில் தமிழர்கள் இன்று உள்ளனர். திலீபன் உயிரை உருக்கி ஒளியானான். அர்ப்பணிப்புகள் வீண்போகாது.

அகிம்சை என்ற பதத்துக்கு அர்த்தம் கொடுத்த தேசமான இந்தியாவின் காலப்போக்கிலான நயவஞ்சகத்தின் உண்மைத் திரையைக் கிழித்தெறிந்த திலீபன் ஈழத்தில் இன்றும் வாழுகின்ற ஈகையாளன்.

நல்லூர் ஆலய முன்வீதியில் நடந்து சென்று மேடையிலேறி திலீபன் தனது உண்ணாநோன்புப் போராட்டத்தை ஆரம்பித்த நாளான அந்தச் செப்ரெம்பர் 15 ஆம் திகதியை ஈழத் தமிழர்களால் ஒருபோதும் மறக்கவே இயலாது.

## இரணைஇலுப்பைக்குளம் வீதி உரிய முறையில் புனரமைக்கப்படுமா?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய மாற்றம் ஒன்று கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் தோற்றம் கொண்டது. தோற்றம் கொண்ட இந்த நல்லாட்சி அரசின் இற்றை வரையான நிர்வாகத்தில் தமிழ் மக்களுக்குக் கிட்டிய நன்மைகள் என்ன? என்று ஓர் ஆய்வு செய்யப்பட்டால், குறிப்பிடத்தக்க அளவுக்கு எதுவும் இல்லை என்பதே பதிலாகக் கிட்டும். அரசியல் ரீதியாக என்று மட்டுமல்லாது, தமிழ் மக்களுக்கான, தமிழ்ப் பிரதேசங்களுக்கான புனரமைப்பு, புனர் நிர்மாணம் என்பவற்றில் கூட பெருமளவில் நன்மைகள் எதுவும் கிட்டிவிடவில்லை. மேற்கூறப்பட்ட கருத்துக்களுக்கு அமைவாக நான் உதாரணமாகக் குறிப்பிடுவது கடந்த 30 வருடங்களாக எந்தவித புனரமைப்புமின்றி இருக்கும் இரணை இலுப்பைக்குளம் வீதியின் நிலையையாகும். இந்த வீதி, வவுனியாவிலிருந்து மன்னார் செல்லும் வீதியிலிருந்து பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு அண்மித்தால் போல் வடக்கு நோக்கிச் செல்லும் 10 கிலோ மீற்றர் நீளமான வீதியேயாகும். இந்த வீதி மேற்குறித்த இடத்தில் ஆரம்பித்து, வலைஞான் கட்டு கிராமத்துக்கு அப்பாலும் மூன்றுமுறிப்பு, பனங்காமம் துணுக்காய்வரை நீண்டு செல்லும் வீதியாகும். ஆனால் தற்போது, முக்கியமாக இந்த வீதியில் இரணை இலுப்பைக்குளம் வரை மட்டுமே பஸ் சேவை நடைபெறுகிறது. எனவே தான் குறிப்பாக இரணைஇலுப்பைக்குளம் வீதி எனக் குறிப்பிட்டுள்ளேன். இதுவரை இந்த வீதியின் அவல நிலையைப் பலர் பத்திரிகைகளில் பல முறை குறிப்பிட்டபோதிலும், எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இந்தப்பகுதி மக்கள் இந்த வீதியின் நிலை குறித்த தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தி, பூவரசங்குளம் ஊடாக இரணைஇலுப்பைக்குளம் செல்லும் சந்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். சம்பவ இடத்துக்கு வவுனியா மாவட்டச் செயலர், வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள் யாவரும் வருகைதந்து, அன்றைய தினத்திலிருந்து இருவார காலத்தினுள் குறிப்பிட்ட வீதி செப்பனிடப்படும் என்றார்கள்.

ஆனால், தற்போது பூவரசங்குளம் சந்தியிலிருந்து சொ[illegible]துக்கு மட்டுமே கருங்கற்கள் போட்டு, தார் ஊற்றப்பட்[illegible] எஞ்சியுள்ள வீதி ஏற்கனவே கிரவல் வீதி. இதற்கு மீண்டும் கிரவல் போட்டு சீர் செய்வதற்கான செயற்றிட்டங்கள் நடைபெறுகின்றன. எனவே கிரவல் போட்டு செப்பனிட்டால் மீண்டும் பழைய குருடி கதவைத்திறவடி, என்ற முதுமொழிக்கு அமைவாகவே இந்த வீதியின் நிலை அமையும்.

எனவே இந்த வீதிக்கு முழுமையான முறையில் கருங்கற்கள் போட்டு சரியான முறையில் செப்பனிடப்பட்டு தார் போடப்பட வேண்டுமேதவிர, வெறுமனே இந்தப் பகுதி மக்களை ஏமாற்றும் செயலாக கிரவல் போட்டு சமாளிக்க முயல்வது மிகவும் வருத்தம் தருவதாக உள்ளது. இந்த வீதியின் புனரமைப்பு நிலை பற்றி உரிய அதிகாரிகளுக்கோ, அல்லது அந்தந்தத் திணைக்களங்களுக்கோ தெரியப்படுத்த வேண்டியவர்கள் யார்? இது தொடர்பில் இதனைச் செய்ய வேண்டியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. இது அவர்களது கடமையாகும். இருந்தும் அவர்கள் இந்த விடயத்தில் இதுவரை அக்கறை காட்டிச் செயற்படத் தவறுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகவே உள்ளது. இந்த வீதியின் நிலைபற்றியும், புனரமைப்புப் பற்றியும் ஏகப்பட்ட கருத்துக்கள் பல, தமிழ் அபிமான பத்திரிகையான உதயனில் பல முறை பிரசுரிக்கப்பட்டன. அவைகளையும் இந்த வேளையில் நினைவுகூர வேண்டியுள்ளது.

எமது தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மேற்குறித்த விவரங்கள் சமர்ப்பணம். தமிழ் மக்களது பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தைத் தங்களது கருத்தில் எடுத்து, இந்த வீதிப் புனரமைப்பை முறைப்படி செப்பனிட்டு, தார் ஊற்றி இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களது சிரமமற்ற போக்குவரத்துக்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டுமென இந்தப்பகுதி மக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இந்தப் பகுதி மக்கள் சார்பில்
பனங்காமத்தான்

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். [illegible] விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. [illegible] விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேபிள் காரில் சிக்கிய பயணிகள்

பாரிஸ், செப். 13
ஐரோப்பியாவின் மிக உயரமான மலையான அல்ப்ஸ் மலைத் தொடரில் கேபிள் காரில் பயணித்த சுற்றுலாப் பயணிகள் 50 பேர், 3 ஆயிரம் மீற்றர் உயரத்தில் சிக்கிக்கொண்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.
பிரான்ஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அல்ப்ஸ் மலைத் தொடரில் கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனையடுத்து பிரான்ஸ், இத்தாலி மற்றும் சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த உலங்கு வானூர்திகள், பயணிகளை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டன. அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் என்பன வழங்கப்பட்டு பின்னர் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். (ம-ரி4)

## காஷ்மீரில் பதற்றம்

காஷ்மீர் பகுதிக்குள் ஊடுருவ முயன்ற ஏழு ஆயுத தாரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் நால்வர் நேற்று முன்தினமும், மூவர் நேற்று அதிகாலையும் கொல்லப்பட்டனர். பொலிஸ் தரப்பில் ஒருவர் சாவடைந்தார்.
காஷ்மீரின் பூஞ்ச் பகுதியில் புதிதாகக் கட்டப்படும் ஒரு வீட்டில் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. அந்த இடத்தை பொலிஸாரும், இராணுவத்தினரும் சுற்றி வளைத்தனர். இரு தரப்புக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. மூன்று ஆயுத தாரிகள் சாவடைந்தனர். பொலிஸ் தரப்பில் ஒருவர் சாவடைந்தார்.
நேற்று அதிகாலை குறித்த பகுதியில் உள்ள இராணுவ முகாம் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்த முற்பட்டனர். இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சூடு வலுப்பெற்றது. இதில் நான்கு ஆயுத தாரிகள் சாவடைந்தனர். இரு இராணுவத்தினர் காயமடைந்தனர்.
(ம-ரி4)

# ஏமனில் கொடும் பட்டினி; உள்நாட்டுப்போர் காரணம்


வெறும் ஒன்றரைக் கிலோ நிறையுள்ள 20 மாதக் குழந்தை.

சனா, செப்.13
ஏமனில்நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் காரணமாக அங்குள்ள மக்களும், குழந்தைகளும் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர்.
கடந்த சில வருடங்களாக ஏமனில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதுவரை 6 ஆயிரத்து 600 பேர் சாவடைந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. ஏமனின் படைகளும், சவுதி அரேபியாதலைமையிலான கூட்டுப் படைகளும் அந்த நாட்டின் கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராக குண்டுமழை பொழிகின்றன. 2015 ஆம் ஆண்டு முதல் இந்தத் தாக்குதல் அதிகரிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் ஏமன் அரசு, கிளர்ச்சிக் குழு என இருதரப்புக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுத்தது. ஆனால் பயனளிக்கவில்லை. தற்போது அங்கு போர்ச்சூழல் மேலும் உச்சத்தைத் தொட்டுள்ளது. போர் ஒருபுறம் இருக்க மறுபுறம் பட்டினி தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏமன் மக்கள் போர், பட்டினி என இருமுனைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர்.
ஏமன் குழந்தைகள் போசாக்குக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டனர். ஹொடைடா பகுதியில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளின் படங்கள் அண்மையில் வெளியாகின. எலும்பும் தோலுமாக உள்ள குழந்தைகளின் குறித்த படங்கள் உலகின் மனசாட்சியை ஆட்டம் காணச் செய்தன. இதனையடுத்து குறித்த பகுதியில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர உலகெங்கிலும் உள்ள சமூக ஆர்வலர்களினால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை இருதரப்புக்கும் மீண்டுமொரு தடவை தற்போது அழைப்புவிடுத்துள்ளபோதிலும் எந்தத்துலங்கல்களும் வெளிப்படுத்தப்படவில்லை. ஏமனின் தலைநகர் சனா, கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (ம-ரி4)

# கிம் யோங் உன் மீது அதிரடித் தடை பொருளாதாரத்தை நெருக்கவும் முடிவு

பியாங்யாங், செப். 13
வட கொரியாவின் ஐந்தாவது அணுகுண்டுச் சோதனையை மிகையாகக் கண்டித்த அமெரிக்கா அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன்னுக்கு தடையும் விதித்தது. தவிர வடகொரியாவுடன் ஏனைய நாடுகள் கொண்டுள்ள பொருளாராத ஒப்பந்தங்களைக் கைவிடவும் முடிவு செய்யப்பட்டது.
வடகொரியாவின் புஞ்சி என்ற பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அணுகுண்டு ஏவுகணையை வட கொரியா பரிசோதனை செய்தது. சோதனையின் போது 5.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டதாகவும் இதனால் தனது இருப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் அயல்நாடான தென்கொரியா அச்சம் வெளியிட்டது. இதனையடுத்து குறித்த சோதனைக்கு தனது கண்டனத்தை தெரிவித்த அமெரிக்கா, வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன்னுக்கு தடை விதித்தது.
ஆசியாவில் உள்ள எமது நட்பு நாடுகளுக்கு பாதுகாப்பு வழங்குவதை நாம் கைவிடப் போவதில்லை. சோதனை நடத்தப்பட்ட பகுதி




யின் புவியீர்ப்புக்கு அச்சறுத்தல் ஏற்படுத்தப்பட்டதுடன், பன்னாட்டு அமைதியைக் குலைக்கும் செயலாக அமைந்துள்ளது. வட கொரியாவை அணு ஆயுத நாடாக நாம் அங்கிகரிக்கவில்லை. ஒரு பொழுதும் அங்கீகரிக்கப் போவது[illegible] என ஒபாமா தனது கண்டன[illegible] கையில் குறிப்பிட்டார்.
ஐக்கிய நாடுகள் சபை தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் வடகொரியாவின் மீது ஏற்கனவே விதித்த தடையை மேலும் இறுக்கியது. சீனா, வடகொரியாவுக்கு எரிபொருளை வழங்கி வருகிறது. இந்த ஒப்பந்தத்தையும் முவுக்குக் கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை அழுத்தம் கொடுக்கப் போவதாகத் தகவல்கள் வெளியாகின. முன்னதாக வடகொரியாவின் நிலக்கரி ஏற்றுமதி தடைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் தமக்கு எதிரான அமெரிக்காவின் போக்கும், அந்த நாடு விதித்துள்ள தடையும் அர்த்த மற்றது எனக் குறிப்பிட்ட வடகொரிய வெளிவிவகாரத்துறை அமைச்சு, [illegible] தது.
(ம-ரி4)


ஒலிம்பிக் தொடர் நடைபெற்ற பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரின் ஒரு
மறுபக்கத்தில் ஆடம்பர வசதிகள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பு. இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரி தண்ணீர் விவகாரம் கன்னடர் – தமிழர் மோதல்

தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் கொடுத்த விவகாரம், கன்னடர் – தமிழர் மோதலாக மாற்றம் பெற்றது. கர்நாடகாவில் தமிழரும் தமிழ்நாட்டில் கன்னடரும் தாக்கப்படுகின்றனர்.

தமிழ் நாட்டின் விவசாய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பயிரிடப்பட்டது. தமிழ் நாட்டில் நிலவிய தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த விவகாரம் இந்திய உச்ச நீதி மன்றத்திடம் எடுத்துச்செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த மன்று வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி வீதம் 10 நாள்கள் தண்ணீர் வழங்குமாறு கர்நாடகாவை உத்தரவிட்டது. தமிழ் நாட்டுக்கு காவிரி அலைபுரண்டதை யடுத்து கர்நாடகாவில் போராட்டங்கள் வெடித்தன. ஆரம்பத்தில் கர்நாடாகா, தமிழ் நாடு என இரு மாநில அரசுகளுக்கு எதிராகத் தோற்றம் பெற்ற இந்தக் கலவரம் பின்னர் படிப்படியாக தமிழர், கன்னடர் எனும் இரு தரப்பினருக்கு இடையிலான கலவரமாக மாற்றம் பெற்றுள்ளது.


கர்நாடகாவில் தமிழர் தாக்கப்பட்டதையடுத்து தமிழ்நாட்டுக்கு சுற்றுலா வந்த கன்னடர் நேற்றுக் காலை தாக்கப்பட்டனர். கர்நாடகாவின் இலக்கத்தகடுகள் பொறித்த வாகனங்கள் தமிழ்நாட்டில் அடித்து நொறுக்கப்படுகின்றன. இதையடுத்து குறித்த விவகாரம் இரு தரப்பினருக்கான மோதலாக மேலும் உருப்பெறலாம் என அச்சம் வெளியிடப்பட்டது.

இதற்கிடையில், காவிரி நீரை தமிழ்நாட்டுக்கு வழங்குவதில் சிக்கல் இருப்பதாக கர்நாடகா தொடர்ந்த வழக்கு நேற்று விசாரணைக்காக வந்தது. கர்நாடகாவின் கருத்தை ஏற்க மறுத்த மன்று ஏற்கனவே தீர்ப்பிட்டபடி எதிர் வரும் 20 ஆம் திகதிவரை நீரை வழங்கியாக வேண்டும் என்று உத்தரவிட்டது.

(ம-ரி4)



கர்நாடகாவில் தீக்கிரையாக்கப்படும் தமிழர்களது வாகனங்கள்.



# உலகச் செல்வந்தர் தரவரிசையில் பில்கேட்ஸை பின்தள்ளினார் ஒரேகா

வொஷிங்டன், செப். 13

உலகச் செல்வந்தர்கள் தர வரிசையில் தொடர்ச்சியாக முதலிடத்தில் இருந்து வந்த அமெரிக்காவின் பில்கேட்ஸை ஸ்பெய்னின் செல்வந்தரான அமன்சியோ ஒரேகா பின் தள்ளினார்.

பில்பேல்க்ஸ் 78.1 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் முதலிடத்திலும், அமென்சியா 77.8 மில்லியன் டொலர்களுடன் இரண்டாம் இடத்திலும் இருந்தனர். கடந்த வியாழக்கிழமை காலை பன்னாட்டு பங்கு வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றத்தால் பில்கேட்ஸ் 1.7 பில்லியன் டொலர்கள் அளவுக்கு சரிவுகண்டார். இதனையடுத்து அமென்சியா முதலிடம் பிடித்தார்.

சாதாரண ரெயில்வே பணியாளரின் மகனான அமன்சியா, களஞ்சிய எழுதுநராகவே தனது வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் அவரும் அவரது மனைவியும் இணைந்து, இரவு ஆடைகளை உற்பத்தி செய்யத்திட்டமிட்டனர். இலங்கைப் பெறுமதியில் 14 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான முதலீட்டிலேயே இவர்களது வியாபாரம் ஆரம்பமானது. படிப்படியாக தமது வியாபாரத்தை விஸ்தரித்து 1975 ஆம் ஆண்டு சாரா என்ற பெயரில் நிறுவனத்தை நிறுவினர். 1984 ஆம் ஆண்டு ஸ்பெயினில் 9 கிளைகளை விஸ்தரித்தனர். மிகத் துரிதமாக முன்னேற்றம் கண்டு 2002 ஆம் ஆண்டு உலகப் பணக்காரர்கள் வரிசையில் 25 ஆவது இடத்தைப் பிடித்தார். தற்போது உலகப் பணக்காரராக வலம் வருகிறார்.

பில்கேட்ஸ் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டாலும் அவரது பின்னடைவை நிபுணர்கள் பலர் ஏற்க மறுக்கின்றனர். தமது வாதத்துக்கான காரணமாக அவர் இதுவரை 31 பில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியமையை அவர்கள் குறிப்பிட்டனர்.

(ம-ரி4)

# பிரிட்டன் வெளியேறினால் அபிவிருத்தியடையும் நாடுகளுக்குச் சிக்கல்

லண்டன், செப். 13

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வருடத்துக்கு 323 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்டுகளை இழக்க நேரிடும் என பிரிட்டன் பல்கலைக்கழக ஆய்வொன்று தெரிவித்தது.

பிரிட்டனின் பொருளாதாரம், வேலை வாய்ப்பு, பட்டப்படிப்பு என்பன ஏனைய நாடுகளுக்கும் பகிரப்படுவதையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலான மக்கள் பிரிட்டன் விலக வேண்டும் என்று தெரிவித்ததையடுத்து விலகுவது என்று முடிவெடுக்கப்பட்டது. இருப்பினும் இன்று வரை பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகவில்லை. இந்த நிலையில் பிரிட்டனின் பல்கலைக் கழகமொன்று நடத்திய ஆய்வில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகினால், அது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் பாதிக்கும் என்பது வெளிப்பட்டது.

பிரிட்டன் விலகினால், அந்த நாடு ஐரோப்பிய ஒன்றியங்களை வைத்து மேற்கொண்ட ஒப்பந்தங்கள் தடைப்படும். இதனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பிரிட்டனை மையமாக வைத்து மேற்கொண்ட, மேற்கொள்ளத் திட்டமிட்ட ஒப்பந்தங்கள் பயனற்றுப் போகும். எனவே இத்தகைய பின்னணியிலேயே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சிக்கல் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இருப்பினும் பிரிட்டனுடன் நேரடி ஒப்பந்தங்களை ஒவ்வொரு நாடுகளும் மேற்கொள்வது அதிகரிக்கும் என்றும் குறித்த ஆய்வில் அறியப்பட்டது.

(ம-ரி4)



...ன் ஒரு பகுதித் தோற்றமே இது. ஒரு பக்கத்தில் சேரிப்புறம். ...பு, இவை இரண்டையும் ஒரு சுவரே பிரிக்கிறது. (ம-ரி4)

# 1000 ரூபா மீனுக்கு 60,000 ரூபா செலவு


சிட்னி, செப். 13

இலங்கை மதிப்பில் ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய ஒரு மீனுக்கு 60 ஆயிரம் ரூபாய் செலவில் சிகிச்சை செய்த சம்பவம் ஆஸ்திரேலியாவில் அரங்கேறியது.

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் நகரில் வசித்துவரும் பெண் ஒருவர் இலங்கை மதிப்பில் ஆயிரம் ரூபாய்களை கொடுத்து மீன் ஒன்றை வாங்கி கடந்த ஒரு வருடமாக வளர்த்து வந்தார். சில தினங்களாக தனது மீன் உடல்சுகவீனம் உற்றிருப்பதை உணர்ந்த குறித்த பெண். தனது மீனை மிருக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார். பரிசோதனை செய்ததில் மீன், தொட்டியில் இடும் அலங்காரக் கல்லை விழுங்கியமை தெரியவந்தது. இதனையடுத்து சிகிச்சை செய்து கல் அகற்றப்பட்டது. இந்தச் சிகிச்சைக்கு இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 60 ஆயிரம் ரூபாய்கள் செலவானது என பன்னாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

(ம-ரி4)





## காது கேட்காதவர்களுக்கு

# ஹைட்டியில் கிராமம்

பாட்–அவ்–பிரின்ஸ், செப். 13

ஹைட்டியில் காது கேளாதோருக்காக பிரத்தியேக கிராமம் அமைக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு ஹைட்டியின் பாட் அவ் பிரின்ஸ் நகரில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டது. பலர் சாவடைந்தனர். இதனையடுத்து குறித்த பகுதியின் புனரமைப்பு நடவடிக்கைக்கு அமெரிக்கத் தொண்டுநிறுவமொன்று உதவ முன்வந்தது. 615 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவற்றில் 115 வீடுகள் காதுகேட்காவர்களுக்கானவை. இந்த 115 வீடுகளும் சேர்த்து ஒரு சிறிய கிராமமாக கட்டமைக்கப்பட்டது. இதனால் குறித்த பகுதியில் காதுகேட்காதவர்களுக்கு என ஒரு கிராமம் உருவானது. இவர்களுக்கு என சிறப்புப் பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் என்பனவும் குறித்த கிராமத்தில் உள்ளன.

(ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத பலன்




## தனுசு

**செப்ரெம்பர் 1 - 31 வரை**

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எந்தச் சூழ்நிலையிலும் நேர்மையுடன் இயங்கும் தனுசு ராசி அன்பர்களே! நீங்கள் உயர்தரமான எண்ணங்களையும், உயர்ந்த திட்டங்களையும் உடையவர். இந்த கால கட்டத்தில் ராசிநாதன் குரு பத்தாமிடத்தில் இருக்கிறார். பூர்வ புண்ணிய பஞ்சம விரயாதிபதி செவ்வாய் ராசிக்கு வந்திருக்கிறார். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தில் சாதகமான பலன் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும்.

செவ்வாய் ராசியில் பயணிப்பதால் மனதில் புதுத் தெம்பும் உற்சாகமும் தோன்றும். எதிர்பாராத உதவியால் நன்மை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் புதன் – குரு – சுக்கிரன் இருக்கிறார். சுக்கிரன் நீசமாக இருந்தாலும், புதன் ஆட்சி உச்சம் பெறுவதால் நீசபங்க ராஜயோகம் பெறுகிறார். தொழில், வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். ஏற்கனவே வியாபாரம் தொடர்பாக செய்து, பாதியில் நின்ற பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேலிடத்திலிருந்து முக்கியமான காரியம் உங்கள் வசம் ஒப்படைக்கப்படும்.

குடும்பஸ்தானத்தை ராசிநாதன் குரு மற்றும் குடும்பாதிபதி சனி பார்க்கிறார். கணவர், மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். குடும்பத்தில் அமைதி ஏற்படும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்புக் கூடும். குடும்பத்துக்கு தேவையான பொருள்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும்.

மனதில் புது தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு கிரக சூழ்நிலை சாதகமாக இல்லாததால் சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு, நன்கு உழைப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். அறிவுத்திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். அரசியல் துறையினருக்கு உங்கள் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். செயற்றிறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். மனதில் நிம்மதி ஏற்படும். சுற்றத்தினர் வருகை இருக்கும். நண்பர்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தைக்கூட எளிதாக செய்து முடிப்பீர்கள். மாணவர்களுக்கு பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விடயங்களை மீண்டும் தொடர்வீர்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

பரிகாரம்: விஷ்ணு வழிபாடு நன்மையைத் தரும்.

# அனைத்திலும் முன்மாதிரியான ஜப்பான் நாடு

சி.நற்குணலிங்கம்

ஆசியாக் கண்டத்தில் அபிவிருத்தியடைந்த நாடாக ஜப்பான் விளங்குகின்றது. ஜப்பான் நாடு கொக்கைடோ, கொன்சு, சிக்கோக்கு, கியூசு என நான்கு பிரதான தீவுகளைக் கொண்டதாகும். 12 கோடி சனத்தொகையைக் கொண்ட நாடு. உலக சனத்தொகையில் முதல் பத்து இடங்களை வகிக்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்றாகும். ஜப்பானின் தலைநகர் டோக்கியோ ஆகும். ஜப்பானில் பௌத்தம், சிந்தொயிஸ்ற் என இருமதங்கள் காணப்படுகின்றன. மொழியைப் பொறுத்தவரை ஜப்பானிய மொழி மட்டும்தான் பிரதானமொழியாக உள்ளது. இரண்டாவது மொழி என ஒரு மொழியும் இல்லை. ஜப்பானில் 1.7வீதமான வெளிநாட்டவர்கள் வாழ்கிறார்கள்.

ஜப்பானின் தலைநகர் பிரதான வர்த்தக மையமாக விளங்குகின்றது. வாழ்க்கைச் செலவு கூடிய நகராகவும் உள்ளது. பெரும்பாலான வேலையாள்கள் வேறு இடங்களில் குடியிருந்து இங்கு வேலைக்கு வருகிறார்கள். வாகன உற்பத்தித் தொழிற்சாலைகள் தாராளமாகக் காணப்படுகின்றன. வேலைக்குச் செல்பவர்கள் ரயிலிலேயே கூடுதலாகப் பயணிக்கின்றனர்.

வேலையாள்கள் கூடுதலாக வெள்ளை நிறச் சட்டையை அணிபவர்கள். பொதுவாக கடும்நிற உடைகளை விரும்பி அணிபவர்கள் இல்லை என்று கூறலாம். விவசாயம் செய்பவர்கள் 14வீதமாகக் காணப்படுகின்றனர்.

எனவே அவர்கள் விவசாயப் பொருள்களை இறக்குமதி செய்கின்றார்கள். பெரும்பாலும் எல்லாப் பொருள்களும் வரி விதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. எனவே பொருள்களின் விலை உயர்வாக உள்ளன எனலாம்.

ஜப்பானியரில் 10 பேரில் ஒருவர் வெளிநாட்டவரைத் திருமணம் செய்கிறார்கள். திருமணவயது சராசரியாக 30 வயதாக உள்ளது. 40 வயதை தாண்டினால் ஒரு வீதம் தான் திருமணம் முடிக்க வாய்பிருக்கும். தனியாள்களின் எண்ணிக்கை அதிகம். மணம் முடித்தாலும் பிள்ளைகளைக் குறைவாகவே பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். பெரும்பாலானவர்களுக்கு ஒரு பிள்ளை மட்டும் போதுமானதாக உள்ளது. 50% மானவர்கள் சொந்தவீட்டில் வாழ்கிறார்கள் ஆண், பெண் உட்பட 30வீதமானவர்கள் புகைப்பிடிப்பவர்களாக உள்ளனர். 4 வீதமானவர்கள் வேலையற்றுக் காணப்படுகின்றனர். ஏனையோர் வயது வேறுபாடின்றி, இளையோர் முதல் முதியோர் வரை வேலை செய்கிறார்கள். வாகன ஏற்றுமதி மூலம் கூடிய வருமானத்தை நாடு பெற்றுக்கொள்கின்றது. சுற்றுலாப் பயணிகள் மூலமும் வருமானம் ஈட்டப்படுகின்றது.




சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு மகிழக்கூடிய இடங்கள் பல உள்ளன. டோக்கியோ ரவர், கெகொன் நீர்வீழ்ச்சி, ஜப்பானில் மிக உயரமான அழகான பியூஜி மலை, நாரா பாக், இம்பீரியல் பலஸ், நிசுபாசி பாலம், சென்சோஜி கோயில், கப்பல் பயணம், பொருள் காட்சியகம், ரொடாஜி பௌத்த ஆலயம், கடல் படுக்கையில் அமைந்துள்ள கான்சாய் விமான நிலையம் எனப்பார்த்து மகிழக்கூடிய பல இடங்கள் உள்ளன.

1939-1945 வரையான காலப்பகுதியில் நிலவிய இரண்டாம் உலகப் போரிலே அதிக பாதிப்புக்கள், இழப்புக்கள் என்பவற்றை சந்தித்த ஜப்பான் நாடு மீள முன்னேற்றம் கண்டுள்ளது.

அந்தநாட்டு மக்களிடம் காணப்படுகின்ற மனிதப் பண்புகள், மனித விழுமியங்கள், மனித நேயம் எனக்கூறலாம். இந்த நாட்டு மக்கள் விடா முயற்சி, தளராததன்நம்பிக்கை, தேவையறிந்த தூர நோக்கு, உன்னத லட்சியம், நாட்டுப் பற்று, நேர முகாமைத்துவம், சிறந்த உணவுப் பழக்கம், சிக்கனத் தன்மை, எதிலும் பேணப்படும் தரம், அன்பாக - பண்பாகப் பழகும் தன்மை, மரியாதையாகப் பேசும் தன்மை, வரவேற்கும் பண்பு, சமத்துவ முகாமைத்துவம், உணர்வுபூர்வமான பக்தி ஆகியன போற்றுதற்குரியது. ஒருவர் எந்தத் தன்மையர் என்பதை மதிப்பீடு செய்வதற்கு அவரிடம் இருக்கக்கூடிய பண்பாட்டுக் கோலங்களே வெளிப்படையான ஆதாரங்கள் என்பதற்கு எடுத்துக்காட்டான மக்கள் வாழும் நாடு ஜப்பான். தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள் எனப் பெஞ்சமின் பிராங்ளின் என்பவர் கூறியதற்கு அமைய, வாயைப் பயன்படுத்துபவர்கள் ஜப்பானியர்கள். உலக வரலாற்றிலே விஞ்ஞானத்தின் சுவர்க்கம் என வர்ணிக்கப்படும் ஒரு நாடு ஜப்பான். தொழில்நுட்பங்களோடு கைத்தொழில்துறையில் மேலோங்கியுள்ள நாடு ஜப்பான். ஆடம்பரமற்ற அமைதியான தன்னடக்கமான நாடு. தன்னைப் பெரிதாக அலட்டிக் கொள்ளாத ஒரு நாடு. ஜப்பானின் 5 எஸ் திட்டம் சகல நிலைகளிலும் பரவிக் காணப்படுகின்றது.

ஜப்பானில்நேர அட்டவணைப்படி தொடர்ச்சியாக ஓர் ஒழுங்குப் படிமானத்தைக் கடைப்பிடிப்பார்கள். ஒழுக்கம் என்பது எல்லாவற்றிலும் காணக்கூடிய ஒன்று. ஆடையிலிருந்து பாதணிவரை, சமையல் அறையிலிருந்து மலசலகூடம் வரை ஒழுங்கு, ஒழுக்கம் என்பவற்றின் நேர்த்தியைக் காணலாம்.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை எங்கள் தெய்வம்; அதைப் பேணுவது எமது கடமை

ஐங்கரன்

'பனை எங்கள் குலதெய்வம்' என்ற அளவுக்கு இருந்தது ஒரு காலம். ஒரு காலமென்றால், ஏதோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னெல்லாமில்லை. கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி (1960) க்குப் பிறகும் பனைதான் அனைத்துக்கும் துணை. பனையின்றி வீடுமில்லை வாழ்வுமில்லை என்றிருந்தோம். வீடு வேய்வதற்கும், வேலியடைப்பதற்கும், மாட்டுக்குத் தீனி போடுவதற்கும், பெட்டி, கடகம், படுக்கிற பாய், நெல்லுக் காய வைக்கிற பாய், பந்திப்பாய், பிட்டவிக்கிற நீத்துப்பெட்டி, காசு வைக்கிற கொட்டப்பெட்டி, அரிசி புடைப்பதற்கான சுளகு, தலைக்குப் பட்டை என்று எல்லாவற்றுக்கும் பனையோலையே உதவியது.

பனையினால்தான் பல காரியங்கள் நடந்தன. பனம்பழத்தில் பணியாரம் செய்தோம். அதைச் சுட்டுச் சூப்பிச் சுவைத்தோம். பனாட்டு வார்த்தோம். கூரையமைப்பதற்கும் பனையே துணை. அடுப்பெரிக்கக் கொக்காரை, அப்பச் சட்டிக்கும் புகையிலை உலர்த்துவதற்கும் ஊமல். வேலிக்கும் கோழிக்கூட்டுக்கும் மட்டை, கட்டுவதற்கு நார், பின்னுவதற்கு ஈர்க்கு என்றொரு வரிசை தனியாக நீளும். பிட்டுக்கும் கூழுக்கும் ஒடியல். முறித்தும் இடித்தும் தின்பதற்குக் கிழங்கு. காயவைத்தால் புளுக்கொடியல். குடிப்பதற்குக் கள். கள்ளுக்குடிக்காதவர்களுக்கு நுங்கு. இல்லையென்றால் பதநீர் (கருப்பணி). ருசிக்கக் கருப்பட்டி, பனஞ்சீனி. சலாகைகளில் ஏராளம் வேலைகள். நீர் இறைப்பதற்குப் பட்டை. பனந்தும்பில் பலவகை அலங்காரப் பொருள்கள். வடலியில் குருத்து, வெட்டித்தின்னப் பூரான்... கூழ் குடிக்கப் பிளா, சோறுண்ணத் தட்டுவம் என ஆயிரமுண்டு பனையில்.

எல்லாவற்றுக்கும் மேலாக பனையோலையில்தான் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிப்படித்தனர் நம்முன்னோர். எண்ணும் எழுத்தும், திருக்குறளும், இலக்கியமத்தனையும், வாகடமும் சோதிடமும் பனையோலைச் சுவடியில்தான் பதிந்ததும் பகிர்ந்ததும் நடந்தது.

தமிழே வளர்ந்தது ஓலைச்சுவடிகளிலன்றிவேறில்லைப்பராபரமே! இப்படிப்பனையெங்கள்உயிருக்கு நிகர் என்றிருந்தோம்.

தமிழர்கள் வாழும் ஊரெங்கும் பனை நின்றது. பனை நிற்குமிடமெல்லாம் தமிழ் நிலம் என்பதே அடையாளம்.

பனங்கூடல்களின் பின்னிருந்தே சூரியன்எழுந்தது.மாலையில்சூரியன் மறைவதும் பனங்கூடல்களின் பின்னால்தான். நிலவு எழுந்ததும் விழுந்ததும் கூடப் பனங்கூடல்களின் பின்னேயே. இரவும் பகலும் வந்து போனதும் பனங்கூடல்களின் பின்னிருந்தே என்றே எண்ணியிருந்தேன். அந்தளவுக்குப் பனைகள் நிறைந்த உலகம் எமதாயிருந்தது. வானத்தைத் தாங்கி வைத்திருந்ததும் ஊரை ஏந்தி வைத்திருந்ததும் பனைகளே. பனையின் அழகில்தான் ஊரே மலர்ந்து கிடந்தது. ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் பனைதான் தமிழரின் அடையாளம்,

ஆனால் இன்று?

பனைகள் அருகி விட்டன. சில ஊர்களில் பனைகளே இல்லை. இன்னும் சில ஆண்டுகளில் பனை என்றால் என்ன? என்று நம் பேரப்பிள்ளைகள் கேட்பார்கள். என்ன பதில் சொல்லப்போகிறோம்?

போர் தின்ற பனைகள் கோடிக்கும் அதிகம். பங்கருக்கும் ஷெல்லுக்கும் பலியாகிய பனைகள் எங்கள் தலைகளுக்கு நிகர். மிஞ்சியதை வீட்டுக்கும் வேறு தேவைகளுக்கும் என்று தறித்து முடித்துவிட்டோம். ஆனால், இன்னும் பனைகளைத் தறிக்கும் வெறி தீரவில்லை. ஒரு பனையைத் தறிக்கும் போது இன்னொரு பனையை நடவேண்டும் என்று யாரும் சிந்திப்பதில்லை. இவ்வளவுக்கும் எளிதாக வளர்க்கக்கூடிய மரம் பனை.

மிஞ்சியிருக்கும் பனங்கூடல்களும் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளில் காணாமல் போய்விடும். ஒற்றைப் பனைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிற்கலாம். ஆனால், அவையும்கூடியகெதியில்காணாமல்போய்விடும். பனையை வளர்ப்பதற்கென்று ஆயிரம் திட்டங்கள் உண்டு. பனையைப் பாதுகாக்கவென ஆயிரமாயிரம் சட்டங்களுமிருக்கின்றன. இந்தத்திட்டங்களைத் தூக்கிக்கொண்டும் சட்டங்களைக் காவிக்கொண்டும் திரிகிறார்கள் ஆயிரமாயிரம் விண்ணாதி விண்ணன்கள்.

ஆனால், காணிகளைத்திருத்தித்துப்புரவுசெய்வோர்பனையென்றால், துடக்கு என்றமாதிரி, கீரையைப் பிடுங்கி எறிவதைப்போலத் துடைத்து எறிந்து விடுகிறார்கள் பனைகளையும் வடலிகளையும். பெரிய கனரக வாகனங்கள் புரட்டியெறிகிற பனைகளையும் வடலிகளையும் பார்த்தால் நெஞ்சு பற்றியெரிகிறது பிள்ளையைக் கொலைபண்ணுவதைப் போல, ஒவ்வொரு வடலியையும் கொன்று தள்ளுகிறார்கள். போதாக்குறைக்கு மண்ணெண்ணெயை ஊற்றி அழிக்கிறார்கள்.

> நம்முடைய மரபின் வேர்கள் பல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணமுண்டு. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலமுண்டு. எல்லா வேரும் இணைந்து வளர்ந்ததே மரமாகும். பனை, தமிழின் மூலவேர். அதனால்தான் அதை மூலவிருட்சம் என்றறிந்தனர் முன்னோரும் மூத்தோரும். பனைநின்றாலும் நூறு வருசம். பட்டாலும் நூறு வருசம் என்பார்கள். பர்மாத் தேக்கை உலகம் கொண்டாடுவதைப் போல, எங்கள் பனைகளை நாங்கள் மட்டுமல்ல, ஐரோப்பியர்களும் கொண்டாடிய காலமொன்றிருந்தது. இன்றும் அவர்கள் பனைகளை மறக்கவில்லை.



தலைமுறைகளையும் நம் முன்னோரையும் வாழ வைத்த கற்பகதரு எத்தனை வாஞ்சையோடு, ஒரு தாயைப்போல எங்களையெல்லாம் காத்தது. இதையெல்லாம் எப்படிச் சுலபமாக மறந்தோம்? எங்களுக்கு என்ன வியாதி வந்தது வெறிகொண்டவர் போல, தானே வளர்ந்து தமிழ்க் குலத்தைக் காத்த பனைகளை, எம் குல தெய்வங்களை அழிப்பதற்கு?

கைதடியில் பனை ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. கொழும்பில் பனை அபிவிருத்திச் சபை உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு நிதியும் தாராளமாக ஒதுக்கப்படுகிறது. ஆள்கள், அம்பு சேனைகள் என்று பலதும் பத்தும் இருக்கின்றன. ஆனால், தனியொருவரான மில்க்வைற் கனகராஜா செய்த அளவுக்கு எவரும் பனையை வளர்க்கவில்லை. பனை நடுகை என்றால் அதை உருப்படியாகச் செய்தது அந்த மனுசன் மட்டும்தான். அவர் நாட்டிய பனைகள்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக மிஞ்சியிருக்கின்றன. பனை நடுகை என்பது இப்பொழுதெல்லாம் பம்மாத்து விளையாட்டு என்று சனங்கள் கொடுப்புக்குள் சிரிக்கிற அளவுக்குத்தான் தலைவர்களின் காரியங்கள் நடக்கின்றன. கணக்குக் காட்டுகிற வேலைகள் இப்படித்தானிருக்கும்.

ஆண்டுக்கு ஐந்து லட்சம் பனைகளை நடுகிறோம் என்று சொல்லப்படும் கணக்கைக் கூட்டினால் உலகமே பனைகளால்தான் நிறைந்திருக்கும். ஆனால், ஊரே பனையின்றி வெறிச்சோடிப்போயிருக்கே...!

ஆனையிறவு தொடக்கம் தீவின் வெளிகளில் பனைகளைத் தாராளமாக நடலாம். பெரிய நெடுஞ்சாலை வழி நெடுக பனைகளை வளர்க்கலாம். கிழக்கு மாகாணத்தில் தாராளமாகப் பனைகளை வளர்க்கலாம். யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல், எதற்கும் தொல்லை தராமல், நீருமின்றி, போசிப்புமின்றித் தானே வளரும் தால விருட்சமல்லவா எங்கள் தாயவள்!.

மரபைப்பற்றியும் பண்பாட்டைப்பற்றியும் அதிகமதிகம் பேசுகிறோம். மரபுரிமைகள் அழிவதைப் பற்றிக் கவலைப்படுகிறோம். முதுசம் என்ற நம் பெரும் சொத்து, நம்முடைய முகம், நம்முடைய அகம் என்ற பனை அழியும்போது மட்டும் நாம் பேசாதிருக்கிறோம். பனையென்பது தீண்டத்தகாத ஒன்றாகிய தன் விளைவா இது? எதற்காக பனைகள் பேணுவாரின்றிப் பயனற்ற ஒன்றென ஆனது?

நம்முடைய மரபின் வேர்கள் பல. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணமுண்டு. ஒவ்வொன்றுக்கும்ஒவ்வொருபலமுண்டு.எல்லாவேரும்இணைந்து வளர்ந்ததே மரமாகும். பனை, தமிழின் மூலவேர். அதனால்தான் அதைத் தாலமூலவிருட்சம் என்றறிந்தனர் முன்னோரும் மூத்தோரும்.

பனை நின்றாலும் நூறு வருசம். பட்டாலும் நூறு வருசம்என்பார்கள். பர்மாத் தேக்கை உலகம் கொண்டாடுவதைப்போல, எங்கள் பனைகளை நாங்கள் மட்டுமல்ல, ஐரோப்பியர்களும் கொண்டாடிய காலமொன்றிருந்தது. இன்றும் அவர்கள் பனைகளை மறக்கவில்லை. நாங்கள் தான் மறந்து விட்டோம்.

சிங்கள மக்கள் அரச மரங்களை நட்டுப் போற்றி வளர்க்கிறார்கள். அரசு என்பது சாதாரணமான ஒன்றல்ல. அதனுடைய வேர் ஆழமானது. அரசு போல் வேரூன்றி... என்று தெரியாமலா சொன்னார்கள். அந்த அரச மரம் எங்களூர்களிலும் இப்பொழுது தாராளமாக நடப்படுகிறது. அரசு தளைத்தால் அக்கம் பக்கமெல்லாம் கிளை விரிக்கும். கிளையோ பெரிய இடம்பிடிக்கும். ஆகவே, அரசு இடம்பிடிக்கும். நாங்கள் எங்கள் பனைகளையே அழித்து வருகிறோம். பனைக்குப் பதிலாக அரசா? சொந்த முகத்தையும் அகத்தையும் அடையாள அழிப்புச் செய்வதற்கு எங்களை விடச் சிறந்தவர்கள் வேறு யாருமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1501 - மைக்கல் ஏஞ்சலோ, தனது டேவிட் சிற்ப ஆக்கத்தைத் தொடங்கினார்.

1791 - பிரான்ஸில் 16ஆம் லூயி மன்னனால் புதிய அரசமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1850 - கிழக்கு அல்ப்ஸ் மலையின் உயர் சிகரம் பிஷ் பேர்னினா முதன் முதலாக மனிதரால் எட்டப்பட்டது.

1848 - செலுலோயிட் ஒளிப்பட பிலிமுக்கான காப்புரிமத்தை ஹனிபல் குட்வின் பெற்றுக் கொண்டார்.

1899 - மோட்டார் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்ட முதல் அமெரிக்கர் ஹென்றி பிளிஸ் ஆவார்.

1906 - ஐரோப்பாவில் முதன் முதலாக நிலையான இறக்கை பொருத்தப்பட்ட விமானம் பறப்பு.

1933 - நியூசிலாந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்வான முதற் பெண்மணியானார் எலிசபெத் மக்கோம்ப்ஸ்.

1948 - இந்தியாவின் பிரதிப் பிரதமர் வல்லபாய் பட்டேல், ஹைதராபாத்தினுள் புகுந்து அதனை இந்திய யூனியனுடன் இணைக்க இராணுவத்துக்குக் கட்டளையிட்டார்.

1953 - நிகிடா குருஷேவ் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார்.

1968 - வோர்ஸோ ஒப்பந்த நாடுகளிலிருந்து அல்பேனியா விலகிக் கொண்டது.

1989 - நிறப்பாகுபாட்டுக்கு எதிரான மிகப்பெரிய பேரணி தென் ஆபிரிக்காவில் டெஸ்மண்ட் டுடு தலைமையில் நடைபெற்றது.

2001 - செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின் அமெரிக்காவில் பொது மக்கள் விமானப் போக்குவரத்து மீளத் தொடங்கப்பட்டது.

2002 - புலிகள் - அரசு பேச்சு அமெரிக்கா வரவேற்பு.

- யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களில் சிங்கள மாணவரை அனுமதிக்க முடிவு.

2003 - அதிகளவு அதிகாரங்களுடன் கூடிய நிர்வாக சபையை வழங்க வேண்டும் எனக் கூட்டமைப்பு அகாஷியிடம் வலியுறுத்து.

- இரண்டாயிரம் ஆண்டில் 50 லட்சம் பேர் புகைத்தலால் உயிரிழந்துள்ளதாக ஆய்வில் தெரிவிப்பு.

2007 - ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பழங்குடி மக்களின் உரிமைப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2008 - இந்தியாவின் டெல்லியில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் 30 பேர் உயிரிழந்ததுடன், 130 பேர் காயமடைந்தனர்.

# தற்பெருமை

ஓர் ஊரில் ராஜா என்பவன் ஒரு ஆட்டுக்குட்டியை வளர்த்து வந்தான். அந்த ஆட்டுக்குட்டி எப்போதும் அவனோடு செல்லமாக விளையாடும். ராஜா ஆட்டுக் குட்டிக்குத் தேவையான பச்சைப்புல்லு, இலை குலைகளைப் போடுவான். அது "மே" என்று தனது சந்தோசத்தை வெளிப் படுத்தும். ராஜா தனது ஆட்டுக்குட்டியிடம் உறவாடி விட்டு அலுவலகம் செல்வது வழமை.

இவ்வாறு அங்கு வேலை செய்யும்போது தனது ஆட்டுக்குட்டியைப் பற்றியே மிகையாகக் கதைத்துக் கொள்வான். சக ஊழியர்களிடம் பெருமையாக "என்னுடைய ஆட்டுக்குட்டி என்னோடு தினமும் கதைக்கும்" எனப் புளுகித் திரிவான். இதனால் சக ஊழியர்கள் ஆட்டுக் குட்டி உண்மையில் கதைக் கிறதா என அறிய விரும்பினர்.

மறுநாள் ராஜா அலுவலகத்திற்கு வந்ததும் தனது ஆட்டுக் குட்டி பற்றிக் கதைத்துக் கொண்டான். உடனே சகஊழியர்கள் "உனது ஆட்டுக் குட்டியை நாளை கூட்டிக் கொண்டு வா! நாங்கள் அதனிடம் கேள்விகள் கேட்க அது அந்தக் கேள்விக்குப் பதில் சொல்கின்றதா எனப் பார்ப்போம்" என்றனர்.



அடுத்த நாள் ஆட்டுக்குட்டியைக் கூட்டிக் கொண்டு வந்த ராஜா, "என்னுடைய ஆட்டுக் குட்டி நான் கேட்கின்ற கேள்விக்குப் பதில் சொல்லும் பாருங் கள்" என்று கூறிவிட்டு, "ஏப்ரல் மாதத்திற்கு அடுத்த மாதம் எது?" என்று கேட்டான். அதற்கு அந்த ஆட்டுக் குட்டி "மே" என்று கத்தியது. கூடி நின்றவர்கள் "உண்மையாகவே உன்னுடைய ஆட்டுக் குட்டி கதைக்கின்றதே என்று வியந்தனர். சரி நீ வேறு ஏதும் கேள்வி கேள்" என்று கூறினார்கள். உடனே அவன் "ஜூனுக்கு முதல் மாதம் எது" என்று கேட்டான். உடனே அது "மே" என்று கத்தியது.

இதனை அவதானித்த அலுவலக முதலாளி "சரி உன்னுடைய ஆட்டுக் குட்டியிடம் ஜனவரிக்கு அடுத்த மாதம் எது என்று கேட்டுச் சொல்" என்றார். அவன் உடனே கேட்டவுடன் அதற்கும் "மே" என்றே கத்தியது.

அலுவலக முதலாளி உடனே "உன்னுடைய ஆடு ஒன்றும் கதைக்கவில்லை. அது வழமையாகக் கத்துவதை வைத்தே நீ புளுகித் திரிகின்றாய்" என்று கோபத்துடன் கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

எப்போதுமே வீண் பெருமை கொள்ளக் கூடாது என்பதையும் எமது உண்மையான உறவுகளிடம் பொய்யான உருவத்தைக் காணுகையில் இடைவெளியே அதிகரிக்கும் என்பதையும் உணர வேண்டும். என்றுமே தற்பெருமையோ தற்புகழ்ச்சியோ கொள்ளக்கூடாது.

என். ரஜீவன்

## பாப்பா பாட்டு பாடியவர்



பாப்பா பாட்டு பாடியவர் - மனிதப்
பதர்களைக் கவியால் சாடியவர்
மூப்பே அறியாப் பெருங்கவிஞர் - வெண்
முண்டாசு அணிந்த நம் கவிஞர்

தீந்தமிழ்ப் பாட்டால் வென்றிட்டார் - உயர்
தெய்வமாய் நெஞ்சில் நின்றிட்டார்
வேந்தனைப் போல முழங்கிட்டார் - பசி
வேதனை தனக்குள் விழுங்கிட்டார்!

சாதிகள் வேரை அறுத்திட்டார் - அதன்
சட்டையைப் பிடித்துக் கிழித்திட்டார்!
ஓதிய மொழியை நேசித்தார் - அவர்
உயர்வாய் நாட்டைப் பூசித்தார்!

கண்களில் கருணை வைத்திட்டார் - தன்
கவிதையில் பொருளைத் தைத்திட்டார்!
பெண்களின் விடுதலை விரும்பிட்டார் - மனப்
பிரியமாய் பிற உயிரை மதித்திட்டார்





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வார்த்தைகள், எம்மை அடுத்த கட்டத்துக்கு இட்டுச் செல்கின்றன

சீனாவில் ஜி-20 மாநாடு கடந்த வாரம் நடைபெற்றது. நாடுகளின் தலைவர்கள் பலரும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். ஜனாதிபதி பராக் ஒபாமாவும், ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்ளும் முதல் அமெரிக்க ஜனாதிபதியாகக் கலந்து சிறப்பித்தார். மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளைவிட அமெரிக்க ஜனாதிபதி தொடர்பாக, பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதி றொட்றிகொ டுடேர்தே தெரிவித்த கருத்துக்கள் உலக ஊடகங்களைத் திடுக்கிட வைத்தன. ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருந்து கொண்டு, உலகத் தலைவர் ஒருவரைக் கொச்சை மொழியில் விமர்சித்தமை பல விமர்சனங்களை உருவாக்கி விட்டது.

கொச்சையான அல்லது கெட்ட வார்த்தைப் பிரயோகங்கள் இவ்வாறான தலைவர்கள் மத்தியிலும் மிக வெளிப்படையாகப் பாவனையில் இருப்பது மன வருத்தத்துக்குரியது. இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்மும் பரப்புரை மேடைகளில் இவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்தி வருகிறார். இதனால் பல தட வைகள் அவர் ஊடகங்களின் விமர்சனங்களுக்கு உட் பட்ட போதிலும், அவர் தன்னை மாற்றிக் கொள்வ தாக இல்லை. சமீபத்தில் அமெரிக்க அரசினால் பரப்புரையின் போது ஒழுக்கம் பேணப்பட வேண்டும் என எச்சரிக்கப்பட்டார்.

ஆங்கில மோகமுள்ள எம்மவர்களும் ஆங்கிலத்தில் அவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதனை அவர்கள் நாகரிகமாகக் கருதுவதே இதற்கு முக்கிய காரணமாகவுள்ளது. தமிழில் அவ்வாறான வார்த்தைகளை இயல்பாகப் பேசுவார்களா என்று பார்த்தால் இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும். தமிழில் கெட்ட வார்த்தைகளைப் பேசுபவர்கள் தரம் குறைந்தவர்களாகக் கருதப்படும் கலாசாரம் நம்மிடம் உண்டு. மேடைப் பேச்சுகளிலோ, ஏனைய கருத்துரைப் புக்களிலோ அவ்வாறான வார்த்தைகளை நம்மவர்கள் தவிர்த்துக் கொள்வார்கள். ஆனால் அதையே ஆங்கிலத்தில் பேசினால் மட்டும் நாகரிகமா? முடிந்தால் அதன் அர்த்தத்தைத் தமிழில் உச்சரிப்பார்களா?

ஆங்கிலேயர்கள் தமது தாய் மொழியில்தான் அவ்வாறான வார்த்தைகளைஉரைக்கின்றனர். இதில் சரி பிழை என்று ஆராய்வதற்கில்லை. உயர் பதவிகளில் அமர்ந்து ஒரு நாட்டைப் பிரதிபலிக்கும் நபராகச் செல்லும் போது, வார்த்தைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தலையை நிமிர்த்தவும், குனிய வைக்கவும் இவை காரணமாக அமைகின்றன. தெற்காசிய நாடுகள் செழுமையான கலாசாரத்தைப் பிரதிபலிப்பவை. மேற்குலக நாடுகள் வாழ்வதற்குத் தான் கலாசாரத்தைக் கடைப்பிடிக்கின்றன. நம்மவர்கள் கலாசாரத்தை வாழவைக்கும் மக்களாக இருக்கின்றனர். இன்று வரைக்கும் அவ்வாறே எமது வாழ்க்கை அமைந்துள்ளது.

இடம்பெற்ற மோசமான வார்த்தைப் பயன்பாட்டுக்குப் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் நடந்து கொண்ட விதம் பாராட்டுதற்குரியது. பிலிபைன்ஸ் ஜனாதிபதி மன்னிப்பு கேர்ரியதும், அமெரிக்கா அந்த மன்னிப்பை ஏற்றுக்கொண்டதும், தனது தனித்துவத்தைப் பாதுகாக்க அவ்வாறான வார்த்தைகள் மேற்கொண்டதை அமெரிக்கத் தரப்பு புரிந்து கொண் டதும் வரவேற்கத்தக்கது. இறுதியில் இருவரும் சந்தித்துள்ளனர். கெட்டவார்த்தைகள் என்பது ஒரு விடயமாக அமையவில்லை. அதன் காரணமும், அதன் பின்னர் இருவரும் மேற்கொண்ட முடிவுகளும் அவரவருக்கான தனித்துவத்தை நிலைநாட்டின. இவ்வாறான தொரு சந்தர்ப்பம் எமது தலைவர்கள் மத்தியில் இடம் பெ[illegible] தா[illegible]






வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

# சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்

**15** ஆம் நூற்றாண்டுக்கு முன்புவரை உலகம் தட்டை என்றே மேல் நாட்டவர்கள் நம்பினர். 15ஆம் நூற்றாண்டில்தான் (கி.பி 1440) போலந்து நாட்டு அறிஞர் நிக்கோலஸ்கிரப்ஸ் என்பவர் உலகம் தட்டை அல்ல உருண்டை வடிவமானது எனக் கணித்துக்கூறினார். பின்னர் கலிலியோ உலகம் உருண்டை என விளக்கினார். திருவள்ளுவர் திருக்குறளில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகம் உருண்டை எனும் கருத்தை நிலைநாட்டி விட்டார். சுழலும் உல கம் உழவுத்தொழிலால் உய்யமுடியும்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

சூரியனிலிருந்து சிதறிய அக்கினிக் குழம்பு பூமியாகத் திரட்சியுறுவதற்கு 20 கோடி ஆண்டுகள் பிடித்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இன்று சூரியனின் ஆய்வுக்கு இந்தியா செயற்கைக் கோளை அனுப்பவுள்ளதாகச் செய்தி மூலமாக அறிகின்றோம். அன்று சூரிய வட்டம் பற்றி புறநானூறு பாடல் 30 இதோ!

செஞ்ஞாயிற்றுச் செலவும்.
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும் பரிப்புச்சூழ்ந்த
மண்டிலமும் வளிதிதரு திசையும் வறிது
நிலை இயகாயமும்
என்றிவைசென்றளந் தறிந்தார் போல

சூரியனின் இயக்கம், அந்தரமாய் நிற்கும் வான் வெளிமண்டலம் என்பன பற்றிய வானவியல் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. நிலவு சுயமாக ஒளிவீசுவதில்லை.

மாதர் முகம் போல் ஒளி விட வல்லையேல்
காதலை வாழி மதி
குறள் - 1118

சந்திரக் கிரகணத்துக்கு இதோ குறளே சாட்சி

கண்டது
மண்ணும் ஒருநாள் அவர் மன்னும்
திங்களைப் பாம்பு கொண்டற்று
குறள் - 1146

சூரியன், சந்திரன் மற்றும் கோள்களை, இணைத்துக் கிழமையாக்கி ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என வகுக்கப்பட்டது. இத்தகைய வான சாஸ்திரத்துடன் சோதிடக்கலையும் சேர்ந்தே குழந்தையின் பிறப்புநேரப்படி நவக்கிரகங்களின் நிலைப்பாடு கணிப்பீடு செய்யப் படுகின்றது. சூரியனும் நட்சத்திரமே. பல்லாயிரம் நட்சத்திரங்களுடன் அண்டத்தில் சூரியன் தோற்றமளிக்கின்றது.

பன்மீன் நடுவன் பான்மதி போல
பல் மீன் நடுவன் திங்கள் போலவும்
(சிறுபாணாற்று பாடல்)

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றபடி காலம் செய்யும் கோலங்கள் பல. எனினும் எமது பாரம்பரிய விவசாயத்துக்கு உரிய மதிப்பளித்து இடமளித்து சுபிட்சம் பெறுவோமாக.

# பூமி திருத்தியுண்

**சீ**ர்திருத்தாத நிலம், சீர்திருத்தாத நாடு, சீர்திருத்தாத வீடு, சீர்திருத்தாத சமூகம் எதுவுமே உருப்படாது. எனவே நாம் மண்ணைப் பார்த்தும், தொட்டும் அதன் தரம், அதில் என்ன விளையும் எனும் மண் அறிவு தெரிதல் அவசியம்.

தேயிலைக்கேற்ற மண் மலைநாடே. மண்சார்ந்த நிலம் ஐந்து- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவே அவையாகும். மலைசார்ந்தது குறிஞ்சி, காடு சார்ந்தது முல்லை, வயல் சார்ந்தது மருதம், கடல் சார்ந்தது நெய்தல், வளம் குன்றியது பாலை.

இலங்கை வனப்பகுதிக்குள் முல்லைத்தீவுப் பகுதியிலேயே அடர்த்தியான காடுகள் உள்ளன. மண்ணில் மூவகை உள்ளன. அவை கடினமண், சிறுமணல், நடுத்தர மண். விவசாயம், குடியிருப்புக்கள் அரங்குகள் அமைய தெளிவான மண் அறிவு வேண்டும்.

வெட்டி எடுத்த மண்ணைத் திரும்ப கொட்டிச்சமப்படுத்தின் அந்நிலம் உறுதியானதும் அரங்கு குடியிருப்புகள், ஆலயம், பெரிய கட்டடங்கள் கட்டடலாம். கோயில் கட்டப்படும் நிலத்தை நன்கு உழுது அதில் நவதானியம் விதைக்க வேண்டும். மூன்று நாள்களில் முளைத்தால் நல்ல நிலம். பூமியை உழுதால்தான் விவசாயம் செய்ய முடியும். பூமியும் சாமியும் ஒன்று. அந்தப் பூமி அகழ்வாரையும் தாங்கும்.

நிலத்துக்கு நிலம் அவற்றின் இயல்பு வேறுபடும். நிலத்தின் இயல்பை அங்கே விளையும் பயிரின் முளை காட்டி நிற்கும். பாலை நிலம் தவிர மற்றவை நன்செய் நிலம், புன்செய்நிலம் எனப் பிரிக்கப்பட்டது. மருதம், நெய்தல்- நன்செய்நிலம். குறிஞ்சி முல்லை- புன்செய் நிலம்.

மண்ணும் ஆற்றுமண், சேற்றுமண், காட்டுமண், உதிரிமண், மலைமண், குளத்துமண் என வகைப்படுத்தப்படும். மண் சார்ந்து வாழும் இனம்தான் தலைதூக்கி வாழமுடியும். யூதர்கள் இரண்டாம் உலகப் போரின் பின்னர் தங்களுக்கென்று இஸ் ரேல் நாட்டை உருவாக்கினர்.

மண்மீட்புக்காக இன்றும் போராட்டங்களே! விண் வெளியிலும் மண் ஆராய்ச்சியே. 'ஆத்திசூடியில் பூமி திருத்தியுண்', என்று ஔவையார் சொல்லியதும் மண்ணியலே. இயற்கை வளமாம் நிலத்தைப் பண்படுத்திப் பல அனுகூலங்கள் பெறவிளைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 7 | | | 1 | 3 | |
| | 4 | | | 6 | | | | |
| | | 3 | | | | | 9 | |
| 6 | 3 | | | 7 | | | 5 | |
| 2 | | 1 | | | | | | |
| | 5 | | | | | | | |
| | | | 1 | | | 6 | | 7 |
| | | | 6 | 3 | | 4 | 1 | |
| | | | | | 4 | | | 3 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 5 | 9 | 1 | 2 | 3 | 4 |
| 9 | 5 | 3 | 2 | 4 | 6 | 1 | 7 | 8 |
| 4 | 1 | 2 | 3 | 8 | 7 | 6 | 5 | 9 |
| 1 | 4 | 7 | 6 | 5 | 2 | 8 | 9 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 7 | 8 | 5 | 4 | 1 |
| 8 | 9 | 5 | 4 | 1 | 3 | 7 | 2 | 6 |
| 3 | 6 | 4 | 1 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 5 | 8 | 9 | 7 | 6 | 4 | 3 | 1 | 2 |
| 7 | 2 | 1 | 8 | 3 | 9 | 4 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



"அடே.. அப்பா... உன் தொல்லைக்கு அளவேயில்லையா... ஆசையா கட்டி அழகு பார்க்கிறாய் எண்டு நினைச்சன்... ஆன நீ பேஸ்புக்ல லைக் வாங்க.. என்னை.. ஏம்...ப்... பா.. பாடாப்படுத்துற.."

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நன்மை அளிக்கும். மாணவர்கள் பாதுகாப்புக் குறைந்த இடங்களில் செல்லக் கூடாது.

**இடபம்:** அன்றாடப் பணிகளில் பொறுப்புடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**மிதுனம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த கதி விலகும். ஆதாயம் அதிகரிக்கும். பயனுள்ள பொழுது போக்கில் ஈடுபடுவீர்கள்.

**கடகம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். புதிய அணுகுமுறையால், தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறை சரி செய்வீர்கள். வருமானம் உயரும். அரசியல்வாதிகளுக்கு எதிரித் தொல்லை மறையும்.

**சிங்கம்:** சிறு செயல் கூட கடினமாக தோன்றலாம். பேச்சில் நிதானம் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். சுமாரான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**கன்னி:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட ஆதாயம் குறையும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தை கடைபிடிப்பர்.

**துலாம்:** கடந்த கால உழைப்புக்கு நற்பலன் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். இயன்ற வகையில் தானம், தர்மத்தில் ஈடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் மூலம் தேவையான உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

**தனுசு:** நட்பின் பெருமையை எண்ணி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபவிடய பேச்சு நடந்தேறும்.

**மகரம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம். நிர்வாகச் செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த வெற்றிச் செய்தி வந்து சேரும். நண்பர்களிடம் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். ஆதாய பணவரவு அதிகரிக்கும். சேமிப்பு உயரும்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகமுடன் செயற்பட்டு தொழிலில், குறிப்பிட்ட வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். மிகுதி வருமானம் வந்து சேரும். புதிதாக சொத்து வாங்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

முகாமையாளர்: ஏன் ஒபிசுக்கு லேட்டா வந்தே?
பணியாளர்: அது வந்து சார். என் பொண்டாட்டியோட சேலையைத் துவச்சுட்டு வீட்டில சமையல் வேலையை முடிச்சிட்டு. என் பொண்டாட்டிக்குக் காப்பி போட்டு கொடுத்துட்டு ரெடியாகி வர லேட்டாயிடிச்சு.
முகாமையாளர்: இப்படிச் சொல்ல உனக்கு வெக்கமா இல்லையா? நீயெல்லாம் ஆம்பிளையா?
பணியாளர்: என் நிலைமை அப்படி சார்.
முகாமையாளர்: உன் வீட்டில நீ செய்யிற வேலைய விட, நான் அதிகமாவே எங்க வீட்டில செய்யிறேன். ஆனா நான் சீக்கிரமே வேலையை முடிச்சிட்டு கரெக்ட்டா ஒபிசுக்கு வந்துட்டேன்: உன்னால வர முடியாதா?












# மனோஜ் இயக்குநராக அறிமுகமாகும் 'ஒரு கொம்பு கதை'

இயக்குநர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் 'ஒரு கொம்பு கதை' படத்தின் மூலமாக இயக்குநராக அறிமுகமாக இருக்கிறார்.

இயக்குநர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் கே.பாரதி. பாரதிராஜாவின் 'பொம்மலாட்டம்', சங்கரின் 'எந்திரன்', மணிரத்னத்தின் 'பாம்பே' உள்ளிட்ட பல படங்களில் உதவி இயக்குநராக பணியாற்றி இருக்கிறார். மேலும், பல்வேறு படங்களில் நடித்திருக்கிறார்.

பாரதிராஜாவின் 'சிகப்பு ரோஜாக்கள்' படத்தின் மறுபதிப்பின் மூலமாக இயக்குநராக அறிமுகமாக இருந்தார். தற்போது அந்தப் படத்தின் முன்பாகவே மற்றொரு படத்தை இயக்கவிருக்கிறார்.

'ஒரு கொம்பு கதை' என பெயரிடப்பட்டு இருக்கும் இந்தப் படத்தில் மஹத் நாயகனாக நடிக்கவிருக்கிறார். மற்ற நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் தேர்வு மும்முரமாக நடைபெற்று வருகிறது என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

**ஆவணி-29**

புதன்கிழமை -14.09.2016
திதி: திரயோதசி பி.இ.04.15
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.09.12
ராகுகாலம்: 12.03-01.33 வரை
சுபநேரம்:04.33-06.03 வரை
பிரதோஷ விரதம்



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 600 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 500 | 500 |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | 700 | 550 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 500 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | 300 | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | – |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 600 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 400 | 150 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 400 | – |

## நீங்கள் தினமும் சாப்பிடும் சில உணவுகள் உங்கள் மூளையின் ஆரோக்கியத்தை அழிக்கின்றன

**பேக்கரி பொருள்கள்**

தற்போது நிறைய பேர் பசியைப் போக்க பேக்கரியில் விற்கப்படும் உணவுப் பொருள்களை வாங்கிச் சாப்பிடுவார்கள். அதிலும் சாண்ட்விச், பாண், பட்டர் ஜாம் போன்றவற்றை வாங்கிச் சாப்பிட்டுப் பசியைப் போக்குவார்கள். ஆனால், இந்த உணவுகள் மூளைச் செல்களைச் சுருக்கி, மூளையினுள் உட்காயங்களை உண்டுபண்ணும்.

**பாஸ்தா**

பாஸ்தாவில் கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்புக்கள் அதிகமான அளவில் உள்ளது. இது மூளையின் குறிப்பிட்ட இயக்கத்தைக் குறைத்து, நினைவாற்றலைப் பாதிக்கும். ஆகவே, மூளை ஆரோக்கியமாக இருக்கவேண்டுமானால், தினமும் பாஸ்தா உட்கொள்வதைத் தவிர்த்திடுங்கள்.

**சோடா பானங்கள்**

சோடா பானங்களில் சர்க்கரை அதிகமாக உள்ளது. இது மூளையின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு, ஹைபோதலாமஸையும் பாதிக்கும். ஆகவே, சோடா பானங்கள் அதிகம் குடிக்கும் பழக்கம் இருந்தால், உடனே அதைத் தவிர்த்திடுங்கள்.

**பதப்படுத்தப்பட்ட உணவுகள்**

பிரெஞ்சு ப்ரைஸ், பிட்சா போன்ற ஜங்க் உணவுகளை விரும்பிச் சாப்பிடுவீர்களா? அப்படியெனில் உடனே அதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் அவை மூளை செல்களில் காயங்களை ஏற்படுத்துவதோடு, குருதி அழுத்தத்தையும் அதிகரிக்கும்.

**மது**

மது மூளையை நேரடியாகப் பாதித்து, மூளையின் பல்வேறு இயக்கத்தில் இடையூறை ஏற்படுத்தி, மூளைச் செல்களை அழிவுறச் செய்து, மன இறுக்கத்தை ஏற்படுத்தும். எனவே, மது அருந்தும் பழக்கம் இருந்தால், அதை கைவிடுங்கள்.

## சொக்லட் கேக்



**தேவையான பொருள்கள்**

கோதுமை மா - 2 கப்
சீனி - 2 கப்
முட்டை - 8
வெண்ணை - 450 கிராம்
வனிலாப் பவுடர் - 2 தேக்கரண்டி
பேக்கிங் பவுடர் - 2 தேக்கரண்டி
கருப்புச் சொக்லட் - 400 கிராம்

**செய்முறை**

முதலில் சீனியை மிக்ஸியில் போட்டு தூளாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சீனியை வெண்ணையுடன் நன்கு க்ரீம் போல வரும்வரை கலக்கவும். சொக்லட் துண்டுகளைச் சுடு நீரில் போட்டு நன்கு கூழ்போல செய்து கொள்ளுங்கள்.

ஒரு பாத்திரத்தில் முட்டைகளை உடைத்து ஊற்றி, ஒரு சிட்டிகை உப்புச் சேர்த்து நன்கு நுரை வரும் வரை அடித்துக் கலக்கவும். கலக்கிய முட்டையில், வெண்ணை, சீனிக் கலவையைக் கொட்டி நன்கு கலக்கவும்.

அதில் பேக்கிங் பவுடர், வனிலாப் பவுடர் சேர்த்து மேலும் கலக்கவும். சொக்லட் கூழை முட்டை, சர்க்கரை, வெண்ணை கலவையில் ஊற்றி தொடர்ந்து அடித்துக் கலக்கவும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக கோதுமை மாவைச் சேர்த்து நன்கு கலக்கவும்.

ஒரு வாய் அகன்ற பாத்திரத்தில் வெண்ணை தடவி அதில் இந்த மா, முட்டை கலவையைக் கொட்டவும். வேண்டுமென்றால் அதன் மீது முந்திரி அல்லது பாதாம் துருவல்களைத் தூவி அலங்கரித்துக் கொள்ளலாம்.

கேக்கை சுமார் 35 நிமிடங்கள் வேகவிடவும். கேக் வெந்தவுடன் உங்களுக்குத் தேவையான அளவுகளில் வெட்டி வைத்துக் கொள்ளவும். சொக்லட் கேக் தயார்.

## இது புதுசு



சூ சன்டில்ஸ் அறிமுகமாகியுள்ளது. கூரான குதியுடன், சூ வடிவத்தில் காலைச் சுற்றி பக்கிள் மூலம் பூட்டி அணிந்து கொள்ள முடியும். இது ஆயிரத்து 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 80 | 70 | 40 | 40 | 90 | 30 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 100 | 100 | 110 | 90 |
| மரவள்ளி | 80 | 90 | 80 | 80 | 80 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 40 | 80 | 40 | 40 | 40 | 100 | 50 |
| பாகல் | 100 | 70 | 160 | 80 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 90 | 80 | 70 | 120 | 90 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 20 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 | 40 | 80 | 120 | 35 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 | 100 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 20 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 70 | 80 | 100 | 70 | 100 | 200 | 80 |
| புடோல் | 50 | 40 | 35 | 60 | 40 | 40 | 70 | 30 |
| கோவா | 80 | 80 | 80 | 100 | 80 | 100 | 90 | 40 |
| வெண்டி | 80 | 80 | 80 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 160 | 80 | 170 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 80 | 100 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 35 | 50 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 300 | 140 | 300 | 200 | 120 | 180 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 80–100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 100 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 150–200 | 140 | 160 | 200 | 80 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொமர்ஷல் வங்கியிடமிருந்து உயர்வான புலமைப் பரிசில்கள்

வணிகம்

இலங்கை கொமர்ஷல் வங்கி மேலும் 50 பட்டப்படிப்பு மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கி அவற்றின் பெறுமதியையும் மேலும் அதிகரித்ததன் மூலம் இலங்கை இளைஞர்களின் கல்விக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவு வழங்குவது என்ற அதன் நிலைப்பாட்டை மீண்டும் உறுதி செய்துள்ளது.

2016ஆம் ஆண்டு தொடக்கம் வங்கியின் 'சரசவியட்ட நவ சவியக்' என்ற திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்களைப் பெறுபவர்கள் வருடம் தோறும் 50,000 ரூபாவைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களது பட்டப்படிப்புக் காலத்தில் வருடாவருடம் அவர்கள் பெற்றுக் கொள்ளும் இந்தப் புலமைப்பரிசில் பணம் இந்த வருடத்திலிருந்து 20,000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்துடன் இலங்கையின் முன்னணி தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கியிடமிருந்து ஒவ்வாரு மாணவனுக்கும் ஒவ்வொரு மடிக்கணினியும் வழங்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம், வங்கியின் கொழும்பு யூனியன் பிளேஸ் கிளையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து 7 பல்கலைக்கழகங்களின் பட்டதாரி மாணவர்கள் தமது புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். இந்த வருடப் பரிசளிப்புடன் கொமர்ஷல் வங்கியிடமிருந்து புலமைப்பரிசில்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களது தொகை 350 ஆக அதிகரித்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் தலைவர் தர்ம தீரசிங்க இந்த வருட புலமைப்பரிசில் வழங்கல் வைபவத்தில் உரையாற்றியபோது, அரச பல்கலைக்கழகம் ஒன்றி லிருந்து பட்டம் பெற்றுக் கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட இந்த நாட்டின் சனத் தொகையில் 6.6 சதவீதமானோரில் தாங்களும் இடம்பெற்றுள்ளமை தாங்கள் செய்த பாக்கியமே என்று இலங்கையின் பட்டதாரி மாணவர்கள் கருதவேண்டுமெனத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். கொமர்ஷல் வங்கி அதன் நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் இந்த மாணவர்களின் உயர் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதென உறுதிபூண்டுள்ளது என்றும் தீரசிங்க கூறினார். (த)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை ஓகஸ்டில் உயர்வு

ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 11.8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்து, 186,288ஆகப் பதிவாகியிருந்தது என இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் பிரகாரம், ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் வருகை தந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 16 சதவீதத்தால் அதிகரித்து 1,359,906 ஆகப் பதிவாகியுள்ளது.


சீனாவிலிருந்து பெருமளவானோர் ஓகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்திருந்ததுடன், 27,517 பேர் சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்திருந்தனர். இந்தியாவிலிருந்து 24,418 பேர் இலங்கைக்கு ஓகஸ்ட் மாதத்தில் வருகை தந்திருந்ததுடன், முதல் எட்டு மாதத்தில் மேற்கு ஐரோப்பாவிலிருந்து 445, 667 பேர் சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்துள்ளனர்.

2016இன் முதல் எட்டு மாத காலப் பகுதியில் தெற்காசியாவிலிருந்து 320,110 சுற்றுலாப்பயணிகளும், கிழக்கு ஆசியாவிலிருந்து 291, 483 பேரும் சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்திருந்தனர். (த)

# இலங்கைக்கு ஸ்மார்ட் பார்மிங் முறையை அறிமுகப்படுத்தும் சி.ஐ.சி

சி.ஐ.சி ஹோல்டிங்ஸ் பீ.எல்.சீ ஆனது இலங்கை மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு நிறுவனம் ஆகும். இது அண்மையில் விவசாய ட்ரோன் பயன்பாட்டின் மூலம் துல்லிய விவசாய நடைமுறையான – ஸ்மார்ட் பார்மிங் என அழைக்கப்படும் புதிய கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தியது.

இத்தொழில்நுட்பம் மூலம் வயல்வெளியை ஸ்கான் செய்து விவசாய இரசாயனங்கள் மற்றும் பசளையை ஆகக் குறைந்த மனித தலையீட்டுடனும் விரயத்துடனும் விநியோகம் செய்ய முடியும். ட்ரோன் மற்றும் ஜி.பி.எஸ் முறைமை மூலம் இடங்களை தன்னியக்கமாக கண்டுகொண்டு அதற்கான தயார்ப்படுத்துதலை மேற்கொள்வது உலகில் இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்தத் திட்டத்தைப் பற்றி சி.ஐ.சி ஹோல்டிங்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த ரணதுங்க கருத்து தெரிவிக்கையில் விவசாயம் மற்றும் ஆராய்ச்சிகளில் முன்னோடியாக சிஐசி திகழ்ந்துள்ளதுடன் இத் திட்டம் அதன் பிரதிபலனே ஆகும். இத்திட்டத்தின் மூலம் நாம் எதிர்ப் பார்ப்பது இலங்கையில் விவசாய இரசாயனத்தின்( பூச்சிக் கொல்லி மருந்துகளும் பசளைகளும்) தவறான பயன்பாட்டை குறைப்பதும் விவசாய இரசாயனத்தினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்தலும் ஆகும். இம்முறையின் மூலம் மேலதிகமான விவசாய இரசாயனங்களும் பசளையும் சூழலில் கலக்காமல் தடுக்கப்படுகிறது.

இலங்கையரால் நன்கு அறியப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளுக்காக பல விருதுகளை வென்றவருமான மஞ்சு குனவர்தன, சி.ஐ.சியுடன் கடந்த ஏழு வருடங்களாக இணைந்து இத்திட்டத்தில் பணியாற்று கின்றார். ஜெனிவா மற்றும் சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற புதிய கண்டுபிடிப்புகளுக்கான போட்டிகளில் 3தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார். (த)

## நாணய மாற்று விகிதம்

| | |
|---|---|
| பஹ்ரைன் (தினார்) | -386.15 |
| ஐ.இராச். (பவுண்டு) | - 193.18 |
| ஐரோப்பியா (யூரோ) | -163.65 |
| சுவிஸ் (பிராங்) | -149.49 |
| ஐ.அமெ.(டோலர்) | -145.58 |
| கனடா(டோலர்) | -111.12 |
| ஆஸி.(டோலர்) | -109.38 |
| சிங்கப்பூர் (டோலர்) | -106.38 |
| கட்டார் (ரியால்) | [illegible] |

# ஏற்றுமதி, இறக்குமதி வீழ்ச்சி

இலங்கையின் ஏற்றுமதிகள் கடந்த ஜூன் மாதம் 5 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜூன் மாதம் 897 மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஏற்றுமதிகளே இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக ஏற்றுமதி ஊடான வருமானமும் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இறக்குமதிகளும், 0.2 சதவீதம் வீழ்ச்சியடைந்து ஆயிரத்து 676 மில்லியன் டொலர்களாகப் பதிவாகி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## நுட்பம்




# அன்ரொய்ட் அலைபேசி பாவிப்பவர் நேர்மையானவர்

ஐபோன் பயன்படுத்துபவர்களை விட அன்ரொய்ட் தொடுபேசி பயன்படுத்துபவர்கள் மிகவும் பணிவுடனும், நேர்மையாளர்களாகவும் இருக்கின்றனர் என்று ஆய்வொன்றில் கூறப்படுகின்றது.

லண்டன் லிங்கன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஹெதர்ஷா என்பவரால் நடத்தப்பட்ட குறித்த ஆய்வில், தொடுபேசிப் பயனர்களுக்கு இடையில் இரு விதமாக ஆராயப்பட்டது. முதல் ஆய்வில் 240 பேரிடமும் தொடுபேசிப் பயனாளர்கள் குறித்த கேள்விகளுக்கு விடையளித்தும், இரண்டாவது ஆய்வில் 530 நபர்களிடம் குணாதிசயங்களைக் குறித்தும் ஆய்வு செய்து இருக்கின்றனர்.

பெண்கள் அன்ரொய்ட் அலைபேசியை விட ஐபோனையே பெரிதும் விரும்புகிறார்கள். தொடுபேசி என்பது, மனிதர்களின், சிறிய டிஜிட்டல் பதிப்பாக இருக்கிறது என்பதையும் ஆய்வின் முடிவில் பேராசிரியர் ஹெதர்ஷா தெரிவித்தார்.



# கண் அறுவைச்சிகிச்சை செய்தது ரோபோ!

உலக வரலாற்றில் முதல்முறையாக கண் பார்வை இழந்த ஒருவரின் கண்ணில் ரோபோ ஒன்று வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்துள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த பில் பியவர் என்பவரின் கண்ணின் விழித்திரையில் இருந்து ஒரு மில்லி மீற்றரில் நூறில் ஒரு பகுதி தடிமனான மிகவும் மெல்லிய படலத்தை குறித்த ரோபோ, வெற்றிகரமாக நீக்கியுள்ளது.

ரோபோ கையிலிருக்கும் வடிகட்டிகள், மென்மையான செயல்முறைகளை மிகவும் துல்லியமாகச் செயற்படுத்தி இந்த அறுவைச் சிகிச்சையை நிறைவேற்றியுள்ளது.

கண் அறுவைச் சிகிச்சையில் புதிய காலத்தை இந்த அறுவைச் சிகிச்சை ஏற்படுத்தியுள்ளது என்று ஒக்ஸ்போர்ட்டில் இந்த அறுவைச் சிகிச்சையைக் கண்காணித்த பேராசிரியர் ரோபர்ட் மேக்லாரென் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு...

குழுவை நியமிக்கவேண்டும்.
குறிப்பிட்ட வகை மருந்துகளின் தன்மை காரணமாக பாதிக்கப்பட்டவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். இது மருத்துவர்களின் கடமை மாத்திரமல்ல, மாறாக மருத்துவப் பின்னணியும், நிபுணத்துவமும் கொண்ட விஞ்ஞானிகளின் கடமையாகும்.
இதன் காரணமாக இது குறித்த பரிசோதனைகளை விசாரணைகளை மேற்கொள்வதற்கு பன்னாட்டுத் தரத்திலான மருத்துவ நிபுணர்களை உள்ளடக்கிய விஞ்ஞானிகள் குழுவொன்று அவசியம்.
இலங்கை அரசு அவ்வாறான குழுவொன்று இலங்கை வருவதற்கு அனுமதியளிக்கவேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் இளவயதினர். பலவகையான நோய்ப் பாதிப்புக்கு அவர்கள் உட்பட்டுள்ளனர். அவர்கள் புனர்வாழ்வில் அல்லது தடுப்பில் இருந்த காலப்பகுதியிலிருந்தே இந்தப் பாதிப்புகள் ஆரம்பமாகியுள்ளன. முன்னாள் உறுப்பினர்கள் பலர் இது குறித்து அரசியல்வாதிகள் உட்பட பல தரப்பினரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். ஆகவே, இந்த விடயத்தை இலகுவாகப் புறக்கணிக்க முடியாது.
அதேவேளை, புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் சுமார் 107 பேர் கடந்த நான்கு, ஐந்து வருடங்களில் உயிரிழந்துள்ளனர். இது இலங்கை பாதுகாப்பு அமைச்சின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை வலுப்படுத்தியுள்ளது. எனினும், இதுவரையில் இலங்கை அரசோ அல்லது அதிகாரிகளோ இது குறித்து நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்பி இருந்த பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர்.
இதன் காரணமாகப் பன்னாட்டுச் சமூகமும், ஐ. நாவும் ஊசியால் பாதிக்கப்பட்டவர்களின் கரிசனைகளைச் செவிமடுத்து, அதற்குத் தீர்வைக் காண்பது அவசியம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## போராளிகளு...

முன்வைக்கப்பட்டது. இதனையடுத்து முன்னாள் போராளிகளை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்தது.
இரண்டு கட்ட மருத்துவ ஆலோசனைகள் கடந்த 2 ஆம் திகதியும், 9 ஆம் திகதியும் நடத்தப்பட்டன.
இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை வவுனியாவில் பி.ப. 1 மணிக்கும், மன்னாரில் காலை 8 மணிக்கும், கிளிநொச்சியில் மாலை 4 மணிக்கும் மருத்துவ ஆலோசனைகள் நடைபெறவுள்ளன. இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மருத்துவ ஆலோசனைகள் நடை பெறும்.
யாழ். போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆலோசனைகள் இந்த வாரம் நடைபெற மாட்டாது. எதிர்காலத்தில் வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மேற்படி மருத்துவ ஆலோசனைகள் நடைபெறும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(வ-5)

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)


## அனைத்திலும்...

இந்த நாட்டு மக்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல. நிலநடுக்கமோ, சூறாவளியோ எந்த அழிவு வந்தாலும் ஜப்பான் ஒரு போதும் தோற்றதாக வரலாறு இல்லை. பெரிய வல்லரசு நாடுகளால் ஜப்பானது திறனுக்கு கிட்டவே நிற்க முடியவில்லை.
நம்பிக்கை என்பது ஏழாவது அறிவு. நம்பிக்கை இருந்தால் எதிர் நீச்சல்போட்டு வாழ்க்கையை வெல்லலாம் என்பதில் நம்பிக்கை உள்ளவர்கள் ஜப்பானியர். என்னால் முடியும், நான் படிப்பேன் என்ற தன்னம்பிக்கையை மனதில் விதைப்பவர்கள். ஜப்பான் நாட்டு மக்கள் பொதுவாக ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு 5 நிமிடத்திற்கு முன் நம்பிக்கை தரக்கூடிய உணர்வுகளைத் தமக்குள் ஏற்படுத்தும் பழக்கம் உள்ளவர்கள். இது அவர்களது முன்னேற்றத்தின் முதுகெலும்பாகும். 2016ஆம் ஆண்டு முதியவர்கள் அதுவும் குறிப்பாக 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 25 வீத மானவர்கள் உள்ளனர். ஜப்பானிய இளைய தலைமுறையினர் முதியவர்களைப் பராமரிக்க அவர்களின் கருத்துக்களை செவிமடுக்க அவர்களுடன் நேரம் செலவிட தயாராக இல்லை என்பதனால் முதியவர்களைப் பராமரிக்கும் ரோபோக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பொதுவாக ஜப்பானில் எந்தப்பிரச்சினைகள் எழுந்தாலும் பெரும்பாலும் தொழில்நுட்பத்தின் மூலம் தீர்வு எட்டப்படுகின்றன.
நான் கடந்த மாதம் ஜப்பானுக்குச் சென்று கற்றுக் கொண்ட விடயங்கள் பல. எமது நாட்டு மக்களும், நாடும் அவர்களிடம் இருந்து பின்பற்றக் கூடியவைகளைப் பின்பற்றினால் ஓரளவுக்கேனும் நாம் மனிதர்களாக வாழ முடியும். நாட்டுக்கான வரைவிலக்கணத்துடன் மிளிரக் கூடியதாக இருக்கும். எதையும் சும்மா பார்க்காமல் உணர்வுபூர்வமாகப் பார்த்து உள்வாங்க வேண்டும். சட்டமாயின் சட்டம் நாட்டுக்கு இயற்றப்படுவது அல்ல முக்கியம். அவை வலுவாக நடைமுறைப் படுத்துவதுதான் அவசியம் என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும். எந்த இடமாக இருந்தாலும் சுத்தமாகவும், கவர்ச்சியாகவும் இருக்க வேண்டும். உணவு உண்பதற்கல்ல வாழ்வதற்கு. பிள்ளைகளை வளர்க்காதீர்கள், வளரவிடுங்கள், இயற்கையை நேசியுங்கள், மனிதநேயத்தை வளருங்கள் இவற்றால் யாவும் சிறக்கும். இவை நான் ஜப்பானில் கற்றுக் கொண்ட பாடங்கள்

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை நவரத்தினம்

(V.S.S ஆனைமடு முன்னாள் சிவா பிறதர்ஸ் உரிமையாளர்)



பிறப்பு: 19.03.1934
இறப்பு: 11.09.2016

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினம் 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

G.G பொன்னம்பலம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(68232) (12.18)

தகவல்: குடும்பத்தினர்.

077 361 7895

## மரண அறிவித்தல்

### சின்னையா குலநாயகம் (கிளி)



வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், 16ஆம் கட்டை, உடையார்கட்டு வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா குலநாயகம் (கிளி) நேற்று (12.09.2016) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், விஜயசோதி, தர்மசோதி ஆகியோரின் அன்புக் கணவரும், விஜயரூபன் ( K.R.S வயரிங் நிலையம் - புதுக்குடியிருப்பு), குலதீசன் (முல்லைத்தீவு), ஜெகதன் (CSD- சுதந்திரபுரம்), தர்மசீலன் (இசைநிலா உதிரிகள் வாணிபம் - உடையார்கட்டு), கபிலன், நகுலன் (சமுர்த்தி வங்கி - புதுக்குடியிருப்பு), சுசிகரன், ருபேதா காலஞ்சென்ற விஜேந்திரன், குலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அனுசுகி,மதி, டாசினி, தயாளினி, அபிராமி, திலகாவதி, கஜந்தன், றேக்கா காலஞ்சென்ற சண்முகவதி, விஜயரூபினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வியூசிகன் ( பிரான்ஸ்), வர்ணா, கியூ, வர்சா, அனிஸ்ரன், அயூசன், அஜர்ணா, தருண், தர்மிகன், ஜெகாசன், வர்ச்சனா, தனுஜன், அனிஸ்கா, டினோஜன், ருபி, மதுரங்கி, கயுர்தா, கிருசாயினி, சாரு, சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுதந்திரபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார்கட்டு வடக்கு,
முல்லைத்தீவு.
(11,18)

தகவல்: குடும்பத்தினர்.

077 078 2862, 077 129 4001

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரத்தினம் சுந்தரலிங்கம்



யாழ். பண்டத்தரிப்பு, சாந்தை பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் சுந்தரலிங்கம் 11.09.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னையா - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற இ.போ.ச.பஸ் நடத்துனர்) அவர்களின் அன்பு மனைவியும், சத்தியவாணி (சுவிஸ்), விநோதினி (டென்மார்க்), மதிமாறன் (ஜேர்மனி), ஜெயதயாளினி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற, இராச லிங்கம் (இலங்கை), இராசேஸ்வரி (இலங்கை), நாகராசா (இலங்கை), பரமசாமி (ஜேர்மனி), காலஞ்சென்ற சோமசுந்தரம் (கொலண்ட்), நாகேந்திரம் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரசேகரம் (சுவிஸ்), பத்மநாதன் (டென்மார்க்), ஜெயநாதன் ஐயா (லண்டன்), துஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும், சங்கீதா, சஜிந்தா, சஜீபன், சுஜானா, சுஜானி, சூரியா, கிஷான், அபினேஷ், ஜஷ்வன் ஜெயகஜனி, ஜெனனி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு:
சந்திரசேகரம் (சுவிஸ் - 0041 3174 12992)
பத்மநாதன் (டென்மார்க் - 0045 5859 0536)
ஜெகநாத ஐயா (லண்டன் -0044 2083 174542)
மதிமாறன் (ஜேர்மனி - 0049 5414 0757826)
சுந்தரலிங்கம் (இலங்கை - 0094 2132 11804)
(ஜே. 4570) (13)

### நாகேந்திரர் வேலாயுதபிள்ளை

(மயிலப்புலம் ஐயனார் கோயிலடி)

பிறப்பு
12
.
12
.
1924



இறப்பு
09
.
09
.
2016

சரவணை கிழக்கு, 9ஆம் வட்டாரம் வேலணையைப் பிறப்பிடமாகவும், இல.266.சில்வா வீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும், தற்போது இல.24/2, மதவடிலேன் வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான நாகேந்திரர் வேலாயுதபிள்ளை 09.09.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - தெய்வானைபிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், மனோன்மணி, அருமைநாயகம், காலஞ்சென்றவர்களான லெட்சுமி, தியாகராசா மற்றும் நாகநாதபிள்ளை, காலஞ்சென்ற தாட்சாயினி மற்றும் அம்பிகாவதி, தவராசா (லண்டன்), பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை மற்றும் தவமணிதேவி, காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, ஞானம்பிகை மற்றும் மனோரஞ்சிதம், காலஞ்சென்ற பரமசுந்தரம் மற்றும் மீரா, இராசேஸ்வரி (குஞ்சு - லண்டன்), குகானந்தன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், பராசக்தி, தம்பிராசா மற்றும் ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் சம்பந்தியும், தவலட்சுமி (முத்தம்மா), யோகலட்சுமி (யோகா), மங்கையற்செல்வி ( அச்சா - லண்டன்), கிருஸ்ணகுமார் (குமார்), கௌசலாதேவி (கௌசி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரமநாதன், சுந்தரமூர்த்தி, பரமானந்தம் (பரன் - லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சிறிகரன், தியாகரன்- நிசாந்தினி, சுவிதா - சுஞ்சீபன் , ரவிகரன், பிரணவன், கார்த்திக் (லண்டன்), தர்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/2, மதவடி லேன்,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.
(J/4567) (11,17)

தகவல்: குடும்பத்தினர்.
மகன்- கிருஸ்ணகுமார் (குமார்)

077 462 7285, 077 225 0375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநேசனும்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பௌத்த மதம் சிங்களமொழி பேசும் இனத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல என்கின்ற போதிலும், இலங்கையில் உள்ள சிங்களவர்களால் பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் நிலஆக்கிரமிப்பின் சின்னமாகவும், தமிழின அழிப்புக்கு ஆதாரமாகவும் பயன்பட்டு வந்தமையே கடந்தகால கசப்பான வரலாறாகும். இருந்தபோதிலும் வடக்கே நாக விகாரை முதல் தெற்கே பொத்துவில் விகாரை வரை தமிழர்களின் பாரம்பரிய தாயகப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள அநேகமான விகாரைகள் தமிழர்களால் வழிபாட்டு இடங்களாகவும், மரியாதைக்குரிய இடங்களாகவும் மதிக்கப்பட்டு வருவதை அனைவரும் அறிவர்.

அதேநேரத்தில் அந்தந்தப் பகுதி மக்களின் விருப்பத்துக்கு மாறாக அமைக்கப்படுகின்ற விகாரைகள் கூட இலங்கை அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமையைப் பயன்படுத்தி பாதுகாப்பு, பௌத்த வளங்கள் என அனைத்து வழிகளிலும் நாளும் பொழுதும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. சில சமயங்களில் நீதித்துறை உத்தரவுகளை உதாசீனம் செய்தும் கூட, அரச படையினரின் உதவியுடன் விகாரைகள் உருவாக்கப்படுகின்றன.

கடந்த பல தசாப்தமாக, போரினைக் காரணம் காட்டி வடக்கு, கிழக்கு பிரதேசங்களின் மூலை முடுக்குகளிலும் குவிக்கப்பட்டிருந்த படையினரின் அனைத்து நிலைகளிலும் வழிபாட்டுக்காக சிறிதும் பெரிதுமாக அமைக்கப்பட்டு பின்னர், அவர்களால் முகாம்களும் சோதனைச்சாவடிகளும் கைவிடப்படுகின்ற தருணங்களில் அநாதரவாகக் காணப்படுகின்ற புத்தர் சிலைகளே இன்று பிரச்சினைகளை உருவாக்குகின்றன என்பதை பௌத்த மதத் தலைவர்களும், சிங்கள அரசியல்வாதிகளும் முதலில் உணர வேண்டும் .

அரச படையினரில் பெரும்பாலோனோர் பௌத்தர்களாக உள்ளனர். அதனால் படை முகாம்களிலும் சோதனைச் சாவடிகளிலும் வழிபாட்டுக்காக புத்தர்சிலைகள் மட்டுமே நிறுவப்படும் என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. அதே நேரத்தில் படையினர் தமது நிலைகளை விட்டு வெளியேறும் போது சகல உடைமைகளையும் மிச்சம் மீதமின்றி வழித்துத்துடைத்து எடுத்து செல்கின்ற நேரத்தில் கூட, புத்தர் சிலைகளை மட்டும் விட்டுச்செல்கின்ற கபடத்தனமா நோக்கத்தினையும், அதன் காரணங்களையும் கூட எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது .

தமிழருக்குச் சொந்தமான காணிகளில் தற்காலிகமாக வைக்கப்பட்ட சிலைகளைத் திட்டமிட்டு விட்டுச்செல்வது அந்தப்பகுதிகளை பௌத்த மயமாக்கி எதிர்காலத்தில் பௌத்த பாரம்பரிய பிரதேசங்களாக அடையாளம் காட்ட முனைகின்ற இழிவான சிங்கள மேலாதிக்க சிந்தனையைத் தவிர வேறொன்றுமில்லை. எனவே சம்பந்தப்பட்ட படை அதிகாரிகள் தாம் பலவந்தமாக கைப்பற்றி வைத்திருந்த தமிழர் காணிகளை விட்டு வெளியேறும் போது, தமது உடைமைகளுடன் வழிபாட்டுக்கு வைத்திருந்த புத்தர் சிலையையும் எடுத்துச்செல்லப்படுவதே பொருத்தமான நடைமுறையாக இருக்கும்.

அத்துமீறி நிறுவப்பட்டுள்ள புத்தர்சிலைகளை தன்னிச்சையாக அகற்றுவதற்குரிய தைரியமோ, அதனால் ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முகம் கொடுக்கக்கூடிய வலிமையோ தமிழர்களுக்கு கிடையாது. எனவே படையினர் தமது பொருள்களுடன் வழிபாட்டுக்கு பயன்படுத்தி வந்த புத்தர் சிலைகளையும் எடுத்திச்சென்று காணிகளை உரிமையாளருக்கு திருப்திகரமான முறையில் கையளிப்பதே நல்லெண்ணச் செயற்பாடாக அமைய முடியும். இல்லையெனில் குறைந்த பட்சம் சம்பந்தப்பட்ட பகுதிக்கு ரிய அரச நிர்வாக அதிகாரிகளின் உதவியுடன் அச்சிலைகள் அகற்றப்பட்டுக் காணிகள் பொது நிலங்கள் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களால் பொறுப் பேற்கப் படவேண்டும்.

இது ஒன்றே புத்தர்சிலைகளால் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வரும் முரண்பாடுகளைக்களைய ஒரே வழியாகும் . புத்தர்சிலை என்பது ஓர் ஆக்கிரமிப்பின் அடையாளமல்ல என நிறுவ நேர்மையான, உண்மையான பௌத்தர்கள் விரும்புவார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-21,102)

## கொக்கிளாய்...

உரையாற்றிய கொக்கிளாய் விகாராதிபதி தெரிவித்ததாவது:

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவை யாற்றவே வந்தேன். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் இதற்கு இடையூறு விளைவிக்கிறார்கள். தமிழ் மாணவர்களுக்கு பாட உபகரணங்களை வழங்க நான் ஏற்பாடு செய்தபோது அவர்களைத் தடுத்துவிட்டார்கள்.

கொக்கிளாய் விகாரை தொடர்பாகத் தவறான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின்றன. கட்டுமானப் பணிகளை நீதிமன்றமும் பொலிஸும் தடுத்துள்ளன எனச் செய்திகள் வந்துள் என. அப்படி எந்த ஒரு கட்டளையும் பிறப்பிக்கப்பட வில்லை. உத்தரவுகளை நான் மீறியிருந் தால் என்னைச் சிறையில் அடைத்திருப்பார்கள் - என்றார்.

எந்தவொரு விடயத்தையும் பேசித் தீர்க்க முடியும் எனவும் கொக்கிளாயில் நிலவிய கரைவலைப் பிரச்சினையைக்கூடப் பேசித் தீர்த்திருக்க முயும், நீதிமன்றம்வரை சென்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கொக்கிளாய் மக்களின் சார்பில் கருத்துத் தெரிவித்த ஜூட் நிமலன் தெரிவித்ததாவது:

கொக்கிளாய் தமிழ் மக்களின் பூர்வீகக் கிராமம். 1972 ஆம் ஆண்டின் பின்னர் பருவகாலத் தொழிலுக்காகச் சிங்களவர்கள் வந்து செல்ல ஆரம்பித்தனர். தற்போதோ கொக்கிளாய் முகத்துவாரத்தில் 510 சிங்களக் குடும்பங்கள் குடியிருக்கின்றன. இது சிங்களவரின் பூர்வீக நிலம் என்றால் இவர்கள் அனைவருக்கும் இங்கு காணிகள் இருந்திருக்கவேண்டுமல்லவா?

1984ஆம் ஆண்டு மணலாறிலிருந்த தமிழர்கள் இடம்பெயர்ந்தனர். இதன் பின்னரே முகத்துவாரத்தில் தமிழர்கள் 19 பேரின் பூர்வீகக் காணி உறுதிகள் சிங்களவர்களின் பெயர்களுக்கு மாற்றப்பட்டன. இதுவா நல்லிணக்கம்?

1971ஆம் ஆண்டு ஒரு வர்த்தமானி அறிவித்தலில் கொக்கிளாயில் 23 தமிழர்களுக்குக் கரைவலைத் தொழிலுக்கான அனுமதி வழங்கப்பட்டது. அதேநேரம் ஒரு சிங்களவர் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தனியே தமிழர் வாழும் கொக்கிளாயின் நடுவே தமிழ் மக்கள் மூவருக்கும் வைத்தியசாலைக்கும் சொந்தமானதுமான காணிகளை உள்ளடக்கி அடாத்தாக விகாரை அமைப்பதன் அவசியம் என்ன? அங்கு குடியிருப்பவர்களில் நான்கு சிங்களக் குடும்பங்கள் மட்டுமே பௌத்த மதத்தைச் சேர்ந்தவை. இந்த நான்கு குடும்பங்களுக்காக 90 கோடி ரூபா செலவில் விகாரை அமைக்கமுனைவதா நல்லிணக்கம்? – என்றார்.

"1926ஆம் ஆண்டு முகத்துவாரப் பகுதியில் உள்ள காணிகள் சிங்களவர்களுக்கே சொந்தமாக இருந்தன. அதற்கான உறுதிகள் அவர்களிடம் உண்டு. இதற்கு ஆதாரங்கள் என்னிடமிருக்கின்றன. 1982ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவினால் 62 வீடுகள் அமைக்கும் திட்டம் இந்த மக்களுக்கு வழங்கப்படிருந்தது. அதற்கும் ஆதாரங்கள் உண்டு" என்று, தனது பெயர் நவீன் செலுகே என்று அறிமுகப்படுத்திக் கொண்ட ஒருவர் தெரிவித்தார். தான் ஓர் ஊடகவியலாளரும் ஆசிரியரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழரின் உரிமைகள் வழங்கப்படாமை, தரப்படுத்தல் மூலம் அவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டமை போன்ற காரணங்களாலேயே போராட்டம் ஆரம்பமானது. இதனால் பெருமளவு இழப்புகளைச் சந்தித்தோம். தற்போதுள்ள நல்லாட்சி அரசு தமிழரின் மனங்களை வெல்லும் வகையில் உரிய உரிமைகளை வழங்க முன்வரவேண்டும்" என்று வலியுறுத்தினார் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜெயகுலராஜா.

இதன் மூலம் இரு இனங்களுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார். நிகழ்வில் அகில இலங்கை சைவக் குருக்கள் தலைவரும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பிரதம குருக்களுமாகிய சிவஸ்ரீ சிவ கந்ததாசக் குருக்கள், இலங்கை திருச்சபையின் குருவும் யாழ். பரியோவான் கல்லூரி அதிபருமாகிய என்.ஜே. ஞான. பொன்ராஜா, யாழ்ப்பாணம் நாக விகாரையின் அதிபதி சிறி விமல தேரர், கொக்கிளாய் விகாராதிபதி, முல்லைத்தீவு மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரியின் பிரதிநிதியான பிரிகேடியர் தர அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

(உ-102)

## வாழைப்பழ...

பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தரமான பெரிய கதலிப் பழம் கிடைப்பது குதிரைக் கொம்பாகியுள்ளது. தட்டுப்பாட்டை அடுத்து அனுராதபுரம், தம்புள்ள, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு தாரை தாரையாக வாழைப் பழம் இறக்குமதி செய்யப்படுகிறது.

"வன்னிப் பிராந்தியத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கதலி 150 ரூபாவுக்கும், தென்னிலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கதலி 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது" என சிறுப்பிட்டியைச் சேர்ந்த வாழைப் பழ விற்பனையாளர் த.இராசதுரை தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளே வாழைப்பழ உற்பத்தியில் அதிகம் ஈடுபடும் பகுதிகள்.

"நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் கிலோ வரையில் வாழைப் பழம் சங்கத்துக்குக் கிடைத்தது. தற்போது ஆயிரம் கிலோ மாத்திரமே கிடைக்கிறது. வெப்பம் மற்றும் காற்றுக் காரணமாக குருத்து அடைக்கின்ற நிலை இந்தப் பருவகாலத்தில் காணப்படும். இதனால் தரமான வாழைக் குலை கிடைக்காது. எனக்குத் தெரிந்த வரையில், கடந்த காலங்களில் இந்தப் பரு வத்தில் வாழைக் குலை உற்பத்தி குறைவடைந்திருந்தாலும், இந்த ஆண்டைப் போன்று கடுமையான வீழ்ச்சி ஏற்படவில்லை" என்றார் நீர்வேலி வாழைக்குலைச் சங்கத் தலைவர் சின்னையா சுந்தரலிங்கம். சங்கத்தின் தலைவராக கடந்த 12 ஆண்டுகளாகப் பதவி வகிக்கின்றார் அவர்.

"உள்ளூரில் குலைகள் இல்லை. வவுனியா, விசுவமடு, கிளிநொச்சி, தம்புள்ளை, அநுராதபுரத்திலிருந்து வாகனங்களில் வாழைக் குலைகளைக் கொண்டு வந்து தருகின்றார்கள். இங்கு இவ்வாறான மோசமான தட்டுப்பாடு ஏற்பட்டதை நான் பார்த்ததில்லை" என்று த.இராசதுரை தெரிவித்தார்.

"நாங்கள் வெளி இடங்களுக்கு வாழைக் குலை ஏற்றுமதி செய்தோம். இன்று எங்களுக்கே பழம் இல்லை. இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது" என்று நீர்வேலியில் வாழைத் தோட்டம் வைத்திருக்கும் ப.சின்னத்தம்பி விசனப்பட்டார்.


(உ-5)


IMMEDIAT VACANCY
SPECIAL VACANCY IN MNC SRILANKA (NORTHERN PROVINCE)
வடக்கில் வியாபித்துள்ள எமது நிறுவனத்தில் சிறந்த வேலைவாய்ப்பு யாழ்ப்பாணம். முல்லைத்தீவு. வவுனியா. கிளிநொச்சி. மன்னார் ஆகிய பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிக்கலாம்.
- உயர் சம்பளம்
- நிரந்தர வேலைவாய்ப்பு
- தகைமை :-(O/L,A/L)இம்முறை A/L எழுதியவர்களுக்கு முக்கியத்துவம்
- அனுபவம் அவசியமில்லை.
077 664 4442, 077 556 6226





கண்ணீர் அஞ்சலி
எமது மத்தியஸ்தர் சபையின் உப தவிசாளர்
திருமதி பவானி விக்கினேஸ்வரராஜா
அவர்களின் பாசமிகு தந்தையார்
வைரமுத்து அருணகிரி
அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.
தவிசாளர், உறுப்பினர்கள் , பணியாளர்கள்
கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை,
புத்தூர் ஆரம்பப் பாடசாலை.
(சி.26163) (13.18)


கண்ணீர் அஞ்சலி
10.09.2016 சனிக்கிழமை
சிவபதமடைந்த எனது உயிர் நண்பன்
வேலாயுதம் முருகமூர்த்தி
(லோனா றெடிமேட் உரிமையாளர் Colombo -11)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
நண்பன் - S.S. பான்சி உரிமையாளர்.
(6ை/4558)(11,17,18)



தேவை
அரைக்கும் ஆலைவேலையில் அனுபவம் உள்ளவர், பழகவிரும்புபவர் மேலும் பொதியிடல் உதவியாளர், பில் கிளாக் என்பவற்றுக்கு பெண்கள் தேவை. தொடர்பு - 077 1746101



After A\L
COMPUTER COURSES
Diploma in Computerized Accounting
Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in Video Editing
Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in Web Designing & Development
Advanced Diploma in Hardware & Networking
DMI COMPUTER EDUCATION
Java,C,C++
V.B.NET, PHP
விசேட கட்டணச்சலுகையில் கணினிக்கற்கை நெறிகள்
தகவல் தொழில்நுட்ப கல்விக்கு முழுமையான கற்கை நெறி
DiTEC
Diploma in Information Technology
சிறந்த வேலை வாய்ப்புக்கும் உள்நாட்டு/ வெளிநாட்டு உயர் கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15/9/2016 (Thu) - 9.30 am.
19/9/2015 (Mon)- 9.30 am.
யாழில் முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
No.113, ... யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K.K.S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655



தேவை
1) நெல் கொள்வனவு செய்யப்படும்
2) மில் உபகரணங்கள் தேவை
3) மில்லில் வேலை செய்ய விரும்புவோர் தேவை.
மாப்பியன் மில்
சுதுமலை மானிப்பாய். 077 7722215



தேவை
வயோதிப பெண்ணொருவரை வீட்டில் தங்கி நின்று பராமரிப்பதற்கு ப்ணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 4516793



மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம், 45 வயதுடைய , வங்கியாளர், விவாகரத்துப் பெற்றவர். இவருக்கு தகுந்த மண மகளை மைத்துனர் ...றார். படம், குறிப்பு ...டன் தொடர்பு கொள்ளவும்.
baravinthan@yahoo.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொண்டமானாறு களப்பை ஊடறுத்துத் தற்காலிக வீதி

## அனுமதியின்றி அமைக்கப்படுகிறது எனக் குற்றச்சாட்டு

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு குடாக்கடல் நன்னீர் ஏரித் தடுப்பு அணைக்கு சமாந்தரமாகக் களப்புக்குக் குறுக்காக அமைக்கப்படும் தற்காலிக வீதி இந்தவருடமும் அமைக்கப்படுகிறது. வலி.கிழக்குப்பிரதேசசபை மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை ஆகியவற்றின் அனுசரணை அனுமதி இன்றி தனிப்பட்ட குழு இந்த தற்காலிக வீதியை அமைக்கின்றது.

செல்வச்சந்நிதி ஆலய உற்சவ ஏற்பாடுகள் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் களப்புக்கு குறுக்கான தற் காலிக வீதியை இந்தவருடம் அமைப்பது இல்லை என்றும் வலிகாமம் பகுதியில் இருந்து ஆலயத்துக்குவரும் பொதுமக் களுக்கு பொருத்தமான மாற்று ஏற்பாடுகள் வசதியை செய்து கொடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் மற்றும் வல்வெட்டித்துறை நகர சபை நிர்வாகிகள் ஆலய நிர் வாகிகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

தற்போது தொண்டமானாறு குடாக் கடல் நீரேரிக்கு தெற்குப்பக்க மாக தற்காலிக வீதி அமைக்கப்படுகின்றது. இந்தப் பிரதேசம் வலி. கிழக்குப் பிரதேச ஆள்புல எல்லைப் பரப்புக்கு உட்பட்ட பிர தேசமாகும். வலி.கிழக்குப் பிரதேச சபையின் அனுமதியோ வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக் களத்தின் அனுமதியோ பெறாத நிலையில் வீதி அமைக்கப்படு கின்றது என்று கூறப்படுகின்றது. (ற-11)

# மருத்துவபீட மாணவன் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 13

கொழும்பு - நொரிஸ் கெனல் வீதியிலுள்ள மருத்துவபீட மாணவர்களுக்கான விடுதியில் இருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்ட மாணவனின் அருகில் இருந்து 10 பக்கங்களிலான கடிதம் ஒன்று கண்டெடுக்கப் பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடிதம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. பிபிலை பிரதேசத்தைச் சேர்ந்த ஹரிந்த செனவிரத்ன (வயது-27 ) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டான்.

கடிதத்தில் தான் வாழ்க்கையில் மிகவும் விரக்தியை எதிர்நோக்கியுள்ளதாகவும், தனது சடலத்தை தனது பெற்றோருக்கு மாத்திரம் காண்பிக்குமாறும், பின்னர் சடலத்தை கடலில் வீசுமாறும் எழுதப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டது. இந்த மாணவன் இரு தடவைகள் வைத்திய பட்டத்துக்கான பரீட்சைகளுக்கு முகம் கொடுத்த போதிலும், அதில் சித்தியடைய முடியவில்லை எனக் கூறப்படுகிறது.

அந்த விடுதியில் ஒரு அறையில் இரண்டு மாணவர்கள் வீதம் தங்கியிருந்த நிலையில், குறித்த மாணவன் உயிரிழந்த அறையில் அவன் மட்டுமே தங்கியிருந்ததாகவும், அறையில் துர்நாற்றம் வீசியதை அடுத்தே அந்த அறை திறக்கப்பட்டது எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த மாணவன் நோய் நிலைமை காரணமாக தொடர்ந்து மருத்துவ சிகிச்சைகள் பெற்று வந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். மாணவனின் சடலத்துக்கு அருகில் சேலைன் போத்தல் ஒன்றும், ஊசிகளும் மீட்கப்பட்டதாக கறுவாத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(வ-4)

# ஆசிரியரின் வீட்டின் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், செப். 13

உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியரின் வீட்டின் மீது இனந் தெரியாத நபர்களினால் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாகயாழ்ப் பாணப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள ஆசிரியரது வீட்டின் மீதே நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தாக்குதல் இடம் பெற்றதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

வீட்டின் கூரை மற்றும் யன்னல் கண்ணாடிகள் உள்ளிட்ட பலபொருள்கள் சேதடைந்துள்ளன. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-4,106)

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் குறித்தும், அதற்கு ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளனர். நேற்று மாலை இரணைமடுவுக்கு வருகை தந்த முதலமைச்சர் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திப் பணிகள் குறித்தும் அதற்குத் தற்போது ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளினால் வழங்கப் பட்ட விளக்கங்களை கேட்டறிந்துகொண்ட பின்னர் நேரடியாகக் குளத்துக்கு வருகைதந்து நிலைமைகளையும் நேரில் பார்வையிட்டார்.

கிளிநொச்சியின் முத்து என வர்ணிக்கப்படும் இரணைமடுக் குளத்தின் சீரமைப்புப் பணிகளுக்காக 2016ஆம் ஆண்டு சிறுபோகம் நிறுத்தப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இருப்பினும் அதற்கான முக்கிய மூலப் பொருளான கிரவல் மண்ணைப் பெறுவதினில் கொழும்பு அரசின் திணைக்களங்கள் மூன்று, ஆரம்பத்தில் இருந்தே தடையாக செயற்பட்டன. இதனாலேயே பணிகள் இவ்வாறு மந்த நிலயில் இடம்பெற்றது. இது தொடர்பாகவே சகலரின் உதவியை நாடியபோதும், தற்போது ஓர் அரைகுறை அனுமதி கிடைக்கப்பட்டதன் பெயரில் முன்னர் மண் அகழ்ந்த இடத்துக்குப் பதிலாக புதிய இடத்தில் அகழப்படுகின்றது.

இவ்வாறு புதிய இடத்தில் அகழப்படும் மண் போதிய தரமின்றிக் கானப்படுவதனால் குளக்கட்டின் பாதுகாப்புத் தொடர்பில் ஐயம் எழுகின்றது. இவற்றுக்கும் மேலாக குளத்தின் அணைக்கட்டின் மொத்த நீளம் 3 ஆயிரத்து 200 மீற்றர். இதற்கான சீரமைப்பு பணிகளுக்கு குறித்த திணைக்களங்கள் ஒத்துழைப்பு நல்கி இருக்குமானால், கடந்த 5 மாதப் பணியில் முழுமை செய்திருக்க முடியும். ஆனால் இவர்களின் தடைகள் காரணமாக வெறும் 750 மீற்றர் மட்டுமே சீரமைக்கப்பட்டுள்ளது. மிகுதி 2500 மீற்றரின் நிலையென்ன?.

இவ்வாறு காலம் தாழ்த்துவதன் மூலம் 2017ஆம் ஆண்டின் சிறுபோகமும் தடைப்படுமா என்ற அச்சம் உள்ளது என விவசாயிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இதில் விவசாயிகளினால் எழுப்பப்பட்ட அடுத்த ஆண்டும் சிறுபோகம் தடைப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த திணைக்கள அதிகாரிகள், மண் அகழ்வு அனுமதி தடைப்படாது என உறுதி செய்தால் நிச்சயமாக பணியை நிறைவு செய்ய முடியும் எனத் தெரிவித்தனர். அத்தோடு அடுத்த ஆண்டும் விவசாயம் தடைப்பட்டால், விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவேண்டும் என மக்கள் பிரதிநிதியால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இதன்போது இவற்றுக்குப் பதிலளித்த வடக்கு முதலமைச்சர், அடுத்த வருடமும் தடைப்படுமானால் அழிவின் போது வழங்கப்படும் நிவாரணம் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறான விடயங்களை உடனடியாக எனது கவனத்துக்கோ அல்லது எனது செயலாளரின் கவனத்துக்கோ கொண்டுவாருங்கள். நீங்கள் எங்களை வருத்தினாலும் பரவாயில்லை பிரச்சினைகளை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் அதனை உரியவர்களின் கவனத்துக்குக் கொண்டு சென்று தாமதமின்றி நடவடிக்கைகளை எடுப்போம் -என்றார்.

இவ்வாறு பணி தடைப்படுவதாக கடந்த ஜூலை மாதம் 1 ஆம் திக்தி வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு எழுத்தில் கடிதம் அனுப்பப்பட்டது. அத்தோடு எமக்கு எந்த விதமான நிவாரணமும் வேண்டாம், குளத்தின் பணிகளை நிறைவு செய்து வழங்குவதே முக்கியம் என்று பதிலளித்த விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பானது இரணைமடுக் குளத்தின் அருகில் உள்ள அலுவலக கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் , கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர்கள். வடக்கு மாகாண அமைச்சர்களான த.குருகுலராஜா , பொ. ஐங்கரநேசன், உறுப்பினர்களான , அரியரட்ணம், தவநாதன் , சிவாஜிலிங்கம் , வடக்கு மாகாண எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா ஆகியோருடன் விவசாயிகள் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (வ-21,101,35)

## தமிழினத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இரதோற்சவம் நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது. பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் இரதோற்சவம் நடந்தேறியது.

துர்க்கை அம்மன் உள்வீதி வலம் வந்து, தேரில் ஏற்றப்பட்ட பின்னர் அடியவர்களுக்கான கருத்தாடலை, ஒலிபெருக்கியில் ஆறுதிருமுருகன் நிகழ்த்தும் போதே, மேற்கண்டவாறு ஆராதித்து தேரினை இழுக்குமாறு வேண்டிக் கொண்டார்.

நாடு அமைதி பெற வேண்டும். எமது இனம் சகல உரிமைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும். சிறைகளில் வாடுகின்ற அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்க வேண்டும். நாம் நிம்மதியாக மகிழ்ச்சியாக இந்தத் தேசத்தில் வாழ வேண்டும். எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட துன்பங்கள் நீங்க வேண்டும். அழுத கண்ணீரோடு இருக்கின்றவர்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டும். இந்த நாட்டில் விடிவு கிடைப்பதற்கும், எமது இனம் நிம்மதியாக வாழ்வதற்கும் அமைதி உண்டாவதற்கும் துர்க்கா தேவியை வேண்டுங்கள். இவற்றையெல்லாம் மனதில் இருத்தி, துர்க்கை அம்மனை வேண்டி தேரினை இழுக்கவும் - என அடியவர்களிடம் கேட்டுக்கொண்டார் ஆறு திருமுருகன். (வ-5)

## கர்நாடகாவில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளூர் நகரில் 15 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக அம் மாநில உள்துறை அமைச்சர் பரமேஸ்வரா செய்தியாளர்களுக்கு தெரிவித்ததாவது: உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமைதியான முறையில் கர்நாடக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பால் கர்நாடகாவுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. மைசூரு, மாண்டியா, ராமநகர், சித்ரதுர்கா ஆகிய பகுதிகளில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கர்நாடகா நிலைமையை கட்டுக்குள் வைக்க பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கர்நாடகாவின் பொதுசொத்துக்களுக்கும், பொதுமக்களுக்கும் எந்தச் சேதத்தையும் ஏற்படுத்த வேண்டாம் -என்றார்.

முன்னதாக கர்நாடக அமைச்சரவையின் அவசரக்கூட்டம் முதல்வர் சித்தராமையா தலைமையில் நேற்று மாலை கூடியது, அப்போது சட்டம் ஒழுங்கு குறித்தும் வன்முறையைக் கட்டுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடந்தது.

தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட்டதாக கர்நாடகா முதல்வர் சித்தராமையாவின் மைசூரில் உள்ள வீட்டை வன்முறையாளர்கள் கல்வீசித் தாக்குதல் நடத்தினர். இதனால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

**துப்பாக்கி சூடு: ஒருவர் சாவு**

பெங்களூரில் வன்முறையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கி சூடு சம்பவம் நடந்தது. இதில் கலவரத்தில் ஈடு பட்டஒருவர் உயிரிழந்தார். மேலும் 7 பேர் காயமடைந்தனர். பெங்களூரில் நடந்து வரும் வன்முறையைக் கட்டுப்படுத்த அம் மாநில பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதேவேளை, தமிழகத்திலும் கர்நாடகாவுக்கு எதிராக போராட்டம் வெடித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ் அமைப்பை சேர்ந்தவர்கள், சித்தராமையாவின் உருவ பொம்மையை எரித்து போராட்டம் நடத்தினர். அப்போது, கர்நாடகாவில் தமிழர்கள் தாக்கப்படுவதையும் கண்டித்தும் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என குரல் எழுப்பினர். (வ)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நல்லதம்பி



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் இராஜவீதி.சேரன்கலட்டி பால்பண்ணை றோட்டை வசிப்பிடமாகவும் கோண்டாவில் டிப்போவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி நல்லதம்பி நேற்று (12.09.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி. சின்னமணி. யோகம்மா மற்றும் புஸ்பநாயகி (சுவிஸ்). சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விக்கினேஸ்வரன். கோணேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் கிருஷ்ணகுமாரி. வேலழகன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசன். யானகி. விதுசன். காரிக்கன. தரணிகா. தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2016) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் டிப்போ.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி!

ரியோ பரா ஒலிம்பிக் தொடரில் உயரம் பாய்தலில் தமிழக வீரர் மாரியப்பன் தங்க வேலு தங்கப்பதக்கம் வென்றமைக்கு மகிழ்ச்சி தெரிவித்த நடிகர் ரஜினிகாந்த் அவருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மாரியப்பனின் இந்த வெற்றிக்கு இந்தியாவெங்கிலும் இருந்து வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன. பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, திரையுலக நட்சத்திரங்களான அமிதாப் பச்சன், அபிசேக் பச்சன், சூர்யா, விஜய் உள்ளிட்ட பலரும் வாழ்த்துத் தெரிவித்திருந்தனர்.


இந்த நிலையில் நடிகர் ரஜினி நேற்று தனது டுவிட்டர் பக்கத்தில் மாரியப்பனுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். (ம)



## டோனியின் படத்துக்காக 40 கோடி வழங்கவில்லை

டோனியின் வாழ்க்கையை வைத்து எடுக்கப்பட்ட படத்துக்காக அவருக்கு 40 கோடிகள் கொடுக்கப்பட்டதாக வெளியான செய்தியை பாண்டே மறுத்தார்.

டோனியின் வாழ்க்கையை மையமாக வைத்து எடுக்கப்பட்ட 'எம்.எஸ்.டோனி சொல்லப்படாத கதை' படத்தின் உரிமத்தை வழங்குவதற்காக டோனி, 40 கோடி வரை வாங்கியதாக தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் இந்தப் படத்தை இயக்கும் நீரஜ் பாண்டே, குறித்த தகவல்களை மறுத்துள்ளார். வெறும் உரிமத்துக்காக ஒருவருக்கு 40 கோடி வழங்கு வதில் எந்த நியாயமும் இல்லை. டோனிக்கும் அவ்வாறு வழங்கப்படவில்லை என நீரஜ் பாண்டே மேலும் தெரிவித்தார். (ம)




## இந்து இளைஞர் சம்பியன்

இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய கழகங்களுக்கு இடையிலான ஜனாதிபதி கிண்ணத்துக்கான திறந்த பிரிவு கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியனானது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108-23)




இந்திய அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ள கம்பீரை மீண்டும் அணிக்குத் தெரிவுசெய்ய வேண்டும் என்று இந்தியாவின் உள்ளூர் தொடரைப் பார்க்க வந்திருந்த ரசிகர்கள் ஆதரவு தெரிவித்தனர். (ம)

# ஜோகோவிக்கை தோற்கடித்து கிண்ணம் வென்றார் வாவ்ரிங்கா



அமெரிக்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் ஜோகோவிக்கை வீழ்த்தி கிண்ணம் வென்றார் வாவ்ரிங்கா.

நடப்பு வருடத்தின் கடைசி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான அமெரிக்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்றது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்த சேர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து வாவ்ரிங்கா மோதினார். ஆட்டத்தின் முதல் செற்றில் ஜோகோவிக்குக் கடும் நெருக்கடி கொடுத்தார் வாவ்ரிங்கா. இருப்பினும் அந்த செற்றை அவர் 6:7 என்ற புள்ளி களின் அடிப்படையில் போராடி இழந்தார்.

இரண்டாவது செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி ஜோகோவிக்கை ஆட்டம்காண வைத்த வாவ்ரிங்கா மூன்றாம், நான்காம் செற்களையும் முறையே 7:5, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அமெரிக்க மகுடத்தை தனதாக்கினார். (ம)

## மாவட்டச் செயலர் கிண்ணம் இறுதிப் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், செப்.13

யாழ். மாவட்டச் செயலக நலன் புரிக் கழகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டிகளின் இறுதிப்போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடர், ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர், இருபாலாருக்குமான கயிறிழுத்தல் ஆகிய போட்டிகளின் இறுதிப்போட்டிகளே இவ்வாறு நடைபெறவுள்ளன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மைதானத்திலேயே இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதவுள்ளது. ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதவுள்ளது. ஆண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியின் இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ். மாவட்ச்செயலகஅணிமோதவுள்ளது. பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியின் இறுதிப் போட்டியில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி மோதவுள்ளது. இவற்றைத்தொடர்ந்துபாரம்பரியவிளையாட்டுக்களும் இம்பெறும்.

பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ். மாவட்ட செயலர்நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)



பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கால்பந்தாட்டத்தில வெண்கலப் பதக்கம் வென்ற மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணியினர் ஊர் மக்களால் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளவாலை மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 13
இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனம் ஜனாதிபதி கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 22 வயதுப் பிரிவில் இளவாலை மத்தி சம்பியனானது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இளவாலை மத்திய அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றிய இளவாலை மத்தி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 13

**நெடியகாடு வி.க. தொடர்**
வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரா அணியும், மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண் டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி அணியும் மோதவுள்ளன.

**இருதயராஜா வி.க. தொடர்**
மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணியும், மாலை 4.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணியும் மோதவுள்ளன.

**கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தொடர்**
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் தொடரின் ஆட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. (ம-108-23)



# டயமன்ஸ் சம்பியன் வீழ்ந்தது ஆதிசக்தி

கரணவாய், செப். 13
கரவை நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்திய 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி சம்பியனானது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நவசக்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த ஆட்டம் நடைபெற்றது. வல்வை ஆதிசக்தியும், வதிரி டயமன்ஸும் பலப்பரீட்சை நடத்தின. கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதி ஆரம்பித்த சில நிமிடங்களில் மதியழகனின் உதவியுடன் அடுத்தடுத்து இரு கோல்களைப் பதிவு செய்தது டயமன்ஸ். ரகு, தனது பங்குக்கு ஓர் கோலைப் பதிவுசெய்ய, டயமன்ஸின் கோல் கணக்கு 3 ஆக உயர்ந்தது. 18 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் முதல் கோல் பதிவானது. ஆனால் அதற்கும் பதிலடி கொடுத்தார் டயமன்ஸின் அனுரகாந்தன். முடிவில் 4:1 என்ற கோல் க்ணக்கில் டயமன்ஸ் வெற்றிபெற்றுச் சம்பியனானது. ஆட்ட நாயகனாக டயமன்ஸின் மதி, சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் உதயகுமார், சிறந்த பின்கள வீரராக ஆதிசக்தி அணி யின் செல்வம் ஆகியோர் தெரிவாகினர். (ம-108-422)

## கலைமதி முன்னேற்றம்

கரணவாய், செப். 13
வல்வை நெடியகாடு இளைஞர் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சுப்பர் ராங் அணியை வீழ்த்தி முன்னேற்றம் கண்டது நவிண்டில் கலைமதி அணி.

நெடியகாடு இளைஞர் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. முல்லைத்தீவு சுப்பர் ராங் விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலை மதி விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி பதின்ம நிமிடங்களை எட்டுவதற்குள் இரு வாய்ப்புக்களைக் கோட்டை விட்டது. சுப்பர் ராங். 12 ஆவது நிமிடத்தில் சக்தி, கலைமதியின் முதல் கோலைப் பதிவுசெய்தார்.

17 ஆவது நிமிடத்தில் சக்தி தனது அணியின் இரண்டாவது கோலையும் பதிவு செய்தார். 2:0 என்ற கலைமதியின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 6 ஆவது நிமிடத்தில் டெனிஸ், சுப்பர் ராங்கின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த நிமிடத்தில் சக்தி தனதும், அணியினதும் மூன்றாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது கலைமதி. (ம-108)

## சமபோச கிண்ணத் தொடர்
## ஹென்றிஸில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனமும் இலங்கை பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவுக்கு உட்பட்ட தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில், யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் அனைத்தும் சென். ஹென்றிஸ் கல்லூரியின் மைதானத்திலேயே நடைபெறும். ஆண்கள் பிரிவில் 12 அணிகளும், பெண்கள் பிரிவில் 2 அணிகளும் பங்கேற்கின்றன. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் இரு அணிகள் தேசியத்துக்காக தெரிவுசெய்யப்படும். (ம-23-108)



## இளைஞர் வி.க. துடுப்பாட்டம்; ஏ.பி. அணி இறுதிக்குத் தகுதி

கரணவாய், செப். 13
கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் ஏ.பி. அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் ஏ.பி. விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பொற்பதி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஏ.பி. அணி உத்தமனின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக உத்தமன் 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் சுபாஸ் மற்றும் அஜந்தன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

84 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு களமிறங்கிய கொக்குவில் பொற்பதி அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துப் பரிமாற்றங்களில் 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதையடுத்து 29 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது கொக்குவில் ஏ.பி. அணி. (ம-108)



தேசியமட்ட கபடியில் வெண்கலம் வென்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியினர் கல்லூரிச் சமூகத்தினரால் நேற்று கௌரவிக்கப்பட்டனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 13
இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். பல்கலைக் கழக அணி சம்பியனானது.
வயம்ப பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். பல்கலையை எதிர்த்து சிறி ஜெயவர்த்தன பல்கலைக் கழகம் மோதியது. ஆட்டத்தின் 18 ஆவது நிமிடத்தில் கிடைத்த மூலைஉதையை கோலாக மாற்றினார் பத்ம நிதர்சன். வேறெந்த மாற்றங்களும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. யாழ்ப்பாணப் பல்கலையின் ஏக ஆதிக்கத்தடன் இரண்டாம் பாதியும் உருண்டோடியது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது யாழ். பல்கலை. (ம-23-422)







# கட்டையடம்பன் றோ.க.த.க.
# கபடியில் தேசியச் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 13
பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி சம்பியன்கிண்ணத்தைச் சுவீகரித்தது. மாத்தறை உயன்வத்தை கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. மன்னார் கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலை அணியை எதிர்த்து கேகாலை சென். மேரிஸ் கல்லூரிஅணி மோதியது. முதல் பாதியில் தனித்து ஆதிக்கம் செலுத்திய மன்னார் கட்டையடம்பன் றோ.க.த.க. பாடசாலை 24:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியிலும் அந்த அணி தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி முடிவில் 49;24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தேசியமட்ட சம்பியனானது. குறித்த பாடசாலையின் 78 ஆண்டுகால வரலாற்றில் தேசியமட்டத்தில் தங்கம் கிடைப்பது இதுவேமுதல்தடவை. (ம-422)

# நியூசிக்கு எதிரான இந்திய அணி அறிவிப்பு




நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கம்பீர் மீண்டும் இணைக்கப்படுவார் என்ற கருத்துக் கணிப்பு இருந்த போதிலும் அவர் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டார்.
இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ள நியூசிலாந்து அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.
இந்திய அணியின் விவரம்: கோக்லி (தலைவர்), ரகானே, அஸ்வின், லோகேஸ் ராகுல், தவான், முரளி விஜய், புஜாரா, ரோகித் சர்மா, சகா, ஜடேயா, மிஸ்ரா, புவனேஸ்குமார், சமி, யாதேவ், இசாந்சர்மா. (ம)

# இங்கிலாந்தின் உலக சாதனை
## கெட்ட கனவென்கிறார் ரியாஸ்



இங்கிலாந்து அணி தமக்கு எதிராக உலக சாதனை படைத்ததை ஓர் கெட்ட கனவு என்று தெரிவித்தார் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ரியாஸ். இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள்தொடர் அண்மையில் நடைபெற்றது. மூன்றாவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 444 ஓட்டங்களைக் குவித்தது. ஒருநாள் ஆட்டங்களின் வரலாற்றில் இதுவே உலக சாதனை ஓட்டங்களாகும். 2006ஆம் ஆண்டு இலங்கை படைத்த சாதனையையே இங்கிலாந்து முறியடித்தது. இந்த நிலையிலேயே ரியாஸ் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஆட்டம் மோசமாக அமைந்தது. 10 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 110 ஓட்டங்களைக் கொடுத்தேன். ஓர் இலக்கையேனும் என்னால் வீழ்த்த முடியவில்லை. இந்த ஆட்டம் என்னை மிகவும் பாதித்தது. நான்கு நாள்கள் தூக்கத்தைத் தொலைத்தேன். இது ஓர் கெட்ட கனவு என ரியாஸ் மேலும் தெரிவித்தார். (ம)

உடனடி வேலைவாய்ப்பு
உலகளாவிய ரீதியில் விஸ்தரித்துள்ள எமது Dm International நிறுவனமானது தனது புதிய கிளைகளை யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப் படவுள்ளதால் அதற்கு தேவையான அலுவலக ரீதியான பதவி-வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.
தகைமை
O/L, A/L படித்தவர்கள்
இவ் வருடம் A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு:
077 0771377, 077 2986763

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர்கள், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 17.09.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் (திங்கள், புதன்) பிரிவுகள்
காலை 10.00-12.00 மாலை 04.30-06.00
அனைவரும் 17.09.2016 அன்று ஆரம்பவகுப்பிற்கு சமூகமளிக்கமுடியும்.
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

NEW SCIENCE WORLD
VICTORY MUST
NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web - www.physicsocean.com E-mail : info@physicsocean.com
G.C.E (A/L) 2017 To Inquire : 077 336 4055
Day Classes
திங்கள் - வெள்ளி
உயிரியல் — காலை 7.00 - 9.00 — திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர்
இணை.கணிதம் — காலை 7.00 - 9.00 — திரு. S.S. செந்தில்நாஜ்
பௌதிகவியல் — Batch I - காலை 9.30 - 11.30, Batch II - மு.ப. 11.30 - 1.30 — திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் — மு.ப. 11.30 - 1.30 — திரு. K.T. சிவகுமார், திரு. டயஸ்
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.